ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௰. ஸ்ரீமுக௵ மாசி-பங்குனி௴ பகுதி ௭, ௮

Vol. 10. February, March & April '34. **No. 7, 8.**

கலியன் விஷயமாகிய

மணவாளமாமுனிகளின் ஈடுபாடு.

மணவாளமாமுனிகள் திவ்யதேச யாத்திரை எழுந்தருளிய போது திருவாலியில் திருமங்கைமன்னனது திவ்யமங்களவிக்ரஹத்தைச் சேவித்து மனமார வாயார வாழ்த்தி ஒரு பாசுரம் அருளிச் செய்துள்ளார். அப்பாசுரத்தில் திருமங்கைமன்னனுடைய திவ்யசரித்திரமும், அவர்விஷயத்தில் வரவரமுனிவரரின் ஈடுபாடும், இழுமென்னோசையோடு விழுமியபொருளும் கெழுமியிருக்கின்றன. மேலும் இப்பாசுரத்தில் ஒன்பான் சுவைகளும் குறிப்புப்பொருளும் நிறைந்துள்ளன. இவையன்றியும் கேட்டமாத்திரத்தில் இது அன்பரது உள்ளத்தை உருகச்செய்யும் பெற்றியது. "பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே, அவனிமுழுதாள்கின்ற, செங்கோலச்செல்வ"னாகிய திருவரங்கத்துறை அப்பனும் வரவரமுனிகளின விசதவாக்விசேஷத்தைக்கேட்டு ஆசார்யனாகக்கொண்டாடினர் என்பதை வலியுறுத்துதற்கும் இப்பாசுரம் ஒன்றே போதிய சான்றாக அமைந்துளது. இந்தகைய அமைதியுடன் ஏனையோர்களாற் பாடுதல் அரிதெனவிசைப்பதும் மிகையாகாது. இதன் பாசுரத்திற்கு விரிவுரை கண்டெழுதுவதும் திவாகரத்திற்கோர் புகரின் விளக்குமன்றே! அப்பாசுரம் வருமாறு:—

"உறைகழித்த வாளையொத்த விழிமடந்தை மாதர்மேல்
உருகவைத்த மனமொழித் தலகளந்த நம்பிமேல்
குறையைவைத்து மடலெடுத்த குறையலாளி திருமணங்
கொல்லைதன்னில் வழிபறித்த குற்றமற்ற செங்கையான்,
மறையுரைத்த மந்திரத்தை மாலுரைக்க வவன்முனே
மடியொதுக்கி மனமடக்கி வாய்புதைத்து வொன்னலார்
கறைகுளித்த வேலணைத்து நின்றவிந்த நிலைமையென்
கண்ணைவிட் டகன்றிடாது கலியனாணை யாணையே"

விஷயாந்தரத்தில் மண்டித்திரிந்த நிலைமையினீங்கி, எம்பெருமானை வழிப்பறிபறித்து அவனருளால் அவன்பால் மந்திரோபதேசம் பெறும்போது தாழ்மைதோன்ற நின்ற திருமங்கைமன்னனுடைய திவ்வியமங்களவிக்கிரகத்தின்னிலை என்னிருகண்களைவிட்டு ஒருபோதும் அகன்றிடாது. இதற்குக் கலியனை ஆணையாகுமென்று ஆணையிடுகிறார்.

இனி இதற்கு விரிவுரை வருமாறு:—

உறைகழித்த வாளையொத்தவிழி—உறையினின்று நீங்கிய வாள் (கத்தி) பகைவர்களை வருத்துவதுபோல ஆடவர்களை வருத்துகின்ற கண். ஆடவர்களைத் தப்பாது வருத்துகின்றகண்ணுக்கு உறைகழித்தவாளை தக்க உவமையாதலால் வாளிற்கு, உறைகழிதத என்ற விசேடணமிட்டார். உறைகழித்த வாள் என்பது செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினை. இங்குத்தப்பாது வருத்தும் காரணத்தைக் குறிப்பிட்டார். இனி, அக்கரணத்தை உடையாரைக் குறிப்பிடுகிறார் மடந்தைமாதரென்று. மடந்தைமாதர்—மடந்தைப் பருவமுடைய மாதர். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்று பெண்கட்கு எழுவகைப் பருவங்குறிப்பிடப் பெற்றுள்ளன. இவற்றுள் முதற்பருவம் அனுபவயோக்கியமில்லாத பருவம். இறுதிப் பருவம் அவ்வளவு இன்பந் தரும் பெற்றியதில்லை. இடைநின்ற பத்தொன்பதாண்டுள்ள மடந்தைப பருவமே இனபநுகர்ச்சியிற் கைதேர்ந்த பருவமாதலால் மாதரை மடந்தை யென்பதால் விசேடித்தார். இதனால் தப்பாது வருத்தும காரணத்தையுடையாராய் இருத்தலோடு தப்பாது வருத்தும்

பருவத்தையும் உடையவரென்பது குறிப்பிடலாயிற்று. வாயினால் மொழிவதுபோல உள்ளத்தின் நிகழ்ச்சியைக் கண்களாற் குறிப்பிடு வதுமுண்டு. இத்துணை ஆற்றல் வாய்ப்பு ஏனைய உறுப்புக்களுக்கு இல்லை. இதனை ''தூதுசெய் கண்கள்கொண்டொன்று பேசி'' என் றும் ''கண்ணிற் சொல்லிச் செவியினுேக்கும் இறைமாட்சி'' என்றும் குறிப்பிடப்பெற்ற மேற்கோள்களால் அறியலாம்.

பெண்கட்குக் கண்கள் சிறந்த அவயவமாகும். இதுபற்றியே அகப்பொருளில் ''கண்ணயந்துரைத்தல்'' என்ற துறையும் சொல்லப் பட்டுளது. ''அஸிதேக்ஷணா'' ''சீதை கண்ணழகில் விஞ்சியவள்'', என்று கண்ணையிட்டு ஆதிக்யம் சொல்லப்பட்டுளது. அனுமானை இலங்கைக்கு அனுப்புகிறபோது இராமபிரான் அனுமானைநோக்கி, ''பெரியவாய்ப் பரவையொவ்வா பிறிதொன்று நினைந்துபேச, வரியவாய் ஒருவருள்ளத் தடங்குவ வல்ல வுண்மை, தெரியவாயிரக்கானேக்கிற் றேவர்க்கும் தெய்வமென்னக், கரியவாய் வெளியவாகும் வாட்டடங் கண்களம்மா'' என்றுரைத்தனர். வேதபுருஷனும், ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமுரைக்கவந்த விடத்தில் ''அன்றலர்ந்த செந்தாமரைப் புஷ் பம்போன்ற' கண்ணழகையுடையவன்'' என்று கண்ணையிட்டுக் கூறி னன். இதனால் அவயவங்களிற் கண் சிறந்ததென்பது தெளிவாயிற்று. திருமங்கைமன்னனும் பெண்களை விசேடிக்க வந்தவிடத்தில் ''குவ ளையங்கண்ணியர்'' என்றும், ''வேற்கண்மடவார்'' என்றும், ''மானேய் நோக்கியர்'' என்றும், ''கருநெடுங்கண்ணாள்'' என்றும், கண்ணை யிட்டு விசேடித்தார்.

மேலும், உறங்காவில்லிதாஸர், ஒருநாள் நண்பகற்பொழுதில் தன் மனைவியின் கால்கள் காவிரியின் சுடுமணல் தாக்கி வருந்தாதி ருக்க, பட்டுடையை நடைபாவாடையிட்டும், கண்கள் வாடாதிருக் கக் குடைபிடித்தும் வருவதைக்கண்ட எம்பெருமானார் இராஜகா ரியம் பார்க்கச்சென்ற நீர், மனைவியை உடனழைத்துச் சென்ற தோடு, இப்படிப் பணிவிடையும் செய்துவருகின்றீரே; இஃதென்ன விந்தையாயிருக்கிறதெனக் கேட்டார். அப்பொழுது உறங்காவில்லி தாஸர் இவ்வளவு கண்ணழகு படைத்தவளை என்னால் பிரிந்திருக்க லாகுமோ? என்றார். இந்த ஐதிஹ்யத்தாலும் பெண்களின் கண்கள்

ஆடவர்களை வசீகரிக்குமென்பது தெளிவாயிற்று. இவற்றையெல்லாம் உட்கொண்டு ஈண்டு "உறைகழித்த வாளையொத்த விழிமடந்தை மாத"ரென்று மாதரைக் கண்ணையிட்டு விசேடித்தார்.

மாதர்மேல் உருகவைத்தமனம் — மாதர் விஷயத்தில் மிகவும் ஈடுபட்ட மனம். ஈண்டு மேல் என னும் ஏழாமவேற்றுமை இடப்பொருளுருபு விஷயப்பொருட்டு. உருகவைதத வெண்ணெய்போல உருகவைத்த மனமென்கிறார். வெண்ணெயைப்போல மனம் உருகும் பண்டமில்லை; சூக்ஷ்மமானது. இஃது உருகுமாறில்லையேனும் விஷயத்தில் முழுகி ஈடுபடுவதை இக்ஙனம் உரைப்பதோர் வழக்குண்டு. இதனை "உருகுமால் நெஞ்ச"மென்று ஆழ்வாரருளிச் செயலாலும் அறியலாம். இதனால் திருமங்கை மன்னன் எம்பெருமான் அனுக்கிரகம் பெறுவதற்கு முன்னுள்ள நிலைமையைச் சுட்டியுணர்த்தினாராயிற்று. திருமங்கைமன்னன் எம்பெருமான் அனுக்கிரகம் பெற்றவுடன் தம் பூர்வநிலைமையைச் சிந்திக்கத்தொடங்கி "வாடினேன் வாடிவருந்தினேன் மனத்தாற் பெருந்துயரிடும்பையிற் பிறந்து கூடினேன் கூடியிளையவர் தம்மோடவர்தரும் கலவியே கருதி, ஓடினேனோடி" என்றருளிச்செய்தார். இஃதல்லாமலும, வேறுபல பதிகங்களிலும் "வாணிலாமுறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார் வனமுலைப்பயனே, பேணினேன்" என்றும், "மானெய் கண்மடவார் மயக்கிற்பட்டு" என்றும், "ஏாந்தேந்துமென்முலையார் தடந்தோள்புணரின்ப வெள்ளத்தாழ்ந்தேன்" என்றும, "மானெய் நோக்கு நல்லார்மதிபோல் முகத்துலவும், ஊனெய் கண்வாளிக்கு உடைந்து' என்றும் அருளிச் செய்தார்.

வியாக்யாதாவாகிய பெரியவாச்சான்பிள்ளையும் இவரது நிலைமையை உரைக்கவந்தபோது, "இவ்வாழ்வாராகிறார் ஆத்மாவை வெயிலிலேவைத்து உடம்பை நிழலிலே வைத்துப் போந்தார் ஒருவராயிற்று" என்றும், "ஆழ்வார் திருமங்கையாழ்வாராகிறார், 'வெனறியே வேண்டி வீழ்பொருட்கிரங்கி வேற்கணார் கலவியே கருதி' என்று சர்வேசுவரன் விபூதியடைய இவர் துடைக்குக்கீழே கிடக்கிறதோவென்று சங்கிக்கவேண்டும்படி அதிசயிதாஹங்காரராய் அதுக்

.கடியான தேஹாத்மாபிமானத்தையுடையராய், அத்தாலே, ‘சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்பவெள்ளத் தாழ்ந்தேன்’ என்கிறபடியே ஆத்ம விஷயமாதல் ஈசுவர விஷயமாதல், ஜ்ஞானம் பிறக்கைக்கு யோக்யதையில்லாதபடி விஷயப்ரவணராய்ப் போந்தாரொருவர்'' என்றும் அருளிச்செய்தார். இதனால் எம்பெருமான் அநுக்ரஹம் பெறுவதற்குமுன்பு விஷயாந்தரத்தில் மண்டித்திரிந்தார் என்பது தேற்றம்.

உருகலைத்த மனமொழிக்க—பெண்கள் விஷயத்திலீடுபட்ட மனத்தை எம்பெருமானனுக்ரஹத்தால் அகற்றி “நின்திருவருளில்லையேல் என்று நான் உய்கிற்பன்” அவன் திருவருளில்லாத போது உய்யுமாறில்லை; அவன் திருவருளுண்டானபோது இதரவிஷயமே பரமபோக்யமென்ற உணர்ச்சியும் இதற்குக் காரணமாகிய அஹங்காரமமகாரங்களும் ஒழியும். இந்த மனமாசுகளற்றவுடன், ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம் புலப்படும. ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபமாவது சேஷத்வமாம். அஃதாவது எம்பெருமானுக்கு அதிசயத்தை யுண்டுபண்ணுகை. இந்தச் சேஷத்வ சித்தியின்பொருட்டு அவனுகந்த கைங்கர்யஞ் செய்து அவன் திருவடி நிழலிலிருந்து வாழும பேற்றை நோக்கினார். பக்தி மீதூர்ந்தது. அதனாலாத்மஸ்வரூபத்திற்கு * விரோதமான செயலைச் செய்தாகிலும் அப்பேற்றைப் பெறவேண்டுமென்ற திடமான உணர்ச்சியுண்டாயிற்று. நெடுநாளாகப் பெண்கள் விஷயத்தில் மனமடிந்து திரிந்த இவர்தாமே பெண்ணாகிப் புருஷோத்தமனாகிய எம்

---

* தன் ஸ்வரூபத்திற்கு விரோதமான செயலைச்செய்வது கூடுமோவெனின்;—எம்பெருமானுக்கே வசப்பட்டிருத்தலாகிய ஆத்ம ஸ்வரூபத்தை நோக்கினால், அவன் நல்லவிடத்தில் வைத்து சுகமுறச்செய்யினும் செய்வானாக; நரகத்திலிட்டு வருத்தினும் வருத்துவானாக; என்றிருத்தல் வேண்டுமேயன்றித் தன்னுடைய நன்மைக்காக ஒரு முயற்சியும் செய்யலாகாதென்பது பெறப்படும். பகவத் கைங்கர்யமாகிய பலத்தை நோக்கினால் அப்பொழுதே அதைப் பெறவேண்டுமென்ற ஆதராதிசயம் உண்டாகும். இது, சிறந்த புருஷார்த்தமாகிய பகவத் கைங்கர்யத்தைப் பெறவேண்டுமென்று தோன்றிய செயலாதலால் குற்றமாகாதென்க.

பெருமான் விஷயத்தில் மடலெடுக்கின்றுரென்று கொண்டாடுகிறார் ‘உலகளந்த நம்பிமேல் குறையைவைத்து மடலெடுத்த குறையலாளி’ என்ற தொடர்களால். வேதாந்தங்களில் பகவத்காமம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற பகவத்பக்தி இவருக்கு விஞ்சி யிருப்பதைத் திருமடலில் பெண்பேச்சாகப் ' பேசியதாலறியலாம். கரைபுரண்ட பக்தியானது இவர் பெண்ணுகமதித்துப் பேசும்படி செய்தது. இவர் பகவத் குணங்களாகிய ஆழமுடைய கடலில் இங்ஙனமாழ்ந்ததாலன்றே ஆழ்வாரெனக் கொண்டாடப்பெற்றனர்.

‘உலகளந்த நம்பிமேல்—பிறர் நிமித்தமாக உலகத்தையளந்த பூரணனுகிற சர்வேசுவரன் விஷயத்தில். மகாபலியின்,யாகசாலையிற்சென்று அவனிடத்தில் மூவடி மண்தாவென்று குறைவேண்டி நின்றது தனக்கோர் நன்மை குறித்தன்று என்பதை நம்பி என்றதனுல் விளக்கினர். (நம்பி—பூரணன்) ஒன்றுல் ஒரு குறைபாடில்லாத எம்பெருமான் தனக்கெவ்வகையாலும் பொருந்தாத யாசகவிர்த்தியை மேற்கொண்டு பிறர்காரியம் செய்தானுதலால் இவனே உத்தமனுவான். இங்ஙனம் உத்தமனுய் ஒப்புயர்வற்றவனுய் எல்லா ஹேயங்கட்கும் (அற்பங்கட்கும்) எதிர்த்தட்டாயிருப்பவனுகிய எம்பெருமானுக்கு ஒரு குற்றமுமில்லையென்பது ஆன்றோர்களின் துணிபு. அங்ஙனமிருக்கவும், இவர் அவன்பாற் குறையை ஏறிட்டாரென்பார் ‘குறையைவைத்து’ என்றார். இங்குக் குறைகூறி என்னுது, குறையை வைத்து என்றதனுல், அவன்பாற் குற்றமில்லாதிருக்கவும் குற்றத்தை ஆரோபித்தாரென்பது வெளியாயிற்று. இவர் உலகளந்த நம்பிமேல் கூறியகுற்றம் † திருமடலால் அறியலாம்.

---

† “மின்னிடையாய்ச்சியர்தம்சேரிக்களவின்கண்
துன்னுபடல்திறந்துபுக்கு—தயிர்வெண்ணெய்
தன்வயிறாரவிழுங்ககொழுங்கயற்கண்
மன்னுமடவோர்கள்பற்றியோர்வான்கயிற்றால்
பின்னுமுரலோடுகட்டுண்டபெற்றிமையும்
அன்னதோர்பூதமாய்ஆயர்விழவின்கண்
துன்னுசகடத்தால்புக்கபெருஞ்சோற்றை
முன்னிருந்துமுற்றத்தான்துற்றியதெற்றனவும்

மடலெடுத்த—‡ மடன்மாவேறிய. குறையலாளி—திருக்குறையலூரையாளுகின்றவர். திருமணங்கொல்லை—இது வழிபறித்த இடமாகும். திருமங்கைமன்னன் உருவுடைமாதரின் வடிவழகில் ஈடுபட்டுத்திரிந்த இவரை, வடிவழகைக்காட்டி ஈடுபடுத்தத் திருவுள்ளம் பற்றிய எம்பெருமான் பிராட்டியாரோடு குறைவற்ற ஆபரணங்களையுடையவனாய்த் திருமணங்கொல்லையின் வழியே எழுந்தருளினான். அப்பொழுது திருமங்கைமன்னன், 'இன்றுநல்ல வாய்ப்பு வாய்த்தது'

மன்னர்பெருஞ்சவையுள்வாழ்வேந்தர்தூதனாய்
தன்னையிகழ்ந்துரைப்பத்தான்முனநாள்சென்றதுவும்
மன்னுபறைகறங்கமங்கையர்தம்கண்களிப்ப
கொன்னவிலுங்கூத்தனாய்ப்பெயர்த்துங்குடமாடி
என்னிவன்? என்னப்படுகின்றகூடறவும்
தென்னிலங்கையாட்டிஅரக்கர்குலப்பாவை
மன்னனிராவணன்தன்நல்தங்கை—வாளெயிற்றுத்
துன்னுசுடுசினத்துசூர்ப்பணகாசோர்வெய்தி
பொன்னிறங்கொண்டுபுலாங்கெழுந்தகாமத்தால்
தன்னைநயந்தாளைத்தான்முனிந்துமூக்கரிந்து
மன்னியதிண்ணெனவும்வாய்த்தமலைபோலும்
தன்னிகரொன்றில்லாத்தாடகையை—மாமுனிக்காத்
தென்னுலகமேற்றுவித்ததிண்திறலும்மற்றிவைதான்
உன்னியுலவாவுலகறியவூர்வன்நான்
முன்னிமுளைத்தெழுந்தோங்கியொளிபரந்த
மன்னியபூம்பெண்ணைமடல் ".

‡ மடலேறுதலென்ற வழக்குப் பண்டைக்காலந்தொட்டு நூல்களிற் பயின்று வருகிறது. ஆசிரியர் தொல்காப்பியனாரும் "ஏறியமடற்றிறம்" என்றதனாற் குறிப்பிட்டுள்ளார். மேலும், தஞ்சைவாணன் கோவை யுரைகாரரும் மடலேறுதலை விரிவாக உரைத்துள்ளார். அது வருமாறு:— "மடலேறலாவது, தலைவன் ஒவ்வாக் காமத்தால் பனங்கருக்காற் குதிரையும், பனந்தருவில் உள்ளனவற்றால் வண்டில் முதலியனவும் செய்து அக் குதிரையின்மீது ஏறுவது; மடலேறுவான் திகம்பரனாய (ஆடையில்லாதவனாய்) உடலெங்கும் நீறுபூசி, கிழி ஓவியர் கைப்படாமல் தானே தீட்டிக் கிழியின் தலைப்புறத்திலே அவன் பெயரை வரைந்து கைப்பிடித்து ஊர் நடுவிலே நாற்சந்தியில் ஆகார நித்திரையின்றி, அக்கிழியின்மேற் பார்வையும், சிந்தையும் இருத்தி வேட்கை வயத்தனாய், வேறுணர்வின்றி ஆவூரினும்

என்று பெருமானை வளைத்துப்பிடித்து எல்லா ஆபரணங்களையுங் கழற்றித்திரள ஓரிடத்தில்வைத்து அதனை எடுத்துச்செல்லத் தொடங்கினர். அது எடுக்கமுடியாமல் வருத்தமடைந்தபோது, அலங்கிருந்தனாய்வந்த எம்பெருமானை நோக்கி, 'நீஏதோ மந்திரவாதஞ்செய்தாய், அதனைச் சொல்லாதொழிவையேல் உன்னைக் கத்தியால் வெட்டுவேன' என்றார். அதனபின்னர் எமபெருமான் திருமந்த்ரோபதேசஞ் செய்தருளினன. இதனை 'மறையுரைத்த மந்திரத்தை' எனபது

அழல்மேற்படினும் அறிதலின்றி, மழை வெயில் காற்றால் மயங்கா திருப்புழி அவ்வூரிலுள்ளார் பலரும் கூடிவந்து, 'நீ மடலேறுதியோ! அவளைத் தருதும் சோதனை தருதியோ!' என்ற வழி, இயைந்தானாயின் அரசனுக்கு அறிவித்து அவனேவலால் அவனினைந்து நையத்தந்து 'மடலேறு' என்ற வழி, எழுமுறைமையாவது பூளைப்பூ, எலும்பு, எருக்கு இவைகளாற் கட்டிய மாலையணிந்துகொண்டு, அம்மாவில் ஏற, அவ்வடத்தை வீதியில் ஈர்த்தலும் அதனுருளை உருண்டோடும்போது பனங்கருக்கு அறுத்தவிடமெல்லாம் இரத்தம் தோன்றாது வீரியம் தோன்றின் அப்போது அவளை அலங்கரித்துக் கொடுப்பது. இரத்தங்கண்டுழி அவனைக் கொலைசெய்து விடுவது. இவை புலவர் காட்டிய வழக்கென் றுணர்க'' எனபது,

பெரியவாச்சான்பிள்ளையும் மடலேற்றின் தாற்பரியத்தைச் சுருக்கி அடியில்வருமாறு அருளிச்செய்துள்ளார்:— ''மடலேறுகைதான்; உண்ணாதே குளிக்காதே உகந்த விஷயத்தை ஒரு படத்திலே லிகித்து (எழுதி), அதனைக் கொண்டு திரிகையும், அறவிளைந்தால் அதன் காற்கிடையிலே விழுகையும், விழுந்தால் அங்ஙனே செலவரிக்கக் கிடக்கையும, அங்ஙனே முடிகையுமாம; இத்தாற் ப்ரயோஜனம என்னையெனின்;—அவன் (எம்பெருமான்) கேட்குமென்கை. இல்லையாகில் இதுதானே ப்ரயோஜனமாகை'' யென்பது.

''எத்திணை மருங்கினும மகடூஉ ;மடன்மேற, பொற்புடைநெறிமையின்மையான'' என்று தொல்காப்பியனார் பெணகள மடலூரலாகாதென உரைத்துள்ளார். இதற்சேர்ப்ப திருவள்ளுவரும் ''கடலன்னகாம முழந்துமடலேறாப், பெண்ணிற்பெருந்தக்கதில்'' என்றுரைத்தனர். பன்னிருபாட்டியலுடையார், ''மடன்மாப்பெண்டிர் ஏறார ஏறுவர், கடவுளர் தலைவராய் வருஉங்காலை'' என்று மகளிர் மடலேறார் என்றும், ஆனல் கடவுளரைத் தலைவராக வைத்துப்பாடுமிடத்து அவர் மடலேறுவதாகக் கூறப்படுமென்றும் உரைத்துள்ளார். திருமங்கைமன்னனும் மடலேறுவன என்றாரேயன்றி மடலேறினாரில்லை.

முதலிய தொடர்களால் விளக்குகிறார். "இதுவோ திருவரசிதுவோ மணங்கொல்லை இதுவோ திருவாலியென்னுமூர்; இதுவோதான் வெட்டுங்கலியன் விரைந்து நெடுமாலை, எட்டும பறித்தவிடம்" என்றதனால் இவர் திருமணங்கொல்லையில் வழிப்பறி செய்தாரென்பதை யறியலாம்.

வழிப்பறிபறித்தல், களவாடல், முதலிய தொழில்கள் பாதகத் தொழிலைச்சார்ந்தன. இவற்றை இவ்வாழ்வார் மேற்கொண்டிருந்தாராதலால் இவர் வைதிகராகார், வைதிகராயிருப்பரேல் வேதவிருத்தமான செயலைச்செய்யமாட்டார் என்று சிலர் சங்கிப்பர்கள். இவர் பறித்த திரவியங்களையெல்லாம பகவத்பாகவத விஷயங்களில் விநியோகப் படுத்தினராதலால் இவர் செயல் வைதிகச்செயலாமென்பர். தீயவழியில் சம்பாதிக்கப்பட்ட திரவியத்தை நல்வழியில் உபயோகப்படுத்தினால் தீயவழியிலீட்டியவனுக்குப் பாபபலனும், ஸத்பாத்திரத்தில் விநியோகப்பட்டதனால் திரவியமுடையவனுக்குப் புண்ணியபலனும் போய்ச்சேரும் என்று வியவஸ்தை செய்யப்பட்டுளது. ஆதலால் திருமங்கைமன்னனுடைய செயல் சிஷ்டரது செயலாவதெங்ஙனமென்று வினவெழும். அதற்குச் சமாதானம் கீழ்வருமாறு காண்க.

சிஷ்டர்கள், அத்யந்த பக்தியுடையவரென்றும், அஃதில்லாதவரென்றும் இருதிறப்படுவர். இவ்விருவகையினையுடைய சிஷ்டர்களில் அத்யந்த பக்தியுடையவராய்ச் செய்தசெயலை எல்லோருமேற்கொண்டு செய்யலாகாது. கரைகடந்த பக்தியுடையவர்கள் இன்னவெல்லையில் நிற்கவேண்டுமென்றால் அவர்கட்கு எங்ஙனமியலும்? எல்லையுறு பக்தியுடையவர்களையன்றோ சாஸ்திரம் கட்டுப்படுத்தக்கூடும் மிகுந்தபக்தியுடையவர்களை எப்படிக் கட்டுப்படுத்தக்கூடும்? ஆதலாலன்றோ "அத்யந்த பக்தியுக்தாநாம் நசாஸ்த்ரம் நைவச க்ரம:" என்று சொல்லப்பட்டுளது. "பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப்பெறுபவோ" என்று கம்பருரைத்ததும் இதனை வலியுறுத்தும். திருமங்கைமன்னன் அத்யந்த பக்தியுடையவராய் இக்காரியத்தைச் செய்தனர். ஆதலால் இது வைதிகத்தோடு மாறுபட்ட செயலென்றொன்றுது. எல்லை

கடந்த பக்தியின் காரியமாகச் செய்த செயலாதலால் இங்ஙனஞ்செய்தது கூடுமோவென்று ஆராயவுங்கூடாது.

வழிபறித்துக் குற்றமற்ற செங்கையான்—வழிபறித்துக் குற்றமற்ற செவ்விய கையையுடையான். வழிபறித்துக் குற்றமுற்ற கொடுங்கையானாகவேண்டிய முறையிருக்க, வழிபறித்து அதனால் குற்றமற்ற செங்கையனாவதும் ஓர் வியப்பன்றோ என்று கொண்டாடுகிறார். வழிபறித்து என்ற சொல்லாற்றலால் குற்றமாம் என்றபொருள் கிடைக்கும். இந்த வழிபறித்தல் திருமங்கைமன்னனுக்கு அத்யந்த பக்தியின் கார்யமாக நிகழ்ந்ததாதலால் அது குற்றமாகாதென்று குறிப்பாற் கிடைத்ததைக் குற்றமற்ற செங்கையான் என்பதால் விளக்கினார். "விழிபறித்து வெள்ளியை மாவலியை மண்ணும் விண்ணுலகும் பறித்த குறள்வேடத்தும்மை, வழிபறித்து மந்திரங்கொண்டன்பர் தங்கள், வல்வினையைப்பறித்தபிரான்" என்பதும் இங்கறியத்தக்கது.

இனி, இவர்பெற்ற பேற்றையருளிச்செய்கிறார் * "மறையுரைத்த மந்திரத்தை மாலுரைக்க" என்ற தொடர்களால். மறையுரைத்த மந்

---

* "மறையுரைத்த மந்திரத்தை மாலுரைக்க' என்ற குறிப்பால் ஒரு சாஸ்த்ரார்த்தம் விளங்குகிறது. அது வருமாறு:—பரகதஸ்வீகாரம் என்றும், ஸ்வகதஸ்வீகாரமென்றும ஸ்வீகாரம் இரண்டுவகையுண்டு. அவற்றுள் பரகதஸ்வீகாரமாவது—எம்பெருமான் தானே வந்து சேதனனை அங்கீகரிப்பதாம். ஸ்வகதஸ்வீகாரமாவது சேதனன் தானே எம்பெருமான்றன்னை யடைய முயல்வதாம். இந்த இரண்டுவகை ஸ்வீகாரங்களுள் பரகதஸ்வீகாரஞ் சிறந்ததாம். திருவஷ்டாக்ஷரத்தில் நமப்பதத்தால் சிக்ஷிக்கப்பட்ட ஸ்வரூபமே ஆத்மாவுக்குச் சிறந்த ஸ்வரூபமென்பர். அந்த ஸ்வரூபமாவது அத்யந்த பாரதந்த்ர்யம். அஃதாவது அவனுக்கு மிகவும் வசப்பட்டிருப்பதாம். இந்த ஸ்வரூபத்தை மேற்கொண்டிருப்பவன் தன்னுடைய க்ஷேமத்தைக் குறித்து ஒரு முயற்சியும் செய்யாதிருப்பன். இதனால் தன்னுடைய க்ஷேமத்தைக்கருதி ஒரு முயற்சி செய்வது ஆத்மஸ்வரூபத்திற்கு விரோதமென்பது பெறப்பட்டது. ஆகலால் பரகதஸ்வீகாரமே சிறந்ததாகுமென்பது தெளிவாகும். இந்த விவரங்களை லோகாசார்யர் "அவன் இவனைப் பெறும்போது இவன்செய்யும் பாதகமும் விலக்கன்று, இவன் அவனைப்பெறும்போது இவன் பண்ணும் ப்ரபத்தியும் உபாயமன்று. இவையிரண்டும்

திரம்—வேத ப்ரதிபாத்தியமான மந்திரம். விசுவாசமில்லாதவர்கட்குத் தன்பொருளை மறைக்கு மியல்பிற்றாதலால் வேதத்திற்கு மறையென்று பெயர் வழங்கலாயிற்று. மந்திரம்தன்னை அநுஸந்தித்தவரைத் துக்கத்தினின்றும் தாண்டுவிக்குமது இது காரணக்குறி. இங்கு மந்திரமென்பது திருமந்திரத்தை. 'மந்த்ராணாம் பரமோ மந்த்ரம் குஹ்யாநாம் குஹ்யமுத்தமம், பவித்ரஞ்சபவித்ராணாம் மூலமந்த்ரம் ஸநாதநம்." என்றபடி இந்தத் திருவஷ்டாக்ஷரமந்த்ரமே எல்லாமந்திரங்களிலும் சிறந்ததாம். இதனையே திருமங்கைமன்னன் எம்பெருமானிடத்தில் உபதேசம்பெற்றார். இவ்விவரத்தைப் பெரிய திருமொழியில் முதற்பதிகத்தில் "நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்." என்று ஒருகால் சொன்னதுபோல் ஒன்பதின்காலும் அருளிச்செய்தார்.

மாலுரைக்க—திருமால் தன்னருளாலே வந்துபதேசிக்கத் திருமங்கைமன்னன் முன்னிலைமையில் "சாந்தேந்து மென்முலையார் தடங்

ஸ்ரீ பரதாழ்வான் பக்கலிலும் ஸ்ரீ குகப்பெருமாள் பக்கலிலும் காணலாம். ஸ்ரீ பரதாழ்வானுக்கு நன்மைதானே தீமையாயிற்று. ஸ்ரீ குகப்பெருமாளுக்குத் தீமைதானே நன்மையாயிற்று" என்றும், "தன்னால்வருவது விலைப்பால்போலே, அவனால் வருவது முலைப்பால்போலே" என்றும் அருளிச்செய்துள்ளார். மேலும், பரகதஸ்வீகாரம் பெற்றவர்கள் எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை மிகவும் தெளிவாகக் காண்பவராவர். ஸ்வகதஸ்வீகாரமுடையவர்கள் அவனுடைய ஸ்வரூப ரூப குணங்களை அவ்வளவு தெளிவாகக் காணமுடியாது. "ஸ்வாத்யாய யோகங்களைக் கற்றுத் தெளிந்தும் கஷ்டமைப்பாலே யோதியுணர்ந்தவர் இன்னும் ஆசாபாசபத்தர். அவன வழவரும் திவ்யசக்ஷுஸ்ஸாலே நேரே கார்செறிந்த நீருடி கட்கரிய வரும் பொருளைக் கண்டபோதே யாமுறுமையென்னும்படி இவர்க்கு வன் பாசஙகள் நீங்கிற்று" என்ற ஆசார்யஹ்ருதயத் தொடர்களால் யோகாப்யாஸமுறையால் தெளிந்தஞானியராகிய ருஷிகள் ஸ்வகதஸ்வீகாரமுடையவராதலால் இன்னும ஸம்ஸாரபந்தம் நீங்கப்பெறாதவராயிருக்கின்றனர். பரகதஸ்வீகாரமுடைய ஆழ்வார, ஸம்ஸாரபந்தம நீங்கப்பெற்று அவனுடைய ஸ்வரூப ரூப குணங்களை நன்கறிந்தார் என்று குறிப்பிடப்பெற்றது மிக்கதியத்தக்கது. திருமஙகைமன்னன் பரகதஸ்வீகாரமுடையவராதலால் எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை மிகவும் தெளிவாகக் கண்டார் என்பது குறிப்புப்பொருளாம்,

தோள்புணரின்ப வெள்ளத்தாழ்ந்தேன்'' என்றபடி விஷயாந்தரங்களில் மண்டித்திரிந்தவராதலால் இவர்பால் ஒரு பாக்யவிசேஷங்கண்டு அவனருள்செய்தானென்பதில்லை; நிர்ஹேதுக க்ருபையாலே உபதேசித்தருளினன் என்பார் மாலுரைக்க என்றார். மால்—அன்பரிடத்திற் பேரன்புடையவன். இது காரணக்குறி.

இனி எம்பெருமானிடத்தில் உபதேசம்பெறுகிறபோது இவர் தாழ்மைதோன்ற நின்றநிலைமையைத் தெரிவிக்கிறார். அவன் முன்னே—தன்பேரன்பினாலே வந்துபதேசித்த எம்பெருமான் முன்னர். மடியொதுக்கி மனமடக்கி வாய்புதைத்து—மந்திரோபதேசம் பெறுகின்றவர்கள் மடியொதுக்கியும், மனமடக்கியும், வாய்பொத்தியும் நிற்கவேண்டிய முறையாதலால் அங்ஙனமே நின்றார். ஆசார்யன் ஆசனத்திலமர்ந்து மந்திரோபதேசம் செய்கின்றகாலத்தில் சிஷ்யன் அவ்வாதனத்தின் கீழ்நின்று கேட்கவேண்டும். மந்திரத்திலும், மந்திரத்தை உபதேசிக்கின்ற ஆசார்யனிடத்திலும், மந்திரத்திற் சொல்லப்பட்ட தெய்வத்தினிடத்திலும் சிஷ்யனுக்கு விசுவாசம் மிகுதியாக வுண்டானபோதுதான் காரியஸித்தியாகும். ஆசார்யனிடத்தில் விசுவாசமுள்ளதை மடியொதுக்கியும், வாய்புதைத்தும் நின்றதனால் தெரிவித்தார். மந்திரத்திலும், மந்திரத்திற் சொல்லப்பட்ட தெய்வத்தினிடத்திலும் ப்ரேமம் அதிகரித்துள்ளதை மனமடக்கி என்பதனால் விளக்கினார். மனமொருவழிப்படாதபோது மந்திரார்த்தம் நெஞ்சிற்படாது. அது நெஞ்சிற்படாதபோது மந்திரத்திற் சொல்லப்படுகிற தெய்வம் உபாயோபேயமென்ற பிரதிபத்தியுண்டாகமாட்டாது. ''தன்மை அடக்கம்'' என்ற தொல்காப்பிய சூத்திரத்துக்குப் பேராசிரியர் ''அடக்கம் யென்பது உயர்ந்தோர்முன் அடங்கி ஒழுகும் ஒழுக்கம்; அவை பணிந்தமொழியும், தணிந்த நடையும், தானைமடக்கலும், வாய்புதைத்தலும் முதலாயின'' என்று உரைகூறியுள்ளார். உயர்ந்தோர்முன் இயல்பாகவே இங்ஙனமடங்கியிருக்கவேண்டியது முறையாகுமேல், மந்திரோபதேசம் பெறுகின்ற காலத்தில் அடங்கியிருக்கவேண்டுமென்பது சொல்லாமலே பெறப்படும்.

ஒன்னலார் கறைகுளித்த வேல் அணைத்து—பகைவர்களின் உடலைக்குத்தியதால் குருதி (இரத்தம்) தோய்ந்த வேலைக்கையிலேந்திய. (வெற்றிவேலென்றபடி) பிராமணர்க்கு யக்ஞோபவீதம்போல இவ்வாழ்வாருக்கு வேல் இன்றியமையாததாகும். "வேற்கலியன்" என்றும், "வேல்வலவன்" என்றும் வேலினையே நிரூபகமாக இவர்தாமே அருளிச்செய்தார். எம்பெருமானாரும் "மாயோனை வாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன், தூயோன் சுடர்மானவேல்" என்று திருமங்கைமன்னனை வாழ்த்தியதுபோல அவர்க்கு நிரூபகமாக இருக்கின்ற வேலையும் வாழ்த்தினார். எம்பாரும் "வேலணைத்தருளுங் கையால் அடியேன் வினையைத்துணித்தருள வேண்டுந்துணிந்து" என்று வேலேந்தியகையை விசேடித்தார். அதுபோல இங்கும் ஒன்னலார்கறைகுளித்த வேலணைத்து என்றார்.

நின்ற இந்த நிலைமை என்கண்ணை விட்டகன்றிடாது—உயர்வற உயர்ந்தோனாகிய எம்பெருமான் முன்னிலையில் தம் அடக்கம்தோன்ற நின்ற திவ்யமங்கள விக்ரஹத்தின்நிலை பரமபோக்யமாக விருப்பதால் அது என்கண்ணைவிட்டு ஒருபோதும் அகன்றிடாது. இங்ஙன மகன்றிடாதிருப்பதற்குத் திடமான ஆணைகூறுவார் "கலியனாணை ஆணையே" என்றார். "மாயோனைவாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோ"னாதலால் இவரை ஆணையிடுவது வலிமையுடைய ஆணையாகு மன்றோ! எம்பெருமானை வியந்து சூட்டப்பெற்ற நாமமாகும் 'கலியன்' என்பது எம்பெருமானது திருவருளைத்தவறாதுபெற்ற இவரை ஆணைகூறவே தாம் கருதியதும் தவறாது என்று துணிகிறார். ஆழ்வாருக்குப் பரமபக்தி தலையெடுத்து "திருவாணை நின்னாணை கண்டாய்" என்று அருளிச்செய்ததுபோல இவருக்கும் ததீயராகிய திருமங்கைமன்னன் விஷயத்தில் பரமபக்தி தலையெடுத்து "கலியனாணை ஆணை"யென்றார்.

இங்ஙனமே எம்பெருமானாரும் திருமங்கைமன்னனது வடிவழகில் "அணைத்தவேலும் தொழுதகையும் அழுந்திய திருநாமமும் ஓமென்ற வாயும் உயர்ந்தமூக்கும் குளிர்ந்தமுகமும் பரந்தவிழியும் இருண்டகுழலும் சுருண்டவளையமும் வடிந்தகாதும் அலர்ந்தகாது

காப்பும் தாழ்ந்தசெவியும் சரிந்தகழுத்தும் அகன்றமார்பும் திரண்ட
தோளும் நெளிந்தமுதுகும், குவிந்த இடையும் அல்லிக்கயிறும்
அழுந்தியசிராவும்தூக்கிய கருங்கோவையும் தொங்கலும் தனிமாலை
யும்சாத்தின திருத்தண்டையும் சதிரான வீரக்கழலும் குந்தியிட்ட
கணைக்காலும் குளிர வைத்ததிருவடி மலரும் வாய்த்தமணங்கொல்லை
யும் வயலாளி மணவாளன் வாடினேன் வாடி வாழ்வித்தருளிய நீலக்
கலிகன்றி மருவலர் தம் உடல்துணிய வாள்வீசும் பரகாலன் மங்கை
மன்னனான வடிவே'' என்று ஈடுபட்டதுபோல அவரது அபராவதார
விசேஷராகிய மணவாளமாமுனிகள் திருமங்கைமன்னன் விஷயத்தில்
ஈடுபடுவதும் இயல்பன்றோ!

'மாதர்மேல் உருகவைத்தமனம்' என்றதனால் ச்ருங்காரச்சுவை
யும், 'மனமொழித்து' என்றதனால் சாந்தச்சுவையும், 'உலகளந்த
நம்பிமேல் குறையைவைத்து' என்றதனால் அற்புதச்சுவையும், பெருந
கைச்சுவையும், 'திருமணங்கொல்லைதன்னில் வழிபறித்த' என்ற
தனால் க்ருச்சைச்சுவையும், பயச்சுவையும், 'மறையுரைத்த மந்திரத்
தை மாலுரைக்க' என்றதனால் கருணைச்சுவையும் 'ஒன்னலார்களை
குவித்த வேலணைத்து' என்றதனால் வீரச்சுவையும் இதில் நிறைந்
திருக்கின்றமை அறியலாம். குறிப்புப்பொருள்களும் ஆங்காங்குக்
குறிப்பிடப்பட்டன. இந்தச் சந்தக்கவியொன்றில் சிறந்தபலபொருள்
பொதிந்துள்ளமையைக் கற்றோர் பலருங்கண்டு களிகூருவாராக.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

———o◇o———

[V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B.A; B.L.) எழுதுவது.]

ஹரிஸமய திவாகரப் பத்திரிகா நேயர்காள்!

வங்காளதேசத்துச் சிறந்த கவியான ஸ்வர்க்கவாஸி, பாபு வங்கிம சந்திர சாட்டர்ஜியவர்களால் எழுதப்பெற்ற ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்' என்கிற வங்காளிப் புஸ்தகத்திலிருந்து சில அதிகாரங்களை என்னுலியன்றவரைத் தமிழில் மொழிபெயர்த்துத் தங்களுடைய பார்வைக்கு நான் அனுப்பிவந்தேன். பிறகு எனக்குத் தேகசௌக்கியமின்மையாலும், சாவகாசக்குறைவினுலும் தொடர்ந்து மொழிபெயர்ப்பை யனுப்பிவர முடியவில்லை.

தற்காலம் ஸ்ரீ கிருஷ்ணபகவானின் திருவருளால் எனக்குச் சௌகர்யமிருப்பதால், தங்களுடைய ஸேவையில் மறுபடியும் ஈடுபடலாமென்று நினைத்து எழுததொடங்கினேன். இனித் தவருமல் சஞ்சிகைதோறும் "ஸ்ரீ கிருஷ்ணசரித்திர விமர்சம்" வெளிவரும் என்று நம்புகிறேன். ஸ்ரீ கிருஷ்ணன், பகவானின் அவதாரம் என்பது ஒருபுறமிருந்தாலும், தான் மனுஷ்யனுகவே இருந்துகொண்டு மனுஷ்ய சக்தியினுலேயே எல்லாக்காரியங்களையும் நிறைவேற்றிவந்தார் என்று நிரூபிப்பதே இக்கிரந்தத்தின் நோக்கம் என்பதை நேயர்கள் ஞாபகப் படுத்திக்கொள்ளவேணடும்.

3-வது காண்டம்.

மதுரை—துவாரகை.

[illegible] ।

[illegible] ॥

(ஶாந்தி பர்வ 41-வது அத்தியாயம்).

அமிருதத்திலுதித்த ஸத்யத்தைக்கொண்டு தர்மம் அர்த்தம் என்கிற வியவஹார அங்கங்களால் எவர் நல்லோர்களுக்கு அணை கோலுவதுபோல் நன்மையைச் செய்கிறாரோ அந்த ஸத்யரூபியான பரமாத்மாவை நான் வணங்குகிறேன்.

முதலாவது அதிகாரம்.

கம்சவதம்.

பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணனும் பலராமனும் மிகப் பலசாலிகள் என்று ஒருசமயம் கம்ஸனுக்குத் தெரியவந்தது. கம்ஸனின் ஆட்களான பூதனை முதல் அரிஷ்டாசுரன்வரை யாவரையும் ஸ்ரீகிருஷ்ணன் அழித்துவிட்டான். தேவரிஷியான நாரதர் கம்சனிடம் சென்று ராமகிருஷ்ணர்கள் வஸுதேவரின் புதல்வர்களென்று அறிவித்தார். மேலும், "தேவகியின் எட்டாவதுகர்ப்பத்தில் பிறந்ததுஎன்று எந்தப் பெண்குழந்தையை நீர் வதைத்தீரோ, அது, நந்தன் யசோதையாகிய இருவர்களின் குழந்தையாகும். வசுதேவர் தன் குழந்தையான கிருஷ்ணனை மாறுதல்செய்து நந்தரின் வீட்டில் மறைத்துவைத்திருக்கிறார்" என்று சொன்னார் இதைக்கேட்டுக் கம்ஸன் அதிக பயமும் கோபமும் அடைந்தான்; வஸுதேவரை யிகழ்ந்தான்; அவரைக் கொல்லமுயன்றான்; அதற்காக ராமகிருஷ்ணர்களையழைத்துவரும்படி யாதவர்களின் முக்கியரான 'அக்ரூரர்' என்ற பெரியோரை பிருந்தாவனத்துக்கு அனுப்பிவைத்தான். இச்சமயம் ராமகிருஷ்ணர்களைக் கொல்வதற்காக மிகவும் பலசாலிகளான மல்லர்களின் மூலமாக 'தனுர் மகம் என்ற யாகத்தைச் செய்வித்தான். ராமகிருஷ்ணர்கள் அக்ரூரரால் அங்கு அழைத்துவரப் பெற்றார்கள். அவர்கள் அரங்கமேடையில் பிரவேசித்துக் கம்ஸனால் நன்றாகப் பழக்கப்பட்ட 'குவலயாபீடம்' என்ற யானையையும், மிகவும் பெயர்பெற்றவர்களான சாணூரனையும், முஷ்டிகனையும் இலகுவாய் வதைத்துவிட்டார்கள். இதைக்கண்டு கம்சன், நந்தருக்கு விலங்கிடும்படிக்கும், வஸுதேவரைக்கொன்று விடும்படிக்கும், கிருஷ்ணனையும பலராமனையும் அடிக்கும்படிக்கும் கட்டளையிட்டான. அப்பொழுது மல் யுத்தத்தைக் கண்காணிப்பதற்காக அநேக யாதவர்களுடன் மேடையின்மேல் கம்ஸன் ஓராஸ

நத்திலமர்ந்தான். ஸ்ரீ கிருஷ்ணன் குறிப்பு வைத்து அம்மேடையின் மேலேறி கம்சனைப்பிடித்துத் தலைமயிரைப்பற்றியிழுத்துப் பூமியில் வீழ்த்தி யமனுலகத்திற்கனுப்பி விட்டார். பிறகு அவர் தனது பெரியோர்களான தேவகி வஸுதேவன் முதலானவர்களை மரியாதையுடன் வணங்கி கம்ஸனின தகப்பனான உக்ரஸேனரை ராஜ்ஜியத்தில் பட்டாபிஷேகம் செய்வித்தார். ஸ்ரீ கிருஷ்ணன, தான் ராஜ்யத்தை விரும்பவில்லை. அரசனாகவும் ஆகவில்லை.

ஹரிவம்சததிலும் ஏனைய புராணங்களிலும இவ்விதமாகவே 'கம்ஸவதம்' வர்ணிக்கப்பெற்றிருக்கிறது. 'கமஸவதம' எனபது உண்மையில் நிகழ்ந்ததுதான். ஆனால் அது சம்பந்தமான மற்ற விஷயங்கள் உண்மையாக நடக்கவில்லை. அவைகள் நம்பத்தக்கவைகள் அல்ல. தேவரிஷியான நாரதர் ஒருவர் இருந்தாரென்று நம்பினாலும் நம்பலாம; ஆனால் எந்த ஆகாசவாணியின் வார்த்தையால் கம்ஸனுக்குப் பயம் உண்டானதென்று நினைக்கிறார்களோ அந்த ஆகாசவாணியென்பது நம்பத்தக்கதில்லை. அதைத்தவிர்த்து, இரண்டு இடைக்குலகுழந்தைகள் அங்கு வந்து சண்டை ஒன்றும் செய்யாமல் சபையின் மத்தியில் மதுரையினரசனைக் கொன்றார்கள் என்பது இலகுவாய் நம்பத்தக்கதல்ல ஆகையால் பழைமையான கிரந்தமாகிற மகாபாரதத்தில் இவ்விஷயத்தைப்பற்றி சொல்லியிருக்கிறதா எனபதை ஆராயவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. மகாபாரதம் ஸபாபர்வம் ஜராஸந்த வத பர்வாத்தியாயத்தில் பூர்வவிருத்தாந்தத்தைக் குறித்து ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டாரிடம் சொன்னார்.

“கொஞ்சக்காலத்துக்குமுன், யாதவர்களைவென்று கமஸன், பார்ஹத்ரதனென்ற அரசனின் குமாரிகளான, 'ஸஹதேவை' 'அனுஜை' என்ற இரண்டு கன்னிகைகளை மணஞ்செய்துகொண்டான. இக்கொடியன் தன் கைவலிமையால் ஞாதிகளை முறியடிதது, யாவருக்கும் முக்கியனாகக் கிளம்பிவிட்டான். போஜவம்சஸ்தர்களான க்ஷத்திரியப்பெரியோர்கள், மூடனும துஷ்டனுமான கம்ஸனின் துர்நடத்தையைக்கண்டு மிகவும வருந்தி உறவினர்களைத் துறக்கும்படி எங்களைத தூண்டினார்கள். அககாலததில அக்ரூரருக்கு விவாகம்

செய்துவைத்து ஞாதிகளின் நன்மைக்காக பலபத்ரரும் நானும்கூடிக் கம்ஸனை வதைததுவிட்டோம்'' என்று பிருந்தாவனத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணபலராமர்களைக்கூட்டி வந்ததான விருத்தாந்தம் யாதொன்றும் இக்கிரந்தத்தில காணவில்லை. மேலும கமஸ வதத்துக்கு முன்னமேயே ஸ்ரீகிருஷ்ணபலராமர்கள் மதுரையில வசித்து வந்தார்கள் என்று தெரியவருகிறது. மேலும ஞாதிகளை விட்டு விலகும்படி ஸ்ரீகிருஷ்ணன் யாதவப்பெரியோர்களைத தூண்டினார்; அதாவது தம்மைக்காத்துககொள்ளத் தக்க ஊரைவிட்டு ஓடிவிடும்படி சொன்னார்; என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணன் கம்ஸனைக் கொன்றுவிட்டது ஞாதிகளின் க்ஷேமததுககாகவே. இக்காரியத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பலராமரைத்தவிர வேறு எவராவது உதவிபுரிந்தார்களா என்பது வெளிப்படையாய்த் தெரியவில்லை. அவர்களுக்கு மற்றயாதவர்களாவது ஒத்தாசை செய்தார்களோவென்றுவது வெளியாகவில்லை. ஆனால் அவர்கள் ஒருவராவது கம்ஸனுக்கு உதவிபுரியவில்லையென்று ஸ்பஷ்டமாய்த தெரிகிறது. தாங்கள் எல்லாருக்கும கம்ஸன் கெடுதிசெய்ததால், வலிமையுள்ள ராமகிருஷ்ணர்களைத தலைவர்களாகக் கொண்டு கமஸனைசம்காரஞ்செய்ய அவர்கள் ஏற்பாடுசெய்தார்களென்றும் தெரியவருகிறது. இதைத்தவிர வேறு ஒரு உண்மை சரித்திரக் கதையும் அங்குககாணக்கிடைக்கவில்லை.

மேலும் இவ்விடத்தில மற்றொரு உண்மையான சரித்திரக் கதையையும காணலாம. கமஸனைககொன்ற பிறகு அவன தகப்பனான உக்ரஸேனரை, ஸ்ரீ கிருஷ்ணன் யாதவர்களின தலைமை ஸ்தானத்தில் ஸ்தாபித்தார் என்பது மற்றொரு உண்மை சரித்திரக்கதை. ஏனெனின மகாபாரதத்தில உக்ரஸேனரை யாதவர்களின தலைவராக வர்ணிக்கப்பெறறிருக்கிறது.

அரசனை எவன கொல்கிறானோ அவனே அவ்விராச்சியத்துக்கு உரியவனென்ற ஒரு வழக்கமும நியாயமும் அந்ததேசத்தில் தொன்றுதொட்டு ஏற்பட்டிருந்தன. கமஸனை ஜயித்தவரான ஸ்ரீகிருஷ்ணனால் இலகுவாய்ச் சிங்காதனத்தில் ஏறியிருககமுடியும். ஆனால் அவர் அப்படிச்செய்யவில்லை. ஏனெனில் தர்மப்படி அத்தேயததாசன் உக்

ரசேனனேயாவான். அவரைப் பலவந்தமாக வெருட்டிவிட்டு "கம்ஸன்" சிங்காதனமேறினான். ஸ்ரீகிருஷ்ணனுக்குத் தர்மமே பிரதானம். அவர் குழந்தைப்பருவமுதற்கொண்டு தர்மாத்மா. ஆகையால் ராஜ்யம் யாருடையதோ அவருக்கே அதைத் தந்துவிட்டார். அவர் தர்மத்துக்குக் கட்டுப்பட்டவரானதால் கம்ஸனைக் கொன்றார். பிறருக்கு நன்மைசெய்வதே தர்மம் என்று ஸ்ரீகிருஷ்ணனே திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார் என்பதை நாம் இக்கிரந்தத்தில் பிறகு காண்போம். மிகவும் துஷ்டனை கம்ஸனைக்கொன்றதால் எல்லா யாதவர்களுக்கும் ஹிதமுண்டானது. அவனைக் கொன்றபிறகு தயாசீலரும் *ஆதர்சபுருஷருமான ஸ்ரீகிருஷ்ணன் கம்ஸனைக்குறித்துத் துக்கித்துப்புலம்பினார் என்றவிவரமும் கிரந்தத்தில் எழுதப்பெற்றிருக்கிறது. கம்ஸவத சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்துகொள்வது யாதெனில், ஸ்ரீகிருஷ்ணன் மகாபலசாலி; காரியங்களை நிறைவேற்ற வல்லவன்; மிகவும் நீதிமான்; பரம தர்மாத்மா; பிறருக்கு எப்போதும் நன்மை செய்வோன்; மற்றவர்களுக்குக் கெடுதிசெய்வதில் பயந்தவன்; என்பதே. இதுமுதல் அவர் ஆதர்சபுருஷர் என்பது தெளிவாய்க் காணப்படுகிறது,

---

2-வது அதிகாரம்.

கல்வி கற்றல்

கம்ஸவதத்தின்பிறகு ஸ்ரீகிருஷ்ணனும் ராமனும் ஸாந்தீபினி சிஷியிடத்தில் வித்யாப்யாஸஞ் செய்வதற்காக ஸ்ரீகாசிக்குச்சென்றார்கள். 64 நாட்களில ஆயுத வித்தையில் தேர்ச்சிபெற்று, குருதக்ஷிணையைச் சமர்ப்பித்து மதுரைக்குத் திரும்பிவந்தார்கள். இதைத் தவிர ஸ்ரீகிருஷ்ணனின் வித்யாப்யாஸ சம்பந்தமாக வேறு விருத்தாந்தம் காணப்படவில்லை. நந்தன்வீட்டில் அவருக்கு எவ்விதக் கல்வி

---

* ஆதர்சபுருஷர்:— எவரைப்பார்த்து தாமும் அவர்போல் நடக்க வேணுமென்றும் இருக்கவேண்டுமென்றும் யாவரும் விரும்புகிறார்களோ அவ்விதமுள்ள பெரியோன் ஆதர்சபுருஷன்.

யாவது கற்பிக்கப்பட்டதென்று எப்புராணத்திலும் காணப்படவில்லை. மேலும் நந்தர் ஜாதியில் வைசியன். வைசியர்களின் தேசத்தில் அவன் அதிகாரம் செய்துவந்தான். அவன் வைசியனுயிருந்தும் கிருஷ்ண னுக்கு யாதொரு கல்வியும் கற்பிக்கவில்லையென்பது ஆச்சரியமாயிருக் கிறது. கல்வி கற்கும் பருவத்துக்கு முன் நந்தரது வீட்டைவிட்டு அவர் மதுரைக்கு அழைத்துப் புறப்பட்டாரென்று தோன்றுகிறது. முன் அதிகாரத்தில் எடுத்தெழுதப்பெற்ற ஸ்ரீ கிருஷ்ணவாக்கியத்தி லிருந்து, கம்ஸவதத்திற்கு வெகுகாலத்துக்கு முன்னிருந்தே கிருஷ் ணன் மதுரையில் வசித்துவந்தாரென்று அநுமானம் செய்யலாகும். இவ்விதமாகவே மகாபாரதம் ஸபாபர்வத்தில் ஸ்ரீ கிருஷ்ணனை சிசு பாலன் நிந்தனை செய்யும்போது கம்ஸன் வீட்டில் வயிறுவளர்ப்ப வன் என்று அவரைத் தூஷித்திருக்கிறான்.

“ யஸ்யசாநேந தர்மஜ்ஞ புக்தமந்நம் பலீயஸ꞉ ।
ஸசாநேநஹத꞉ கம்ஸ இத்யேதந்ந மஹாத்புதம் ” ॥

“எந்த பலசாலியான கம்ஸனின் சோற்றைத்தின்று கிருஷ்ணன் வளர்ந்தானே அக்கம்ஸனையே அவன் கொன்றனென்பது மிகவும் விந்தையல்லவா?” என்று சிசுபாலன் சொல்லியிருக்கிறான்.

ஆகையால் கல்வி கற்கும் வயது வந்தும் வாராமலுமிருக்கும்போ தே கிருஷ்ணன் மதுரைக்கு அழைத்து வரப்பட்டானென்று தெரி கிறது. கிருஷ்ணன் கோபிமார்களுடன் கூடி பிருந்தாவனத்தில் பால்யவிளையாட்டுகள் நடத்திக்கொண்டிருந்தானென்பதும், அங்கே அவன் கல்வி கற்கவில்லையென்பதற்கு மற்றொரு சாக்ஷியம். மதுரை யில் வசித்துவந்த காலத்தில் அவர் எவ்விதமான கல்விகற்றார் என்ப தைப்பற்றிய விவரமும் காணப்பெறவில்லை. ஸாந்தீபினி ரிஷியிடம் 64 நாட்களில் அஸ்திரவித்தை கற்றுக்கொண்டார் என்கிற கதை மாத்திரம் இருக்கிறது. அக்காலத்தவர்கள் கிருஷ்ணனை ஸாக்ஷாத் ஈசுவரன் என்று கருதியிருந்தார்கள். ஈசுவரனுக்குக் கல்வி கற்பிப் பதால் யாது பயன் என்று அவர்களுக்குள் சிலர் சொல்லிக்கொண் டார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் ஈசுவரனின் அவதாரமாயிருந்தும் மனித

நடபடிக்கைகளையே அனுசரித்தும் மனுஷ்ய சக்தியின் மூலமாகவே எல்லாக்காரியங்களையும் நிறைவேற்றியும் வந்தார் என்பதை நாம் முன்பே சொல்லியிருக்கிறோம். இவ்விதமாகவே அவருடைய மகிமையைப்பற்றி வெகுவாகப் பிரமாணங்களையும் காட்டுகிறோம். அவர் தமது மனித சக்தியை யடிக்கடி வெளிப்படுத்தியிருக்கிறார். மனுஷ்யசக்தியானது தானாகவே வெளிக்கிளம்பி எல்லாக் காரியத்தையும் செய்ய வல்லதாக ஆகுமானால் அது 'தைவிக' சக்தியேயாகும். ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பெரியோரால் கல்வி கற்பிக்கப்பட்டது என்றதற்கு ஸாந்தீபினி ரிஷியின் விருத்தாந்தத்தைத்தவிர மற்றும் பிரமாணமிருக்கிறது. மகாபாரதத்தில் அர்க்கியாபிஹரண பர்வாத்தியாயத்தில் ஸ்ரீகிருஷ்ணன் யாராலும் பூஜிக்கத்தருந்தவர் என்பதற்குப் பீஷ்மர் ஒருகாரணம் காட்டியிருக்கிறார். அதாவது; ஸ்ரீகிருஷ்ணன் எல்லா வேதவேதாங்கங்களிலும் கரைகண்டவர்; அவரைப்போல் வேதவேதாங்களறிந்த மற்றொருவரைக் காண்பதரிது என்று.

"வேதவேதாங்கவிஜ்ஞானம் பலம் சாப்யதிகம் ததா ।
ந்ருணாம் லோகே ஹி கோந்யோஸ்தி விசிஷ்ட꞉ கேசவாத்ருதே ॥

இவ்வுலகில் ஸ்ரீகேசவரைத்தவிர வேதவேதாங்கங்களின் அறிவிலும், பலத்திலும் சிறந்தவர் வேறு எவர் இருக்கிறார்"—மகாபாரதம் ஸபாபர்வம் 38-வது அத்தியாயம்.

ஸ்ரீகிருஷ்ணனுக்கு வேதங்கள் நன்றாய்த் தெரியும் என்ற விஷயத்தில் பிரமாணங்கள் அநேக இடங்களில் அகப்படுகின்றன. வேதத்தின் அறிவு அவருக்குத்தானாகவே தோன்றவில்லை. அவர் 'ஆங்கிரஸர்' என்ற மகரிஷியிடம் அத்தியயனம் செய்தார் என்று சாந்தோக்யோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அச்சமயம் பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் ஏற்பட்ட உயர்தரப்படிப்பையே 'தபஸ்' என்று சொல்லிவந்தார்கள். இக்காலத்தில் நாம் வனவாஸம் செய்து மூச்சையடக்கி கண்களை மூடிக்கொண்டு ஈசுவரத்தியானம் செய்தலையே 'தபஸ்' என்று சொல்லுகிறோம். தேவர்களில் சிலர் இவ்விதம் தபஸ் செய்தார்கள் என்று அநேகம் கிரந்தங்களில் சொல்லியிருக்கிறது.

விசேஷமாக பரப்பிர்ம்மமே சிருஷ்டிசெய்வதற்காகத்தானே தவம் செய்து பிறகு சிருஷ்டிசெய்தது என்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

> ஸொகாமயத வஹுஸ்யாம் ப்ரஜாயெயெதி
> ஸ தபொ தப்யத ஸ தபஸ்தப்த்வா ஸர்வ மஸ்ருஜத॥

அர்த்தம்:—நாம் பிரஜாசிருஷ்டிக்காகப் பலவாறாக ஆவோம் என்று அவர் விரும்பினார். அவர் தபஸ்செய்தார். தபஸ்செய்து சகல சிருஷ்டிகளையும் செய்தார். இவ்விடங்களிளெல்லாம் 'தபஸ்' என்பதற்கு என்ன அர்த்தமெனில் சித்தத்தை ஒரு நிலையில் நிறுத்தித் தன்னுடைய ஆத்மசக்திகளை ஒருங்கு சேர்த்து வெளிப்படுத்தலாம். ஸ்ரீகிருஷ்ணன் 10 வருஷம் வரை ஹிமாலயபர்வதத்தில் தபஸ்செய்தார் என்று மகாபாரதத்தில் சொல்லியிருக்கிறது. அசுவத்தாமாவால் தொடுக்கப்பட்ட 'பிரம்மசிரம்' என்ற அஸ்திரத்தால் உத்தரையின் கர்ப்பம் நழுவிவிடும்போலிருந்தபோது, இறந்த சிசுவை மறுபடியும் உயிர்ப்பிக்கிறேன் என்று உறுதிசெய்து என்னுடைய 'தபோ பலத்தைக் காண்பாயாக' என்று ஸ்ரீகிருஷ்ணன் அசுவத்தாமாவிடம் சொல்லியிருக்கிறார். இவ்வசனம் மகாபாரதம் ஐஷீகபர்வதத்தில் காணப்படுகிறது. ஆதர்சமனிதரின் கல்வியானது எல்லாராலும் போற்றப்பட்டு அனுசரிக்கப்படும் கல்வியேயாகும். முடிவிலும் அவ்விதமே காணப்படும். ஆனால் பிராசீன காலத்தில் எல்லாராலும் அனுசரிக்கப்படும் வித்தை எவ்விதமாயிருந்ததென்று இப்பொழுது யாராலும் அறியக்கூடவில்லையே என்ற விஷயம் மிகவும் துக்கிக்கத்தக்கது.

3-வது அத்தியாயம்

ஜராஸந்தன்

பாரதவர்ஷத்தில் வடபாதியில் ஒரு அரசன் சக்கரவர்த்தியாயிருந்தான். மற்ற அரசர்கள் அவனுடைய ஆளுகையை ஒப்புக்கொண்டு சிலர் கப்பம் கட்டுகிறவர்களாகவும் வேறு பலர் அவனுடைய உத்திரவுப்படி நடப்பவர்களாகவும் இருந்தபடியால் யுத்தகா

லத்தில் எல்லோருடைய உதவியும் அவனுகளுக் கிடைத்தது. சரித்திர காலத்தில் சந்திரகுப்தன், விக்கிரமாதித்தன், அசோகன், பிரதாபம்பொருந்தின குப்த அரசர்கள் ஹர்ஷவர்த்தனன், சிலாதித்யன், இவர்களும் பின்காலத்தில் பட்டாணியரசர்களும், மொகலாய அரசர்களும் மேற்சொன்ன பிரகாரம், சக்ரவர்த்திகளாக இருந்தார்கள், இந்துராஜ்யகாலத்தில் சக்ரவர்த்தியென்ற பதவி பெரும்பாலும் மகத தேச மன்னர்களிடமேயிருந்தது. நாம எக்காலத்தைக் குறித்து வர்ணனை செய்யத்தொடங்கினேமோ அக்காலத்தில் மகதமன்னன் வடக்குப்பகுதியில் சக்ரவர்த்தியாயிருந்தான். இவன்தான் பெயர் பெற்ற ஜராஸந்தன். அவனுடைய பலமும் பிரதாபமும், மகாபாரதத்திலும், ஹரிவமஸத்திலும் எல்லாப்புராணங்களிலும், மிகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. குருக்ஷேத்திர யுத்தத்தில் க்ஷத்திரியர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குருக்ஷேத்திரத்தில் இருகட்சியிலுமசேர்ந்து 18 அக்ஷோகிணி சேனை. ஜராஸந்தனிடம் மட்டிலும் 20 அக்ஷோகிணிசேனை. கம்ஸன் ஜராஸந்தனின் மாப்பிள்ளை. அவனுடைய இரண்டு கன்னிகைகளையும் கம்ஸன் விவாகம் செய்திருந்தான். கம்ஸன் கொல்லப்பட்டபிறகு தங்களின் புருஷனைக் கொன்றவனை சிக்ஷிக்கவேண்டுமென்று அப்பெண்கள் தகப்பனிடம் முறையிட்டழுதார்கள். அவன் ஸ்ரீகிருஷ்ணனை வதைப்பதற்காக பெரியசேனையுடன்வந்து மதுரையை முற்றுகை போட்டான். அவனுடைய சைன்யத்துடன் யாதவசேனையை ஒப்பிட்டுப்பார்த்தால் பிந்தியது மிகவும் சிறியதாகக் காணப்படும். அப்படியிருந்தும், தங்களுடைய சேனைத்தலைவர்களின் சாமர்த்தியத்தால் யாதவர்கள் ஜராஸந்தனை வெருட்டிவிட்டார்கள். ஆனுலும் ஜராஸந்தனின் படையை யழிப்பது யாதவர்களால் முடியாத காரியமாகவிருந்தது. ஏனெனில் ஜராஸந்தனின் சைனயம் கணக்கிலடங்காதது. ஜராஸந்தன் மறுபடியும், மறுபடியும் வந்து மதுரையைத் தாக்கினன், அடிக்கடி விரட்டப்பட்டும், வந்து வந்து முற்றுகை போட்டு உபத்திரவம் செய்தான். அடிக்கடி அடிபட்டு அவனது சைன்யம குறைந்துகொண்டு வந்தாலும் அது முற்றிலும் அழியவில்லை. கடலின் ஆழமான அலை அலைகளைப்போல் ஜராஸந்தனின சேனை பெரியதாக இருந்தது. அதின்

நிறைவும் குறைவும் தெரியவில்லை இவ்விதமாக ஜராஸந்தன் 18 தடவை முற்றுகை போட்டான். அதன் பின்னர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய யோசனையின் பிரகாரம் மதுரையை விட்டுவிட்டு இலகுவாகப் புகக்கூடாதவிடத்தில் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வாசம்செய்வதாக, யாதவர்கள் நிச்சயம் செய்தார்கள். சமுத்திரத்தீவில் துவாரகை என்ற நகரைக் கட்டிமுடித்து அதைக்காப்பதற்காக 'ரைவதக்' பர்வதத்தின்பேரில் கோட்டைகளையுமியற்றினார்கள். யாதவர்கள் துவாரகைக்கு வருமுன்னமேயே ஜராஸந்தன் மதுரையை 18 தடவை தாக்கினன்.

இதே சமயத்தில், ஜராஸந்தனைத தூண்டிவிடுவதற்கும் கிருஷ்ணனை எதிர்ப்பதற்கும் பலத்த எதிரியொருவன் தலைப்பட்டான். பாரத பூமியில் முன்காலத்தில் அங்கங்கே யவனர்களின் இராச்சியங்கள் இருந்தனவென்று அநேகக் கிரந்தங்களில் காணப்படுகிறது. பண்டிதர்கள், பாரததேசத்தின் பூர்வ குடிகளையே 'யவனர்கள்' என்றழைத்தார்கள். ஆனால் இந்தச்சித்தாந்தம் சரியல்ல. அவ்விஷயத்தில் அநேக சந்தேகங்கள் இருக்கின்றன. சக, ஹூண, கிரீக், முதலிய ஹிந்துவல்லாத ஜாதிகளையெல்லாம் 'யவனர்கள்' என்று பாரதவாசிகள் சொல்லிவந்தார்கள். அது எவ்விதமிருப்பினும், அக்காலத்தில் கால யவனன் என்ற ஒரு பலத்தவரசன் பாரதவருஷத்தில் மிகவும் பலமுள்ளவனுகக்கிளம்பினன். தன்சேனையுடன்வந்து அவன் மதுரையை முற்றுகையிட்டான். ஆனால் ரகஸ்யமறிந்த கிருஷ்ணபகவான் தன் சேனையின் உதவியைக்கொண்டு அவனுடன் போர்புரியவிரும்பவில்லை. தன்னால் அவனையெதிர்த்துமுறியடித்துவிடக்கூடுமென்றாலும், தனது ஸ்வல்ப சேனைக்கு இன்னும் குறைவு வரக்கூடுமென்று நினைத்து அவனுடன் சண்டைக்குப் போகவில்லை. இறந்தவர்கள் போக எஞ்சினவர்கள், ஜராஸந்தனது சேனையை வெல்ல முடியாதவர்களாயிருந்தார்கள். எல்லாப் பிராணிகளிடமும் தயவுள்ளவரான ஸ்ரீகிருஷ்ணன் தர்மத்தை நிலைநிறுத்துவதைத்தவிர மற்ற காரியங்களில் பிராணிகளின் ஹிம்சையை ஒருகாலும் விரும்பவில்லை. நியாயமான யுத்தங்கள் நிகழ்ந்தாலும் அச்சமயங்களில் யுத்தம் செய்யாமல், எப்பொழுது தர்மத்துக்குக் குறைவு வரும்போலிருக்கிறதோ அப்பொழுது மட்டும்

யுத்தம் செய்வது நியாயமென்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லியிருக்கிறார். காலயவனனுடனும் ஜராஸந்தனுடனும் யுத்தம் செய்வது தர்மயுத்தம்; தன்னையும் தன்னுடைய ஜனங்களையும் காத்துக்கொள்ளுவதற்காகவும், பிரஜைகளை இரக்ஷிப்பதற்காகவும் சண்டை செய்யாமலிருப்பது மிகவும் அதர்மம். சண்டைசெய்வதிலிருந்து ஜனங்களுக்கு நாசம் ஏற்பட்டாலும் தர்மசீலர்கள் அக்காலங்களில் சண்டைசெய்யவேண்டியது அவசியமே. எக்காரியம் செய்வதால் அதிகஜனங்களுக்கு நாசம் ஏற்படாதோ, ஜராஸந்தனுக்கு அழிவும் ஏற்படுமோ அந்த உபாயத்தை ஸ்ரீகிருஷ்ணன் கைக்கொண்டார் என்று மகாபாரதத்தில் ஜராஸந்தபர்வாத்தியாயத்தில் நாம் காண்போம். காலயவனன் விஷயத்திலும் அவ்வுபாயத்தையே அவர் அனுசரித்தார். தனது சைன்யத்துடன் காலயவனனை நேரில் எதிர்க்காமல் அவனைக்கொல்வதற்கு ஒருபாயம் செய்தார். தானே ஒருவராகக் காலயவனனின் சைன்யத்துக்குள் புகுந்தார். அவன் அவரைப்பிடிக்க முயன்றான். பிடிப்பதற்காகக் கையை நீட்டினான். ஸ்ரீகிருஷ்ணன் பிடிபடாமல் ஓட்டம்பிடித்தார். காலயவனன் பின்தொடர்ந்தான். வேதங்களிலும் யுத்தவித்தையிலும் ஸ்ரீகிருஷ்ணன் எவ்விதமதேர்ச்சி பெற்றவரோ அவ்விதமாகவே சரீரபயிற்சியிலும் சிறந்தவர். ஸ்ரீ கிருஷ்ணன் எவ்விதத்திலும் மேன்மை பொருந்தியவராயிருந்தார். காலயவனன் அவரைப் பிடிக்கமுடியவில்லை. காலயவனனால் துரத்தப்பட்ட ஸ்ரீகிருஷ்ணன் ஓர் மலைக்குகைக்குள் நுழைந்துவிட்டார். அவ்விடத்தில் 'முசுகுந்தர்' என்ற ஒருரிஷி நித்திரை செய்துகொண்டிருந்தார். குகையின் நடுவில் இருளின் மிகுதியால் ஸ்ரீகிருஷ்ணன் இருந்தவிடம் காலயவனனுக்குத் தெரியாமல், அந்தரிஷியானவர் தன் கண்ணுக்குப்புலப்பட்டவுடன், அவரைக் கிருஷ்ணன் என நினைத்துக் காலால் ஒரு உதை உதைத்தான். நித்திரை கலைந்து அவருடைய திருஷ்டி காலயவனன்மீது பட்டமாத்திரத்தில் அவன் சாம்பலாய்த் தீய்ந்தான். அதிப்பிராகிருதமான இந்தச் சமாசாரத்தை நாம் நம்புவது இயலாது. ஸ்ரீகிருஷ்ணபகவான் காலயவனனை யவனுடைய சைன்யத்தைவிட்டு வேருக்கித் தனிமையான இடத்துக்கு அழைத்துப்போய் அவனுடன் கைச்சண்டைபுரிந்து அவனைக்கொன்றுவிட்

டார் என்பதைமட்டும் நாம் நம்பமுடியும். காலயவனன் நாசமடைந்த பின் அவனுடைய சேனைகள் மதுரையைவிட்டு ஓடிப்போயின. அதன்பிறகு மறுபடியும் மதுரையை எதிர்க்க ஜராஸந்தன் விரும்ப வில்லை. இவ்விதமே ஹரிவம்சத்திலும் விஷ்ணுபுராணம் முதலான புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. யுதிஷ்டிரரின் சார்பாக ஸ்ரீகிருஷ்ணன் ஜராஸந்தனுடன் பழக்கம் செய்துகொண்டார் என்று எவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்விடத்தில் 18 தடவை யுத்தம் நடந்ததான கதை காணப்படவில்லை. யாதொரு யுத்தமும் நடந்ததாக ஸ்பஷ்டமாயுமில்லை. அங்கிருக்கும் விருத்தாந்தங்களிலி ருந்து ஜராசந்தன் மதுரையை ஒருதடவை யெதிர்த்தான்; ஆனால் ஹம்ஸன் என்ற ஜராசந்தனின் தோழனைப் பலராமர் கொன்றுவிட்ட தால் ஜராசந்தன் துக்கமடைந்து தன்னிடம் போய்விட்டான், என்று தெரியவருகிறது. அதையே யிவ்விடத்தில் எடுத்தெழுதுகிறோம். ''கம்ஸன் யாதவர்களை ஜயித்து பார்ஹத்ரதனின் இரண்டு குமாரிக ளான 'ஸஹதேவை' 'அனுஜை' என்ற கன்னிகைகளை விவாகம் செய் துகொண்டான். இத்துராத்மாவானவன் தனது கைவலிமையால் ஞாதிகளை ஜயித்து யாவருக்கும் முதன்மையாய்க் கிளம்பினான். போஜ வம்சத்தார்களான க்ஷத்திரியப்பெரியோர்கள் துஷ்டனைகம்ஸனின் துர் நடத்தையால் தொந்திரவுபட்டு ஞாதிவர்க்கத்தைத் துறக்கும்படி நம் மிடம் தூண்டினார்கள். "நாம் அக்காலத்தில் அக்ரூரருக்கு ஆஹுக ரின் கன்னிகையை விவாகம் செய்வித்து ஞாதிகளுக்கு நன்மைபுரிவ தற்காகவே யாதவர்களுடன்கூடிக்கம்ஸனையும் ஸுநாமாவையும் கொன் றோம்." 'யாதவர்களுக்குக் கம்ஸனிடமிருந்து பயம் ஒழிந்தது. ஆனால் சில நாட்கள்கழித்து ஜராசந்தன் மிகவும் பராக்கிரமசாலி யாகக் கிளம்பிவிட்டான். அக்காலத்தில் நாம் ஞாதிகளுடனும் பந் துக்களுடனும் ஒன்றுகூடி யோசனைசெய்ததாவது:—சத்துருக்களை யழிக்கவல்ல மகாஸ்திரங்களின் வலிமையால் இடைவிடாமலும் ஓயா மலும் 300 வருஷகாலம் யுத்தம் செய்தாலும் ஜராசந்தனின் சேனை யை மிச்சமின்றி அழிக்கமுடியாது. தேவர்களுக்குச்சமானமானவர் களாயும், தேஜஸ்விகளாயும் பலசாலிகளாயுமுள்ள ஹம்ஸனென்றும் டிம்பனென்றும் இரண்டு வீரர்கள அவனுடன் கூடவேயிருக்கிறார்கள்.

அவர்களை யஸ்திரங்களால் ஒருகாலும் கொல்லமுடியாது. இவ்விரு வீரர்களும் ஜராஸந்தனும் ஒன்றுகூடி மூவர்களும் சேர்ந்தால், மூவுலகங்களையும் ஜயிக்கவல்லவர்கள், "ஹே! தர்மபுத்திரரே! இது என்னுடைய அபிப்பிராயமாத்திரமல்ல. மற்ற அரசர்களும் இவ்விதமே ஒத்துக்கொள்ளுகிறார்கள்." "ஹம்ஸன் என்று பெயர்பெற்ற ஓர் அசுரன் இருந்தான். பலதேவர் அவனை யுத்தத்தில் கொன்றார். ஹம்ஸன் கொல்லப்பட்டான் என்கிற சங்கதியை ஜனங்களின் மூலமாக டிம்பகன் கேள்வியுற்று, ஒரே பெயருள்ள அவனுடைய தோழனை ஹம்ஸனை கொல்லப்பட்டான் என்று நிச்சயம்செய்து அவன் கங்காநதியில் விழுந்து பிராணனைவிட்டான். இந்த இரண்டுபேர்களும் இறந்துவிட்டதை ஜராசந்தன் கேட்டுத் தனது ஊருக்குத் திரும்பிவிட்டான் அப்பொழுது நாம் மதுரையில் சந்தோஷத்துடன் வசிக்க வாரம்பித்தோம்".

"சில நாட்கள் கழித்துத் தனது புருஷனின் மரணத்தால் துக்கத்தையடைந்தவளான ஜராஸந்தனின் குமாரி தன் புருஷனைக்கொன்றவனை மாய்க்கும்படித் தன் தகப்பனாரிடம், மன்றாடினாள். ஜராஸந்தனின் பலத்தையும் சாமார்த்தியத்தையும் குறித்து முன்னமே நாம் சொல்லியிருக்கிறோம். மறுபடியும் தங்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்:— 'எங்களுடைய மிகுந்த செல்வத்தைப் பங்குபோட்டு அதை யெடுத்துக்கொண்டு மேற்குத்திசைக்கு ஓடிவிட்டோம். மிகவும் அழகான "குதஸ்தலி" என்ற பட்டணத்தில் வாசம் செய்தோம். அவ்விடத்தில் கோட்டைகளைக் கட்டினோம்; விருஷ்ணி வம்சஸ்தர்கள் யுத்தப்பிரியர்கள் என்பதில் அதிசயமில்லை. ஸ்திரீகள்கூட சிரமமின்றியில் சண்டைபுரிய வல்லவர்களாயிருந்தார்கள்" என்று பகவான் சொல்லியிருக்கிறார்.

"ஹே! அரசனே! நாங்கள் பயமில்லாமல் அவ்வூரில் வசித்து வந்தோம். மகத தேசம் முழுமையும் வியாபித்துவிட்டோம். உயர்ந்தான 'ரைவதக' மலையைப்பார்த்து மிகுந்த சந்தோஷத்தையடைந்தோம். ஹே! குலத்தின் விளக்கே! நாங்கள் யாவரும் சாமர்த்திய முள்ளவர்களாயிருந்தும், ஜராஸந்தனுடைய தொந்தரவுக்குப்பயர்

மலையை யடைந்தோம். இப்பருவதத்தின் நீளம் மூன்று யோஜனை. அகலம் ஒரு யோஜனைக்கதிகம். ஒவ்வொரு யோஜனைக்கும் 100-100 வாசல்களும் தோரணங்களுமிருந்தன. 21 கொடிமுடிகளும் உண்டு. யுத்தத்தில் பிரியமுள்ளவர்களும் பலசாலிகளுமான க்ஷத்திரியர்கள் அங்கே எப்பொழுதுமிருந்துவந்தார்கள். ஹே! அரசனே! எங்களுடைய குலத்தில் 18000 பெயர்கள் அண்ணன் தம்பிமார்கள். ஆஹுகருக்கு 101 பிள்ளைகள். அவர்களெல்லோரும் தேவர்களுக்கொப்பானவர்கள்; சாருதேஷ்ணன் அவருடைய பிராதா; சக்கிரதேவன், ஸாத்யகி, நாம், பலபத்திரர், சாம்பன் ஆக 7 பேர்களும் ரதிகர்கள். கிருதவர்மா, அநாதிருஷ்டி, சமீகன், ஸமிதிஞ்சயன், கங்கன், சங்கு, குந்தி, ஆக 7 பேர்களும் மகாரதர்கள். இவ்விதமாகவே அந்தப்போஜனின் இருபுதல்வர்களும், அவ்வரசனும் மிகவும் பலமுள்ள வீரர்கள். மத்திம தேசமானது ஜராசந்தனால் ஆக்கிரமிக்கப்பட்டதை நினைத்து இவர்கள் யாவரும் யதுவம்சஸ்தருடன் கூடிக்கொண்டார்கள்''.

ஜராசந்தனின் உண்மையான விவரத்தில் ஒரு பகுதி மூலபாரதத்தில் காணப்படுகிறதென்று நமது நம்பிக்கை. இரண்டொரு கதைகள் 'வ்யூகங்க'ங்களாகவுமிருக்கலாம். ஹரி வம்சத்தைக் காட்டிலும், புராணங்களைக்காட்டிலும் மூல மகாபாரதமானது மிகவும் பழைமையானது. அதை நாம் நம்புவோமானால், ஸ்ரீகிருஷ்ணனை ஜராஸந்தன் எதிர்த்ததும், அவனால் 18 தடவை மதுரை தாக்கப்பட்டதும், அவன் 18 தடவை தோல்வியடைந்ததும் பொய்க்கதையாய் முடியும். அது எப்படியிருப்பினும், ஜராஸந்தனால் மதுரை யொருதடவை எதிர்க்கப்பட்டதும், அவன் முறிபட்டதுமட்டும உண்மை. "அவன் எதிர்க்க யத்தனம் செய்யுமுன் நாலாபக்கத்திலும் பரப்பாயிருக்கிற இடத்துக்கு மத்தியிலிருக்கிற மதுரையில் நாங்கள் இருந்தால் ஜராஸந்தனது எண்ணிறந்த சேனையைத் தோற்கடிப்பது முடியாத காரியமென்று நினைத்து, எவ்விடத்தில் கோட்டைகளைக் கட்டிச் சுவல்ப சேனையின் உதவியால் நாங்கள் எங்களைக்காத்துக்கொள்ளக்கூடுமோ அவ்விடத்திற்கு ராஜதானியை மாற்றினோம். ஜராஸந்தன் அவ்விடத்திற்கு வரவில்லை. ஜயம் அபஜயம் இவ்வார்த்தைகள் ஒன்றுமில்லை.'' என்று ஸ்ரீகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

இதிலிருந்து காணக்கிடைப்பது யாதெனில், யுத்தம் செய்வதில் ஸ்ரீகிருஷ்ணன் கரைகண்டவர்; அரசநீதியில் வல்லவர்; மேலும் காரியமில்லாமல் மனிதர்களை வதைப்பதில் மிகவும் வெறுப்புள்ளவர். ஆதர்ச புருஷரின் எல்லாக் குணங்களும் அவரிடம் படிப்படியாக விருத்தியடைந்தன.

4-வது அதிகாரம்.

ஸ்ரீ கிருஷ்ணனின் விவாகம்.

ஸ்ரீகிருஷ்ணனின் முதலாவது பாரியை ருக்மிணி. இவள் விதர்ப்ப தேசத்தரசனன பீஷ்மகரின் குமாரி. ருக்மிணியின் ரூபத்தையும் குணத்தையும் கேட்டு ஸ்ரீகிருஷ்ணன் அவளைத் தனக்கு விவாகம் செய்துகொடுக்கும்படி பீஷ்மகரைக் கேட்டுக்கொண்டார். ருக்மிணியும் ஸ்ரீகிருஷ்ணனிடம் ஆசைகொண்டவளாயிருந்தாள். ஆனால் ஸ்ரீகிருஷ்ணனின் எதிரியால் தூண்டப்பட்ட பீஷ்மகவாசர் ருக்மிணியை அவருக்குக் கொடுக்கவியலவில்லை. ஆனாலும் யாதவர்களும் தானும் பீஷ்மகருடைய நகர் சென்று அவளுடைய பந்துக்களின் சம்மதமில்லாமல் ருக்மிணியை எடுத்துவந்து தானகவே கல்யாணம் செய்துகொள்வதென ஸ்ரீகிருஷ்ணன் நிச்சயம் பண்ணினர். அவ்விதமே செய்தார். விவாக தினத்தன்று ருக்மிணியானவள் தேவாலயத்தில் தரிசனம் செய்துகொண்டு அதைவிட்டு வெளியேறி வரும்போது, ஸ்ரீகிருஷ்ணன் அவளை யெடுத்துத் தனது தேர்மீது வைத்துக்கொண்டார். ஸ்ரீகிருஷ்ணனின் வரவைக்கேட்டு பீஷ்மகரும் அவருடைய பிள்ளைகளும், அவரைச்சார்ந்த அரசர்களும், ஏதோ அநர்த்தம் வந்துவிட்டதாக நினைத்தார்கள். ஆதலால் அவர்கள் எல்லோரும் ஆயத்தமாயிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் தங்களுடைய சைன்யங்களுடன் ஸ்ரீகிருஷ்ணனைப் பின்பற்றி யோடினர்கள். ஸ்ரீகிருஷ்ணனையும் யாதவச் சேனையையும் தோற்கடிக்க முடியவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் ருக்மிணியைத் துவாரகைக்கு அழைத்துக் கொண்டு போய் அவளைச் சாஸ்திரப்பிரகாரம் விவாகம் செய்துகொண்டார்.

இதைத்தான் 'ஹரணம்' என்று சொல்லுகிறார்கள். 'ஹரணம்' என்றால் கன்னிகைக்குக் கெடுதிசெய்வது என்று அர்த்தம். கன்னிகைக்கு வரன் பிரியமாயிருந்து அவளும் மணம் செய்துகொள்ள விரும்பினால் அக்கல்யாணத்தை முடிப்பதில் என்ன கெடுதியிருக்கிறது? ருக்மிணியின் ஹரணத்தில் எவ்விதப் பிசகும் இல்லை. ஏனெனில் ஸ்ரீகிருஷ்ணனிடம் ருக்மிணிக்கு அதிக விருப்பம். இவ்விதமாக ஸ்ரீ கிருஷ்ணனுடைய அநுமோதனத்தின்பேரில் சுபத்திரையை அர்ஜ்ஜுனன் ஹரித்தது தவறல்லவென்பதை நீங்கள் இக்கிரந்தத்தில் பின் பாகத்தில் காண்பீர்கள். ஸ்ரீ கிருஷ்ணன் இவ்விதமாக ருக்மிணியை யபகரித்ததுசரியா? தவறா? என்று விசாரிக்கவேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. க்ஷத்திரிய அரசர்களின் விவாகத்தில் இரண்டு விதங்கள் இருக்கின்றன:—ஒன்று ஸ்வயம்வர விவாகம், மற்றொன்று 'ஹரணம'. ஒவ்வொரு சமயத்தில் க்ஷத்திரியர்களுடைய விவாகத்தில் இரண்டுவிதங்களும் நிகழ்ந்திருக்கின்றன. அவ்விதமே காசி யரசனின் புதல்வியான அம்பிகையின் விவாகத்தில் நடந்தது. அக்காலத்தில் ஸ்வயம்வரத்தை நடத்தியிருக்கலாம். ஆனாலும் பீஷ்மர் அவ்விதம் செய்யாமல் கன்னிகையை யபஹரித்துக்கொண்டுவந்தார்; ஸ்வயம்வரம் நடந்தாலும், ஹரணம் நடந்தாலும் யுத்தத்தில் பிரியமுள்ளவர்களான க்ஷத்திரியர்கள் சண்டைக்குக் கிளம்பி விடுவார்கள். ருக்மிணியின் ஹரணத்திலும், காவியத்தில் கூறியிருக்கிறதான இந்துமதியின் ஸ்வயம்வரத்திலும், யுத்தம் நிகழ்ந்ததெனக் காணலாம். மகாபாரதம் மூல பாகத்தில் ருக்மிணியை ஸ்ரீ கிருஷ்ணன் அபகரித்தார் என்ற கதை காணப்படவில்லை. சிசுபால வத அதிகாரத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் பின் வருமாறு கூறியிருக்கிறார்.

𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌣𑍍𑌯𑌾𑌮𑌸𑍍𑌯 𑌮𑍂𑌢𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑌾𑌸𑍀𑌨𑍍𑌮𑍁𑌮𑍂𑌰𑍍𑌷𑌤𑌃 ।
𑌨𑌚𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑍍𑌮𑍂𑌢𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋𑌵𑍇𑌦𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌮𑌿𑌵 ॥
𑌶𑌿𑌶𑍁𑌪𑌾𑌲𑌵𑌧 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 45 𑌤𑌮 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 15 𑌤𑌮 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃

"ருக்மிணியிடம் ஆசை வைத்தவனும், மூடனும், இறக்கப்போகிறவனுமான சிசுபாலன் அவளை யடையவில்லை. சூத்திரன் வேதச் சுருதியை யடைய முடியாததுபோல்"

சிசுபாலன் சொல்லுகிறான்:—

“ த்வத்பூர்வாம் ருக்மிணீம் க்ருஷ்ண ஸம்ஸத்ஸு பரிகீர்த்தயந் ।
விஶேஷத: பார்த்திவேஷு வ்ரீடாம் கஸ்மாந்ந யச்சஸி ॥

மந்யமாநோ ஹி க: ஸத்ஸு புருஷ: பரிகீர்த்தயேத் ।
அந்யபூர்வாம் ஸ்த்ரியம் ஜாது த்வதந்யோ மதுஸூதந ॥

ஷை 45-வது அத்தியாயம் 18, 19-வது சுலோகம்.

அர்த்தம்:—எனக்கென்று நிச்சயம் செய்திருந்த ருக்மிணியைப் பற்றிச் சபை நடுவில் பிரஸ்தாபம் செய்துகொண்டும், அரசர்களிடம் சொல்லிக்கொண்டும் வருகிற உனக்கு வெட்கமில்லையா? நல்லவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களில் உன்னைத்தவிர எவன் பிறனுக்கு நிச்சயம் செய்யப்பட்ட பெண்ணைக்குறித்துப் பெரியோர்களிடம் பிரஸ்தாபம் செய்வான்? இதிலிருந்து ருக்மிணியை ஸ்ரீகிருஷ்ணன் அபஹரிக்கவில்லையென்றும் அபகரித்ததை முன்னிட்டுச் சண்டை நிகழவில்லை யென்றும் தெரிகிறது.

உத்தியோக பர்வத்தில் வேறோரிடத்தில்.

“ யோ ருக்மிணீமேகரதேந போஜாந்
உத்ஸாத்ய ராஜ்ஞஸ்ஸமரே ப்ரஸஹ்ய ।
உவாஹ பார்யாம் யஶஸா ஜ்வலந்தீம்
யஸ்யாம் ஜஜ்ஞே ரௌக்மிணேயோ மஹாத்மா ॥

எவர் ஒரே தேருடையவராயிருந்தும், ருக்மிணியை எடுத்துக்கொண்டு சண்டையில் அரசர்களை வென்று அவளை விவாகம் செய்துகொண்டாரோ எவருக்கு ருக்மிணியிடம் மகாத்மான ஒரு புதல்வன் பிறந்தானே அந்த ஸ்ரீ கிருஷ்ணன் என்று வருணிதிருக்கிறது. மறுபடி வேறிடத்திலும் ருக்மிணி ஹரணத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. உத்யோக பருவத்தில் சேனையை யணிவகுக்கும் சமயத்தில் ருக்மிணியின் சகோதரனை ருக்மி யென்பான் பாண்டவர்

களின் படையின் மத்தியில் வந்து சேர்ந்தான். அந்த ருக்மியைப் பற்றியும் அங்கே சொல்லியிருக்கிறது. தனது புஜபலத்தினால் கர்வமடைந்த 'ருக்மி' யானவன் ஸ்ரீகிருஷ்ணன் ருக்மிணியை யெடுத்துப் போவதைப் பொறாமல் ஸ்ரீகிருஷ்ணனைப் பங்கப்படுத்தாமல் தான் ஊருக்குத் திரும்புவதில்லையென்று உறுதி செய்தான். பிறகு வெள்ளம் பெருகின கங்காநதிபோல் ஆயுதபாணியான பெரிய சேனையையழைத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனைத் தொடர்ந்து ஓடிவந்தான். பிறகு அவருக்குச் சமீபத்தில் நெருங்கவே, அவரால் தாக்கப்பட்டு தோல்வியடைந்து வெட்கத்துடன் திரும்பிவிட்டான். பெருத்த சேனையுடனும் அநேக யானைகளுடனும் கூடினதுமான 'போஜகூடம்' என்ற ஒரு நகரை ஸ்தாபித்தான. தற்காலம் அந்த போஜகூடவாசனான 'ருக்மி' ஒரு அக்ஷௌஹிணி சேனையுடன் பாண்டவர்களின் சமீபத்தில் வந்து சேர்ந்தான். ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பிரியம செய்யும்பொருட்டு, கவசம், வில், கத்தி முதலான வாயுதங்களுடனும், சூரியனைப் போல் ஒளி வீசும் கொடியுடனும் பாண்டவர்களுக்குத தெரியாமல் அவர்களின் சேனையில மத்தியில் நுழைந்தான். இந்தக்கதை உத்யோக பர்வம் 157-வது அத்தியாயத்திலிருக்கிறது. ஆகையால் பர்வ சங்கிரக அத்தியாயம் தொகுக்கப்பட்ட பிறகே 11 அத்தியாயங்கள் பாரதத்தில் நுழைக்கப்பட்டிருக்கின்றன. பிரக்ஷிப்தங்களான 11 அத்தியாயங்களும் 1000 சுலோகங்களும் எவை? ருக்மியைத் தள்ளிவிட்டதைக் கூறுகிற அத்தியாயத்துக்கும் மகாபாரதத்துக்கும யாதொரு சம்பந்தமுமில்லை. மகாபாரதத்தின் பர்வ சங்கிரக அத்தியாயத்தின் விவரம் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அப்பொழுது உத்யோகபர்வத்தில் 186 அத்தியாயங்களும் 6698 சுலோகங்களும் பிரக்ஷிப்தங்கள எனச் சொல்லியிருக்கிறோம.

𑌉𑌦𑍍𑌯𑍋𑌗𑌪𑌰𑍍𑌵 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌸𑌂𑌧𑌿𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑌿𑌶𑍍𑌰𑌿𑌤𑌂 ।
𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑌾𑌂 𑌶𑌤𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌷𑌡𑌶𑍀𑌤𑌿𑌰𑍍𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥

𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌷𑌟𑍍𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌤𑌾𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌶𑌤𑌾𑌨𑌿 𑌚 ।
𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌶𑍍𑌚 𑌨𑌵𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑌥𑍈𑌵𑌾𑌷𑍍𑌟𑍌 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥

இப்பொழுது மகாபாரதத்தில் 191 அத்தியாயங்கள் காணப்படு கின்றன. ஆகையால் 'வல்கு ஸம்ஹாரம்' எழுதப்பட்ட பிறகு 11 அத்தியாயங்கள் பிரக்ஷிப்தங்களாகப் பொருத்தப்பட்டிருக் கின்றன. ஆகையால் உத்தியோக பர்வத்தில் 7657 சுலோகங்கள் காணப்படுகின்றன. ஆகையால் ஓராயிரம் சுலோகங்கள் பிரக்ஷிப்தங்க ளாயிருக்கின்றன. இந்த 11 அத்தியாயங்களும், 1000 சுலோகங்களும் எவை? ஆகையாலிந்த 157 அத்தியாயங்களுக்குள் 11-வது அத்தி யாயமும் ஒன்று. இதைக்குறித்து விசாரித்தல் வேண்டும். ருக்மியை வெருட்டிவிட்டதைச் சொல்லுகிற அத்தியாயத்துக்கும் மகாபாரதத் துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. சைன்யத்துடன் 'ருக்மி' வந்த தும், அர்ஜுனனால் தள்ளப்பட்டதும் பிறகு துர்யோதனனாலும தள்ளிவிடப்பட்டதும், பிறகு தன்னூருக்குத் திரும்பிப்போனது மான விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த 157 அத்தியா யங்களும் பிரக்ஷிப்தங்கள். ருக்மிணி ஹரண விருத்தாந்தமும் பிரக்ஷிப் தம். மேலும், மகாபாரத யுத்தத்துக்கு முன்னமே ருக்மியானவன் பலராமருடன் சூதாடினதில் கலகம் வந்து அவரால் கொல்லப்பட் டான் என்று "விஷ்ணு புராண"த்திலிருக்கிறது. ருக்மிணியைச் சிசுபாலன் விரும்பினான். இது உண்மை. அவனுக்கு ருக்மிணி வாழ்க் கைப் படவில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் அவளை மணந்தார். விவாகத்துக்குப் பிறகு யுத்தம் நிகழ்ந்தது. ஆனால் ஹரணம் செய்ததான கதை மூல பாரதத்தில் காணப்படவில்லை. அக்கதை ஹரிவம்சத்திலும் புராணங் களிலும் காணப்படுகிறது.

சிசுபாலன் பீஷ்மரை நிந்திக்கும் சமயத்தில், காசியரசன் கன் னிகைகளை யபகரித்ததற்காக அவரைத் திட்டினான். ஸ்ரீ கிருஷ்ணனைத் திரஸ்கரித்த சமயத்தில் ருக்மிணி ஹரணத்தின் செய்தியாதொன்றும் காணப்படவில்லை. ஆகையால் 'ருக்மிணி' எடுத்துக்கொண்டுபோகப் படவில்லை என்று நிச்சயிக்கலாம். முன் சொல்லிய விஷயங்களால் சிசுபாலன் ருக்மிணியைத் தனக்கு விவாகம் செய்விக்கும்படி பீஷ்ம கரை விரும்பிக் கேட்டான். ஆனால் அவர் அவளை ஸ்ரீ கிருஷ்ண னுக்கே கொடுத்துவிட்டார். உடனே அவருடைய குமாரன் 'ருக்மி' சிசுபாலனின் சார்பாக விவாதத்தைக் கிளப்பிவிட்டான். அநிருத்

தனின் விவாக காலத்தில், ருக்மி பலராமருடன் சூதாடிக் கலகம் வந்து அடிபட்டு மடிந்தான்.

5-வது அத்தியாயம்.

நரக வதம்.

கிரந்தத்தில் சொல்லியிருக்கிறதாவது:—

நரகன் என்று பூமிதேவிக்கு ஒரு புத்திரன் இருந்தான். பிராக்ஜோதிஷமென்பது அவனுடைய ராஜதானி. அவன் மிகவுங் கொடியவனாயிருந்தான். இந்திரனே துவாரகைக்கு வந்து அவனைப்பற்றி ஸ்ரீ கிருஷ்ணனிடம் முறையிட்டான். அவன் அநேக துர்க்கடத்தைகளைச் செய்துகொண்டும், இந்திரன் விஷ்ணு இவர்களின் தாயாரான 'அதிதி' தேவியின குண்டலத்தைத் திருடிக்கொண்டும் வந்துவிட்டான். ஸ்ரீ கிருஷ்ணன் இந்திரனிடம் உறுதி சொல்லி பிராக்ஜோதிஷத்துக்குச் சென்று நரகாசுரனை வதைத்தார். நரகனுக்கு 16000 கன்னிகைகளிருந்தார்கள். அவர்களியாவரையும் கிருஷ்ணன் அழைத்து வந்து விவாகம் செய்து கொண்டார். நரகனின் தாயாரான பூமியானவள் 'அதிதி'யின குண்டலத்தைக் கொணர்ந்து ஸ்ரீகிருஷ்ணனிடம் கொடுத்தாள். ஸ்ரீகிருஷ்ணன் வராக அவதாரம எடுத்துப் பூமியைக்கிளப்பி விடுவதற்காக பூமியைத தொட்டாரோ அந்தஸ்பர்சத்தால் பூமி கர்ப்பமாகி நரகனைப பெற்றாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா விஷயங்களும பிராகிருதமானவைகள், பொய்யானவைகள். விஷ்ணு வராகாவதாரம எடுக்கவில்லை, ஆனால் பிரஜாபதியானவர் பிருதிவியைக் கிளப்பி விடுவதற்காக வராஹ ரூபத்தைக் கைக்கொண்டார் என்று வேதத்திலேயே சொல்லப்பட்டிருககிறது. ஸ்ரீ கிருஷ்ணன் காலத்தில் நரகாஸுரன பிராக்ஜோதிஷத்தில் அரசனாக இருக்கவில்லை. அக்காலததில் பகதத்தன் என்பான் அந்நகருக்கு ராஜாவாக இருந்தான். இவன குருக்ஷேத்திர யுத்தத்தில் அர்ஜுனன கையால் மாண்டான். ஆகையால் இந்திரன் துவாரகைக்கு வந்ததும் பூமி கர்ப்பவதியானதும், ஒரே மனிதனுக்கு 16000 பெண்கள் இருந்தார்கள்

என்பதும், பிராகிருதமான உபந்யாஸங்கள். ஸ்ரீகிருஷ்ணன் 16000 கன்னிகைகளை விவாகம் செய்துகொண்டார் என்பது கட்டுக்கதை. இதை வாசிப்போருக்கு அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை.

விஷ்ணு புராண ரீதியாக நரகாசுர வதம் முதல் பாரிஜாத ஹரணம் வரையிலும் உண்மையல்ல. ஸ்ரீகிருஷ்ணன் 'திதி'யின் குண்டலத்தை யெடுத்துக்கொண்டு அதை யவளுக்குக் கொடுப்பதற்காக சத்தியபாமையையு மழைத்துக்கொண்டு இந்திரனின் ஆலயத்துக்குச் சென்றார். அவ்விடத்தில் சத்தியபாமை, பாரிஜாதத்தை விரும்பினாள். பாரிஜாதத்தை யெடுத்ததிலிருந்து, இந்திரனுடன் கிருஷ்ணனுக்குச் சண்டையிட நேர்ந்தது. இந்திரனே சண்டையில் தோற்றான். நாம் முன்னமேயே, விஷ்ணு புராணத்தை ஹரி வம்சத்துக்கு முந்தியதென்று நிரூபித்திருக்கிறோம். ஆதலாலிவ்விடத்தில் விஷ்ணு புராணத்தையே யனுசரிக்கிறோம். இவ்விரு கிரந்தங்களிலும் சொல்லியிருக்கிற விருத்தாந்தங்கள் அற்புதமானவைகள், பிராகிருதமானவைகள். இந்திரன், இந்திராலயம், பாரிஜாதம் இவைகளிலேயே நம்பிக்கையற்றவர்களாக விருக்கும்போது பாரிஜாத ஹரண விருத்தாந்தம் முழுமையும் நம்மால் நம்பத்தக்கதில்லை.

இதற்குப்பிறகு பாணாஸுர வதத்தின் விருத்தாந்தம் அதிலும் அதிப்ராகிருதமான விஷயங்களும், நடக்கக்கூடாத சங்கதிகளும் நிரம்பியிருக்கின்றன. அவற்றையும் நாம் தள்ளிவிட வேண்டியது. அதன் பிறகு பௌண்டிர வாசுதேவன் வதமும் வாரணாசியை நெருப்புக்கிரையாக்கியதும் காணப்படுகிறது. இக்கதையில் கொஞ்சம் உண்மையிருக்கிறதென்று தெரிகிறது. பௌண்டிர அரசன் இருந்தான் என்பது உண்மை. இவ்விதமே பௌண்டிர ஜாதி யென ஓர் ஜாதி யிருந்ததும் உண்மை. இதிகாஸ காலத்துக்கு முன்பே பரதேச சரித்திர புத்தகங்களிலே காணப்படுகிறது. ஸ்ரீராமாயணத்தில் பௌண்டிரர்களை தாக்ஷிணாத்யர்கள் என்று சொல்லியிருக்கிறது. மகாபாரதத்தில் அவர்களைத் தற்காலத்திய வங்காள தேசத்தில் மேற்குப் பக்கத்திலிருப்பவர்களாக வர்ணித்திருக்கிறது. குரு க்ஷேத்திர யுத்தத்தில் பௌண்டிரர்கள் வந்திருந்தபோது அவர்களை நாகரீகமற்ற ஜாதிகளின்

மத்தியில் கணக்கிட்டிருக்கிறார்கள். தச குமார சரித்திரத்தில் அவர்களுடைய விருத்தாந்த மிருக்கிறது. சீன தேசத்து யாத்திரிகன், அவர்கள் வங்காள தேசத்தில் ஸ்தாபிக்கப்பெற்றதைப் பார்த்துவிட்டுப் போயிருக்கிறான். பௌண்டிர வர்த்தனமென்ற ஊரில் அவர்களின் ராஜதானியிருந்ததை அவன் கண்ணுற்றுச் சென்றிருக்கிறான். ஸ்ரீகிருஷ்ணனுடைய காலத்தில் அவர்களுக்கரசனாயிருந்தவன் பெயர் வாஸுதேவன். வாஸுதேவன் என்ற வார்த்தைக்கு அநேக அர்த்தங்கள் உள்ளன. வசுதேவரின் புத்திரன் வாஸுதேவன். எவன் எல்லாப்பிராணிகளுக்கும் விராமஸ்தானமோ அல்லது எல்லா பூதங்களுக்கும் வாஸஸ்தானமோ, அவனும் வாஸுதேவன்.

வஸுஸ்ஸர்வத்ர ஸம்வாஸாத் விஶ்வாந்யஸ்ய ச ரோமஸு ।
ஸ ச தேவ: பரம் ப்ரஹ்ம வாஸுதேவ இதி ஸ்ம்ருத: ॥

வஸுவென்றால் எல்லாருக்கும் வாஸஸ்தானம். எவருடைய ரோமங்களில் எல்லா உலகங்களுமிருக்கின்றனவோ அவரே பரப்பிர்மா. ஈசுவரன். அவர் வாஸுதேவர் என்றழைக்கப்படுகிறார். ஆகையால் எவர் ஈசுவரனின் அவதாரமோ அவரே வாஸுதேவர் என்ற பெயருக்குரியவர். துவாரகையிலிருக்கிற வாஸுதேவன் போலி வாஸுதேவன் என்றும், தானே உண்மையான வாஸுதேவனாகிய ஈசுவராவதாரம் என்றும், பௌண்டிர வாஸுதேவன் முழங்கினான். சக்ரம் 'ஹஸ்தம்' 'முத்ரா' முதலானவைகளுக்குத் தானே அதிகாரியென்றும், தன்னிடமே அவைகளை யனுப்பிவிட வேண்டுமென்றும் அவைகளைத் தன்னிடம் ஒப்புவிக்கும்படிக்கும் அவன் ஸ்ரீகிருஷ்ணனுக்குச் சொல்லியனுப்பினான். ஸ்ரீகிருஷ்ணன் அப்படியே யாகட்டும் என்று சொல்லிப் பௌண்டிர ராஜ்யத்துக்குப்போய் அஸ்திரங்களைப் பௌண்டிரகனிடம் விட்டெறிந்து அவனைக் கொன்றுவிட்டார். வாராணஸியின் அதிபதிகள் பௌண்டிரகனின் கக்ஷியைச் சேர்ந்தவர்களாகையால் அவனிறந்தபிறகு ஸ்ரீகிருஷ்ணனுடன் விரோதித்து யுத்தம் செய்தார்கள். ஆகையாலவர் வாராணஸியை யாக்கிரமித்து அந்நகரை யெரித்துவிட்டார். இவ்விடத்தில், சத்துருவைக் கொல்லுதல் அதர்மமில்லை. ஆனால் பட்டணத்தைக் கொளுத்துதல் தர்மமாகாது, மிகவும் தர்மாத்

மாவான கிருஷ்ணன் இவ்வித அக்கிரமச் செய்கையை எதற்காகச் செய்தார் என்பதைக்குறித்து நம்பக்கூடியதான விவரம் ஓரிடத்திலும் கிடைக்கவில்லை.

விஷ்ணு புராணத்தில் சொல்லப்பட்டதாவது:—

காசியரசன் ஸ்ரீ கிருஷ்ணனுடைய கையால் மாண்டான். அவனுடைய மகன் மகாதேவரைக்குறித்துத் தவம் செய்து கிருஷ்ணனைக் கொல்வதற்காக 'க்ருத்யா' என்பது உண்டாகும்படி வரமளிக்கும்படி அவரைப் பிரார்த்தித்தான். அவ்விதமே பகவானன மகாதேவர் வரம் தந்தருளினர். 'க்ருத்யா' என்பதை 'சூனியவாாம்' என்று சொல்லுவார்கள். அதாவது எச்ஞத்திலிருந்து ஓர் பெரிய சத்தி கிளம்பி எதிரியைக் கொல்ல முயலும். கிருத்தியையானது கிளம்பி பயங்கரமான உருவத்துடன் கிருஷ்ணனைக்கொல்வதற்காக ஓடிற்று. ஸ்ரீ கிருஷ்ணன் தனது சுதர்சனச் சக்கரத்துக்குக் கட்டளையிட்டார். விஷ்ணுவின் சக்கிரத்தின் சக்தியால் மகாதேவரின் வரத்தாலுண்டானதாயிருந்தும் 'க்ருத்யா' தன் வலிமை யிழந்ததாக ஓடிற்று. அது வாராணஸியில் புகுந்தது. அதைப் பின் பற்றி வந்த சக்கிராயுதத்தின் ஜ்வாலையால் வாராணஸி யெரிந்தது. இது மிகவும் பிராகிருதமாயும் நம்பத்தகாததுமான விருத்தாந்தம். ஹரிவம்சத்தில் பௌண்டிரகவதக் கதையிருக்கிறது ஆனல் அதில் வாராணஸி எரிந்த கதை கிடையாது. இதைப் பற்றிய பிரசங்கத்தின் கொஞ்சபாகம், மகாபாரதத்தில் இருக்கிறது. ஆகையால் வாரணஸி தீவாய்ப்பட்ட கதை முழுப் பொய்யென்று நாம் தள்ளிவிடக்கூடாது ஸ்ரீ கிருஷ்ணன் வாரணஸியை எரித்ததான கெட்ட காரியத்துக்கு ஏன் உடன்பட்டார் என்றதற்குத் தகுந்த காரணம் ஒன்றும் புலப்படவில்லை.

யுத்தத்தின் விருத்தாந்தம் ஓர்புறமிருக்கட்டும். அதைத்தவிர உத்யோகபர்வம் 41-வது அத்தியாயத்தில் அர்ஜுன வாக்கியத்தால் ஸ்ரீ கிருஷ்ணனல் முடிக்கப்பட்ட காந்தாரஜயம், பாண்டியஜயம், கலிங்கஜயம், சால்வஜயம், ஏகலவ்யனின் வதம் இவ்விதக் கதைகளிருக்கின்றன. இவைகளில் சால்வராஜனை ஜயித்த விருத்தாந்தம் மகாபாரதம் வனபர்வத்திலிருக்கிறது. இதைத்தவிர விஸ்தாரமான விருத்தாந்

தத்தை நாம் யாதொரு கிரந்தத்திலும் காணவில்லை. ஹரிவம்ச புரா ணங்கள் இவைகள் இயற்றப்பட்ட காலத்துக்கு முன்னமேயே யுத்தத் தைப்பற்றிய "கிம்வதந்தீ" (ஜனங்களின் வார்தை) அழிந்துபோய் விட் டதென்று தோன்றுகிறது; ஹரிவம்சத்திலும் பாகவதத்திலும் புதிய விருத்தாந்தங்கள் அநேகமிருக்கின்றன. அவைகள் மகாபாரதத்தி லாவது விஷ்ணு புராணத்திலாவது காணப்பெறுமையால் அவைகளை நாம் தள்ளுபடிசெய்கிறோம்.

6-வது அத்தியாயம்.

துவாரகையில் வாசம்—ஸ்யமந்தகம்.

துவாரகையில் ஸ்ரீகிருஷ்ணன் அரசனாக இருக்கவில்லை. மிகவும் யோசித்துப் பார்த்துத் தெரியவருகிற தென்னவென்றால், யூரோப் பின் (Europe) சரித்திரத்தில் எதை (Oligarchy) ஸ்வல்ப ஜனங்க ளின் ஆளுகையென்று சொல்லுகிறார்களோ அவ்வித ஆளுகையே துவாரகையில் இருந்துவந்தது. துவாரகையில் ஜனங்களின் தலைவர் களாக யாதவர்கள் இருந்தார்கள். அவர்களுக்குள் ஒவ்வொருவரும் ஏற்றத் தாழ்ச்சி யன்னியில் சமானமானவர்களாகவே யிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் வயது சென்றவர்களை முக்கியஸ்தர்களாகக் கருதிவந்தார்கள். ஆகையால் உக்ரஸேனனுக்கு அரசன் என்று பெயர் வந்தது. ஆனாலும் இம்முக்கியஸ்தனுக்கு எல்லாக்காரியங்களி லும் முக்கிய அதிகாரம் இல்லை. பராக்கிரமத்தில் எவர் சிறந்தவரோ அவருக்கே தலைமை ஸ்தானம் கிடைக்கும். பலத்திலும் வீர்யத்தி லும் புத்தியிலும், பிரதாபத்திலும் ஸ்ரீகிருஷ்ணனே யாதவர்களுக் குள் சிறந்தவர், ஆதலால் அவரே தலைவராயிருந்தார். அவருடைய அண்ணனை பலராமரும், மற்றும் வயதில் பெரியோரான கிருதவர் மாமுதலிய மற்ற யாதவர்களும் அவருக்கடங்கியிருந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களுடைய நன்மையையே கருதிவந்தார். ஸ்ரீகிருஷ் ணன் அங்கேயே யிருந்து வந்ததால் எல்லாக் காரியங்களும் நிறை வேறின. ஸ்ரீகிருஷ்ணன் அநேக இராச்சியங்களை ஜயித்து மிகவும் பொருள் சம்பாதித்தும் ஞாதிகளுக்குக் கொடாமல் தானே எடுத்துக்

கொள்ளவுமில்லை. தானுகமட்டும் அனுபவிக்கவுமில்லை. அவர் எல்லோ ரிடத்திலும் ஒரே மாதிரியாக நடந்துவந்தார். ஒரேவிதமாகப் பிரியம் உள்ளவராயிருந்து வந்தார், யாவர்க்கும் நன்மை செய்து வந்தார், அவருடைய பலத்துக்கும் பராக்கிரமத்துக்கும் அஞ்சி யாதவர்கள் அவருக்குட்பட்டிருந்தார்கள் என்பது சரி. ஆனாலும் அவர்களுக்கு அவரிடம் பொறுமையால் விரோதமில்லாமல் இருக்கவில்லை. இவ் விஷயத்தைக்குறித்து ஸ்ரீகிருஷ்ணன் நாரதரிடம் சொல்லி, நாரதர் வாக்கிலிருந்து பீஷ்மர் கேள்வியுற்றுப் பின்னவர் யுதிஷ்டிரருக்குச் சொல்லியிருக்கிறார். அக்கதை உண்மையா யிருப்பினும் பொய்யா யிருப்பினும் உலகத்துக்குப் புத்தி புகட்டுவதற்காக நாம் மகாபாரதம் சாந்தி பர்வத்திலிருந்து அவர் சொன்னதை எடுத்தெழுதுகிறோம்.

''ஞாதிகளுக்கு ஐசுவரியத்தில் பகுதியைக்கொடுத்து அவர்களின் தீச்சொற்களைக் கேட்டுக்கொண்டு அவர்களின் அடிமைபோல் நாம் இருந்துவந்தோம். அரணிக் கட்டையைக் கடைந்து எவ்விதம் அக் னியை எடுக்கிறார்களோ அவ்விதமே ஞாதிகளின் கெட்ட சொற்க ளால் நம்முடைய மனம் கொளுத்தப்பட்டது. பலராமரும் 'மஹ'ரும் வடிவிலும், நம்முடையகுமாரனை பிரத்யும்னன் அழகிலும் ஒப்பற்ற வர்கள் என்று யாவராலும் கருதப்பட்டார்கள். மேலும் 'ஸம்யக' 'வ்ருஷ்ணி' வம்சஸ்தர்கள் மிகவும் பராக்ரமசாலிகளாயும், உற்சாகமுள்ள வர்களாயும், முயற்சியுள்ளவர்களாயுமிருந்தார்கள். அவர்களுக்கு உதவி செய்யாதவர்கள் நஷ்டமடைந்தார்கள். எவர்கள் ஒத்தாசை செய்தார் களோ அவர்கள் மிகுந்த லாபத்தையு மடைந்தார்கள். அவர்கள் எல் லோரும் நமக்குச் சகாயம் செய்ததால் நாம் சிரமமன்னியில் காலத் தை நடத்தி வந்தோம். ஆஹுகரும், அக்ரூரரும் நமக்கு மிகவும் நண்பர்கள். ஆனாலும் ஒருவரிடம் அதிக சிநேகத்தைக் காட்டினால் மற்றவருக்குக் கோபம் வந்துவிடுமென்று நாம் ஒருவரிடமும் சிநே கத்தை வெளிக்காட்டவில்லை. எல்லோரிடமும் அதிகமாகப் பிரீதியை வைத்திருந்ததால் ஒருவரையும் விட்டுவிடுவது நமக்கு மிகவும் கடின மாயிருந்தது. அதன்பிறகு நாம் நிச்சயம் செய்ததாவது:—ஆஹுக ரும் அக்ரூரரும் எவருடைய பக்ஷத்திலிருக்கிறார்களோ அவருக்குத் துக்கத்துக்கே இடமில்லை; மேலும் அவர்கள் யாருடைய சார்பாக

இருக்கவில்லேயோ அவரைக்காட்டிலும் அதிகமாக துக்கம் உள்ளவர் வேறு ஒருவருமில்லே. எப்படியிருந்தாலும் சூதாடுகிற இரு சகோதரர்களின் தாயாரைப்போல் இருவர்களுடைய ஜயத்தையும் நாம் விரும்பினேம். இவ்விரு மித்திரர்களேயும் பிரியப்படுத்தும் பொருட்டாக நாமிவ்விதக் கஷ்டத்துக்குள்ளானேம்''. இக்கதைக்குத் திருஷ்டாந்தமாக ஸ்யமந்தக மணியின் விருத்தாந்தத்தை இதைப்படிப்போருக்குச் சொல்ல விரும்புகிறேம். ஸ்யமந்தக மணியின் விருத்தாந்தம 'ப்ராக்ருத' சங்கதிகள் நிரம்பியது. அச்சங்கதிகளின் எவை உண்மையானவைகளோ, எவை பொய்யானவைகளோ நம்மால் சொல்ல முடியாது. அவை எப்படியிருந்தாலும் படிப்போருக்கு அதைச் சொல்ல விரும்புகிறேம்.

ஸத்ராஜித்தென்ற ஓர் யாதவன் துவாரகையிலிருந்து வந்தான். அவனுக்கு எல்லோராலும் விரும்பத் தகுந்ததும், மிகவும் ஒளியுள்ளதுமான ஒரு ரத்நம் கிடைத்தது. அந்த மணியின் பெயர் ஸ்யமந்தகம், அது யாதவர்களுக்குத் தலேவரான உக்ரஸேநருக்கே தகுந்தது. ஆனல் ஞாதிகளுக்குள் விரோதம் ஏற்படுமென்று பயந்து, உக்ரஸேநருக்குக் கொடுக்கவேண்டுமென்று ஸத்ராஜித்தை ஸ்ரீகிருஷ்ணன் கேட்கவில்லே. ஆனல் ஸ்ரீகிருஷ்ணன் இவ்விரத்நத்தை விரும்புவாரோ என்று ஸத்ராஜித்து பயப்பட்டான். அதையவர் கேட்டால் கொடுக்க மறுதலிக்க முடியாதே யென்று பயந்து மணியைத் தன்னிடம் வைத்துக்கொள்ளாமல் தன்னுடைய பிராதாவான பிரஸேநனுக்குக் கொடுத்தான். பிரஸேநன் அதையணிந்துகொண்டு வேட்டைக்காகக் கானகம் சென்றன். ஓர் சிங்கம் காட்டில் பிரஸேநனைக்கொன்று ரத்நத்தை வாயில் கௌவிக்கொண்டு ஓடிவிட்டது. ஜாம்பவான் அச்சிங்கத்தைக் கொன்று மணியை யெடுத்துக்கொண்டார். ஜாம்பவான் ஒரு கரடி அவர் திரேதாயுகத்தில் ஸ்ரீராமரின் வானரசேனையில் நடுவிலிருந்து அவருடைய சார்பாக யுத்தம்செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்பொழுது பிரஸேநன் மாண்டதையும், ரத்நம் காணமற்போனதையும் தெரிந்துகொண்டு துவாரகையில் இருந்தோர் எல்லாரும்,

ஸ்ரீகிருஷ்ணன் மணியை விரும்பியிருந்ததால் அவரே பிரஸேனனைக் கொன்று மணியை யபகரித்திருப்பாரென்று சந்தேகித்தார்கள். இவ் வபவாதத்தை ஸ்ரீகிருஷ்ணன் சகிக்கமுடியாமல் மணியைத் தேடுவதற்காக வெளியே புறப்பட்டார். எவ்விடத்தில் பிரஸேனனின் இறந்த சரீரம் தென்பட்டதோ அவ்விடத்தில் சிங்கத்தின் அடிச்சுவடுகளையும் அவர் கண்டார். அவைகளை எல்லோருக்கும் காண்பித்துத் தன்னுடைய அபவாதத்தை அவர் நீக்கிக்கொண்டார். அவர் சிங்கத்தின் காலடிகளைப் பின்பற்றிப் பிறகு கரடியின் அடிச்சுவடுகளைக் கண்ணுற்றார். அச்சுவடுகளின் வழியேபோய் ஓர் குகையின் மத்தியில் நுழைந்தார். அங்கே ஜாம்பவானுடைய குழந்தைகளை வளர்ப்பவளான ஓர் தாதியின் கையில் அதே ஸ்யமந்தகமணியைக் கண்டார். பிறகு ஜாம்பவானுடன் சண்டை செய்து தோற்கடித்தார். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணனிடம் ஜாம்பவான் ஸ்யமந்தக மணியைக் கொடுத்தார்; தன்னுடைய கன்னிகையான ஜாம்பவதியையும் அவருக்கே கொடுத்தார். ஸ்ரீகிருஷ்ணன் மணியை யெடுத்துக்கொண்டு துவாரகை சென்று அதை ஸத்ராஜித்தினிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார். அவர் பிறர்பொருளுக்கு ஆசைப்படுகிறவர் அல்லர். ஸ்ரீகிருஷ்ணன் பேரில் தான் அநியாயமாய்ப் பழி சுமத்தினதற்காக, ஸத்ராஜித்து பயந்து அவரைச் சமாதானப் படுத்துவதற்காக தன் பெண்ணான சத்யபாமாவை அவருக்கே கொடுத்துவிட்டான். ஸத்யபாமையானவள் யாவரும் ஆசைப்படும்படியான அழகு நிறைந்த கன்னிகையாயிருந்தாள். ஆதலால் முக்கியமான சததந்வா 1 மகாவீரனான கிருதவர்மா 2 ஸ்ரீகிருஷ்ணனுடைய பக்தனும் மித்திரனுமுள்ள அக்குரூரன் 3 ஆக மூவர்களும் இக்கன்னிகையை விரும்பினார்கள். அவர்கள் ஸத்யபாமாவை ஸ்ரீகிருஷ்ணனுக்குக் கொடுத்துவிட்டதால் தங்களை யவமானப் படுத்தினதாக நினைத்து, ஸத்ராஜித்தைக்கொல்ல உபாயம் தேடினார்கள். அக்ரூரரும், கிருதவர்மாவும் ஸத்ராஜித்தைக் கொன்று மணியைக் கொண்டுவரும்படி சததன்வாவைத் தூண்டிவிட்டார்கள். ஸ்ரீகிருஷ்ணன் வந்து அவனுக்கு விரோதம் செய்யும் பக்ஷத்தில் தாங்கள் அவனுக்குச் சகாயம் செய்து ஸ்ரீ கிருஷ்ணனை யெதிர்ப்பதாயும் சொன்னார்கள். சததன்வா அவர்களின்

வார்த்தைக்குடன்பட்டு, ஸ்ரீகிருஷ்ணன் வாரணவதம் சென்றிருந்த சமயத்தில் சத்ராஜித்து தூங்கிக்கொண்டிருக்கும்போது அவனைக் கொன்று மணியைக் களவாடி வந்தான். ஸத்யபாமை தன் தகப்பன் கொல்லப்பட்டதால் வருத்தமடைந்து ஸ்ரீகிருஷ்ணனிடம் முறையிட்டாள். ஸ்ரீகிருஷ்ணன் துவாரகைக்குத் திரும்பிவந்து பலராமருடன் கூடி சததன்வாவைக் கொல்ல முயற்சித்தார். அம்முயற்சியை யறிந்து சததன்வாவானவன் கிர்தவர்மாவையும் அக்ரூரரையும் உதவிக்கு அழைத்தான். அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனுடனும் பலராமருடனும் விரோதம் செய்ய மறுத்தார்கள். அப்பொழுது சததன்வானவன் வேறு கதியன்றி அக்ரூரரிடம் மணியை யொப்புவித்துவிட்டு விரைவாய்ச் செல்லக்கூடிய ஓர் குதிரையின் மேலேறிக்கொண்டு ஓடிவிட்டான். ஸ்ரீகிருஷ்ணனும் பலராமரும் ரதத்திலேறிச் சென்றதால் குதிரையுடன் தொடர்ந்துபோக அவர்களால் முடியவில்லை. சததன்வாவின் குதிரை நடுவழியில் இறந்துவிட்டது. பிறகு சததன்வா கால்நடையாக வோட வாரம்பித்தான். அப்பொழுது நியாயம் தவறாமல் யுத்தம் செய்பவரான ஸ்ரீகிருஷ்ணன் தேரில் பலராமரை இருக்கச்செய்து தான் கால்நடையாகச் சததன்வாவைப் பின்பற்றியோடினார். ஸ்ரீகிருஷ்ணன் இரண்டு குரோச தூரம் ஓடிச் சததன்வாவைப் பிடித்து அவன் தலையை நறுக்கிவிட்டுத் திரும்பிவந்து பலராமரிடம் இந்தச் சங்கதியைச் சொன்னார். ஆனால் அவர் சங்கதியை நம்பவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் பொய் சொன்னதாகப் பலராமர் நினைத்து ரத்நத்தில் தனக்குக் கிடைக்கவேண்டிய பாகத்தைத் தனக்குக் கொடாமல் ஸ்ரீகிருஷ்ணன் மோசம் செய்கிறானென்று நினைத்துப் பலராமர் கிருஷ்ணனிடம் சொன்னதாவது "உன்னைச்சுடவேணும்; நீ பேராசைகொண்டவன்; இதோ வழியிருக்கிறது நீ துவாரகைக்குப் போய்விடு; நான் இனித் துவாரகை வருவதில்லை" யென்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணனை விட்டுப்பிரிந்து பலராமர் பரதேசம் போய்விட்டார். அங்கேயே மூன்று வருஷம் வாசம் செய்தார். அப்பொழுது அக்ரூரரும் துவாரகையைவிட்டு ஓடிவிட்டார். யாதவர்கள் போய் அக்ரூரருடைய பயத்தைநீக்கி அவரைத் துவாரகைக்கு அழைத்து வந்தார்கள். ஒருநாள் ஸ்ரீகிருஷ்ணன் எல்லா யாதவர்களையும் கூட்டிவைத்து அக்ரூரரிடம் சொன்னதாவது "ரத்நம் உன்னிடம் இருக்கிறது; நமக்

குத்தெரியும்; அது உன்னிடமே யிருக்கட்டும்; அதை யொருதடவை எல்லா யாதவர்களுக்கும் காண்பித்துவிடு" என்பதாம். அக்குரூரான வர் மணியை தாமாகவே காட்டாவிடில் எவ்விதத்திலும் மணி கம்மிட மிருந்து வெளியேறிவிடும் என்று நினைத்துத் தானாகவே மணியைக் காட்டினார். அதைப்பார்த்துப் பலராமரும், சத்யபாமையும் அந்த மணியைக் கவர்ந்துகொள்ள மிகவும் விரும்பினார்கள். ஆனால் ஸத்யப் பிரதிக்ஞரான ஸ்ரீ கிருஷ்ணன் அதையவர்களுக்குக் கொடுக்கவில்லை. தானும் எடுத்துக் கொள்ளவில்லை. அக்குரூரிடமே திருப்பிக்கொடுத்து விட்டார். (இவ்விதம் விஷ்ணுபுராணத்திலிருக்கிறது. தானே யணிந்துகொண்டாரென்று ஹரிவம்சத்திலிருக்கிறது.)

ஸ்யமந்தக மணியின் விருத்தாந்தத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணன் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவரென்றும், தன்னலம் பாராட்டாதவ ரென்றும், சத்யப் பிரதிக்ஞர் என்றும், காரியத்தை நிறைவேற்ற வல்லரென்றும் வெளியாகின்றன. ஆனால் ஸ்யமந்தக மணியின் விருத்தாந்தம் உண்மையா என்று ஆராயவேண்டும்.

7-வது அத்தியாயம்.

கிருஷ்ணனின் அநேக விவாகங்கள்.

ஸ்யமந்தகமணியின் விருத்தாந்தத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணனுக்கு அநேக விவாஹங்கள் நிகழ்ந்திருக்குமென்று நீங்கள் ஊஹித்திருப்பீர் கள். முதலில் ருக்மிணியை விவாகம் செய்தார்; ஸ்யமந்தகமணியின் பிரபாவத்தால் வேறு இரு கன்னிகைகளையும் அதாவது ஜாம்பவதி யையும் ஸத்யபாமையையும் அடைந்தார்; இம்மட்டுமே விஷ்ணு புராணத்தில் சொல்லியிருக்கிறது. ஹரிவம்சத்தில் கிருஷ்ணன் 4 கன் னிகைகளை மணந்ததாகச் சொல்லியிருக்கிறது. ஸத்ராஜித்துக்கு வேறு கன்னிகைகளுமிருந்தார்கள். 1. ஸத்யபாமை 2. பிரஸ்வாபினி 3. விரதினீ இம்மூவர்களையும் ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஸத்ராஜித்து அர்ப் பணம் செய்தான். இந்த நான்கு கன்னிகைகளுடன் மட்டும் நிற்க

வில்லை 16000-க்கு மேலாகிவிட்டது. இவ்விதமாகவே சாமாங்ய ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

விஷ்ணு புராணம் 4-வது அம்சத்தில் இருக்கிறதாவது:—

𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌪𑍍𑌯𑌤𑍍𑌰 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑍇𑌽𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌸𑍍𑌯 𑌷𑍋𑌡𑌶
𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑍇𑌕𑍋𑌤𑍍𑌤𑌰 𑌶𑌤𑌾𑌧𑌿𑌕 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌮𑌭𑌵𑌨𑍍 ॥

அர்த்தம்:—மனித உலகிலவதரித்த பகவானுக்கு 16101 ஸ்திரீகள் இருந்தார்கள். இந்த ஸ்திரீகளின் கருப்பத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஒருலட்சத்து எண்பதினாயிரம் பிள்ளைகள் பிறந்தார்களென்றும், 150 வருஷகாலம் பூலோகத்தில் இருந்தாரென்றும் அதே புராணத்தில் சொல்லியிருக்கிறது. பிரித்துக் கணக்குப்போட்டால் ஒரு வருஷத்துக்கு 1440 பிள்ளைகள் வீதமும் நாள் ஒன்றுக்கு 4 பிள்ளைகள் வீதமும் ஜனித்திருக்கவேணும். இதேயிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணனின் இச்சை (விருப்பம்) யினலேயே யவருடைய பார்யைகள் கர்ப்பம் தரித்தார்கள் என்று சொல்லியிருக்கிறது. நரகாசுரனுக்கு 16000 கன்னிகைகளிருந்ததாகச் சொல்வது பொய்யென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அவைகளைத்தவிர 8 முக்கியமான ஸ்திரீகள் இருந்தார்கள் என்றும், மற்றும் 7 பெபர்களையும் பெயர் குறித்து விஷ்ணுபுராணத்தில் கூறியிருக்கிறது. ஆனல் 5-வது அம்சம் 28-வது அத்தியாயத்தில் ருக்மிணியைத் தவிர்த்து 8 பெயர்களையும் நாமாவை (பெயரை) ச்சொல்லிக் குறித்திருக்கிறது.

“𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌣𑍀 𑌮𑌿𑌤𑍍𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌾 𑌚 𑌸𑌤𑍍𑌯𑌾 𑌨𑌾𑌗𑍍𑌨𑌜𑌿𑌤𑍀 𑌤𑌥𑌾 ।
𑌦𑍇𑌵𑍀 𑌜𑌾𑌂𑌬𑌵𑌤𑍀𑌚𑌾𑌪𑌿 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍀 ।
𑌮𑌦𑍍𑌰𑌰𑌾𑌜 𑌸𑍁𑌤𑌾𑌚𑌾𑌨𑍍𑌯𑌾 𑌸𑍁𑌶𑍀𑌲𑌾 𑌶𑍀𑌲𑌮𑌣𑍍𑌡𑌨𑌾 ।
𑌸𑌾𑌤𑍍𑌰𑌾𑌜𑌿𑌤𑍀 𑌸𑌤𑍍𑌯𑌭𑌾𑌮𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾 𑌚𑌾𑌰𑍁𑌹𑌾𑌸𑌿𑌨𑍀 ॥

1, காளிந்தீ, 2. மித்ரவிந்தா, 3. நக்னஜித்தின் பெண் ஸத்யை, 4. ஜாம்பவதீ, 5. ரோகிணீ இவள் காமரூபிணீ (நினைத்த உருவத்தை யெடுத்துக் கொள்ளக்கூடியவள்) 6. மத்ரராஜனின் குமாரி சுசீலை

ஸத்ராஜித்தின் குமாரி ஸத்யபாமை 8. லக்ஷ்மணை, ருக்மிணியைச் சேர்த்து 9 பெயர்களாகிறது.

(குறிப்பு:—விஷ்ணு புராணத்தையும் ஹரிவம்சத்தையும் அத்தியாயங்கள்தோறும் பரிசிலனைசெய்து இந்தக்கிருஷ்ணசரித்திரம் எழுதுபவர் முடிவாக ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணனின் பார்யைகள் குமாரர்கள் இவர்களின் பெயரைக் குறித்தும் விரிவாக எழுதியிருக்கிறார். அவைகள் எல்லாவற்றையும் தமிழில் மொழி பெயர்த்தால் வாசிப்போருக்கு ரஸமாக இருக்காது என்று நினைத்து இங்கே எழுதவில்லை.)

ஸ்ரீகிருஷ்ணனின் பார்யைகளுக்குள் சைல்யை, காளிந்தீ, மித்திரவிந்தை, லக்ஷ்மணை, மாத்ரீ சுசீலை இவர்கள் ஐவரையும் கிருஷ்ணன் எங்கே மணந்தார், எப்படி விவாகம் நடந்தது என்கிற விவரம் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஸ்ரீகிருஷ்ணனின் வாழ்நாட்களில் இவர்களையவர் ஸ்பர்சம் செய்ததில்லை. ஆனால் விஷ்ணு புராணக்காரர் ஸ்ரீகிருஷ்ணனின் பிள்ளைகளைக் கணக்கிடும்போது மேற்கண்டிருக்கிற ஐந்து ஸ்திரீகளின் புதல்வரையும் சேர்த்துக் கணக்கிட்டிருக்கிறார். அவர்கள் ஒருவரைப்பற்றியும் பிறகு காரியங்கள் நடந்தபோது நாம் கேள்விப்படவேயில்லை. இவ்வைந்து ஸ்திரீகளும் எத்தேயத்தைச் சேர்ந்தவர்கள்? எவர்களுடைய குமாரிகள் என்ற விருத்தாந்தம் ஒன்றும் அங்கே யெழுதப்படவில்லை. சுசீலை யென்பவள் 'மத்ர' ராஜனின் கன்னிகை யென்பதுமட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனின் காலத்திலிருந்த மத்ரவரசனானவன் நகுல சகாதேவர்களின் அம்மான். அவன் குருக்ஷேத்ர யுத்தத்தில் 17-நாட்கள் மட்டும் இரு சேனைகளுக்கும் மத்தியில் இருந்தான். அநேகசமயங்களில் சத்துருவின் சேனையுடன் இருந்தான். ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றிய கதைகளைச் சல்லியனுக்குச் சொல்லியிருக்கிறான். சல்லியனைப்பற்றிய விருத்தாந்தங்களையும் கிருஷ்ணனுக்குச் சொல்லியிருக்கிறான். இவ்விருவருக்குள் ஒவ்வொருவரின் கதைகளையும மற்றவரிடமிருந்து கேட்டிருக்கிறான். ஸ்ரீ கிருஷ்ணனானவர், சல்யனின் மாப்பிள்ளையா அல்லது சகோதரியின் புருஷனா அல்லது அவர்களுக்குள் வேறு யாது சம்பந்

தம் என்று புலப்படவில்லை. ஆனால் கர்ணனிடம் சல்யன் சொல்லி யிருக்கிறன் "அர்ஜுனனுக்கும் வாஸுதேவனுக்கும் இவ்விடம்தான் விவாகம் நடந்தது" என்று. சல்யனைக்கொல்லும்படி ஸ்ரீ கிருஷ்ணன், யுதிஷ்டிரரைத் தூண்டிவிட்டு அவர் அவனுக்கு யமஸ்வரூபமாக விருந் தார். ஸ்ரீ கிருஷ்ணன் மாத்ரீயை விவாகம் செய்துகொண்டார் என் பது பொய்யாகத் தோன்றுகிறது. சைவ்யை, காளிந்தி, மித்ரவிந்தை, லக்ஷ்மணை, இவர்களின் குலம், குணம், தேசம், விவாகம் இவைகள் எவையென்று கொஞ்சமும் காணக்கிடைக்கவில்லை. ஆனால் அவர் களைப்பற்றிய காவியங்களும், அலங்காரக் கிரந்தங்களு மிருக்கின்றன. மாத்ரீ, ஜாம்பவதீ, ரோகிணீ, ஸத்யபாமை இவர்களைப்பற்றி இவ்வித மாகக் காண்கிறோம். ஆனால் ஜாம்பவதியின் கதைக்கும் காளிந்தியின் கதைக்கும் வித்தியாசம் என்னவென்றால், அவளுடைய புத்திரனை சாம்பனின் பெயர், பாஞ்சஜனர்களான யாதவர்களின் மத்தியில் காணப்படுகிறது. ஆனால் சாம்பன் லக்ஷ்மணாஹரணத்தில் மட்டும் உபயோகமாயிருந்தான், லக்ஷ்மணை துர்யோதனனின் கன்னிகை. மகாபாரதத்தில் பாண்டவர்களின் ஜீவனசரித்திரம் எவ்வளவு சொல் லப்பட்டிருக்கிறதோ அவ்வளவே கௌரவர்களின் ஜீவிய சரித்திரமும் சொல்லப்பட்டிருக்கிறது. லக்ஷ்மணையின் ஹரணமென்பது உண்மை யாயிருப்பின் மகாபாரதத்தில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கக்கூடும். அப்படிக் காணப்படவில்லை. ஜாம்பவதி, கரடியின் கன்னிகை அவள், பெண்கரடி. பெண்கரடி கிருஷ்ணனின் பார்யையாகவாவது அல்லது வேறு மனிதனின் பார்யையாகவாவது இருப்பது இயலாது. அவள் காமரூபிணியாயிருந்ததால் பெண்கரடியாயிருந்தும், மனித உருவத் தை எடுத்திருத்தல் கூடும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் பெண் கரடியானது மனித உருவம் எடுத்ததென்று நாம் நம்பவில்லை. கிருஷ்ணன், கரடியின் பெண்ணை விவாகம் செய்துகொண்டாரென் றும் நம்மால் நமபக்கூடவில்லை.

ஸத்யபாமாவுக்குப் புத்திரன் இருந்ததாகக் கேள்விப்படுகிறோம். ஆனாலவன் காரியங்களில ஈடுபட்டதாக ஒரு இடத்திலும் எழுதப் படவில்லை. இதுதான அவனிருநததைப்பற்றிச் சந்தேகததுக்கு முதலாவது காரணம். ஆனால் ருக்மிணியைப்போல், சத்தியபாமை

ளுயயும், காரியங்கள் நிகழும்போது மத்தியில் காண்கிறோம். அவளுடைய விவாகத்தைப்பற்றி விரிவாய் முன்பே விசாரித்திருக்கிறோம்.

மகாபாரதம் வனபர்வத்தில் 'மார்க்கண்டேய ஸமஸ்யா' அத்தியாயத்தில் ஸத்யபாமாவைக் காண்கிறோம். இந்த அத்தியாயம் பிரக்ஷிப்தம். மகாபாரதம் வனபர்வத்தைக்குறித்துப் பரிசீலனை செய்யும்போது இதைப்பற்றி விஸ்தாரமாக இதைப் படிப்போர் காண்பார்கள். இவ்விடத்தில் ருக்மிணிக்கும், ஸத்யபாமைக்கும சம்வாதம் என்று ஒரு சிறு அத்தியாயமிருக்கிறது. அதுவும் பிரக்ஷிப்தம். மகாபாரதக் கதைக்கும் அவ்வத்தியாயத்தில் சொல்லபபட்ட கதைக்கும யாதொரு சம்பந்தமும் இல்லை. அவ்வத்திபாயத்தில் ஸ்திரீகள் தங்களுடைய கணவர்களின் விஷயத்தில் எவ்விதம் நடந்துகொள்ளல் வேண்டுமென் பது முதலான சங்கதிகள்மட்டு மடங்கியிருக்கின்றன. மேலுமந்த வத்தியாயத்தில் பிரபந்த லக்ஷணமும் நவீனமாயிருக்கிறது.

அதன்பிறகு உத்யோக பர்வத்திலும் ஸத்யபாமாவைக் காணலாம். 'யானஸந்தி பர்வா'ததியாயத்திலும் காணலாம். அந்த அத்தியாயமும் பிரக்ஷிப்தமென்று அந்த அத்தியாயத்தைப் பரிசீலனை செய்யுங்காலத்தில் தெரியவரும். குருக்ஷேத்திர யுத்தத்துக் கழைக்கப்பட்டு கிருஷ்ணன் 'உபப்லவ்ய' நகரததுககு வந்தார். யுத்தத்துக்குச் செல்லும்போது ஸ்திரீயை யழைத்துச் செல்லவேண்டிய அவசியமொன்றுமில்லாததால், சத்யபாமையைக் கூட்டிக்கொண்டு போகவில்லையென்று மகாபாரதத்தைப் படித்தால் தெரியவரும். யுத்தத்தைப்பற்றிய விவரங்களிலும் அதற்குப் பின்னிட்ட விவரங்களிலும் சத்யபாமையின் கதையொன்றுமில்லை. ஸ்ரீ கிருஷ்ணனின் மனுஷ்ய லீலை முடிந்தபின்னர் 'மௌஸல' பர்வத்தில் ஸத்யபாமையின் பெயர் காணப்படுகிறது. ஆனல் அந்த மௌஸல பர்வமும் பிரக்ஷிப்தமென்பதைப் பின்னல் காண்பீர்கள்.

முடிவாக, மகாபாரதத்தின் எந்தப் பாகங்கள் சந்தேகமின்றி மூலபாரதத்தைச் சேர்ந்தவைகளென்று ஒத்துக்கொள்ளப்படுகின்றனவோ, அந்தப் பாகங்களில் சத்தியபாமையின் பெயரில்லை. பிரக்ஷிப்தங்களென்று கொள்ளப்படுகிற எல்லாப் பாகங்களிலும் அப்

பெயர் காணப்படுகிறது. ஸத்யபாமையின் சம்பந்தமான சந்தேகத்துக்கு இது இரண்டாவது காரணம்.

அதின் பிறகு விஷ்ணு புராணத்தில் ஸ்யமந்தகமணியின் விருத்தாந்தத்தின் நடுவில் அவளுடைய விவாகக்கதை யிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் காடியின் பெண்ணைக் கல்யாணம் செய்ததென்பதும் கட்டுக்கதை. இந்த விவாகத்தைக் காரணமாகக்கொண்டு, துவேஷத்தை யடைந்து சததன்வாவானவன் சத்யபாமாவின் தகப்பனை ஸத்ராஜித்தைக் கொன்றுவிட்டான். அக்காலத்தில் பாண்டவர்கள் அரக்குமாளிகையி லகப்பட்டதாகக் கேள்விப்பட்டு, ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களைத் தேடுவதற்காக 'வாரணாவதம்' சென்றிருந்தார். அதேசமயம் சத்தியபாமை ஸ்ரீ கிருஷ்ணனிடம் முறையிட்டதாக எழுதியிருக்கிறது. இக்கதை பொய். ஸ்ரீ கிருஷ்ணன் வாரணாவதம் சென்றிருந்தால் மகாபாரதத்தில் குறிக்கப்பட்டிருக்கும். அங்கே சொல்லவில்லை. இந்தக் கதையைப்பற்றிச் சந்தேகங்கொள்வதற்கு இது மூன்றாவது காரணம்.

விஷ்ணுபுராணத்தில் சத்யபாமையின் பாரிஜாதஹரண விருத்தாந்தம் காணப்படுகிறது. அது நிகழக்கூடாத பொய்க்கதை. இது சம்பந்தமான விஷயங்களில் பிரகிருதமானதும் நம்பத்தகுந்ததுமான கதை விஷ்ணுபுராணத்தில் ஓரிடத்திலுமில்லை. சந்தேகத்துக்கு இது நான்காவது காரணம். மகாபாரதம் ஆதிபர்வத்தில் ஸம்பவ பர்வாத்தியாயத்தில் 67-வது அத்தியாயத்தின் பெயர் அம்சாவதாரணம். மகாபாரதத்தில் காணப்படுகிற நாயகர்கள் நாயகிகள் இவர்களுக்குள் எவர்கள் தைவாம்சம் பெற்றும், எவர்கள் அஸுர ராக்ஷஸாம்சங்கள் பெற்றும் ஜனித்தார்கள் என்பதைக்குறித்து அவ்வத்தியாயத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சேஷபாகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் நாராயணனின் அம்சமென்றும், பலராமர் ஆதிசேஷரின் அம்சமென்றும் பிரத்யும்நன் ஸநத்குமாரரின் அம்சமென்றும், துரௌபதி 'ஸ்ரீ'யின் அம்சமெனவும், குந்தியும் மாத்ரியும் 'ஸித்தி'யுடையவும் 'த்ருதி'யுடையவும் அம்சமென்று மெழுதப்பட்டிருக்கிறது. கிருஷ்ணனுடைய 16000 மகிஷிகளும் 'அப்ஸரஸ்'களின் அம்சமென்றும் ருக்மிணி லக்ஷ்மிதேவியின்

அம்சமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. கிருஷ்ணனின் வேறு மகிஷியின் பெயரைக் காணவில்லை. சந்தேகத்துக்கு இது ஐந்தாவது காரணம். சந்தேகமானது சத்யபாமையைப்பற்றி மட்டிலுமில்லை. ருக்மிணியைத் தவிர்த்து கிருஷ்ணனின் மகிஷிகளாகச் சொல்லப் படுகிற எல்லாரைப்பற்றியும் சந்தேகமிருக்கிறது. நரகாசுரனுக்கு 16000 பெண்களிருந்தார்கள் என்பது சம்பவிக்கக்கூடாதது என்பது மட்டிலுமில்லை. ருக்மிணியைத்தவிர கிருஷ்ணனுக்கு வேறு பார்யை களை கிடையாதென்று மகாபாரதத்தின் இந்தப் பாகத்தின்மூலமாக உறுதியாகிறது.

காடியின் தௌஹித்திரனான சாம்பன் சம்பந்தமாக நாம் சொன்னதை ஞாபகப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ருக்மிணியைத்தவிர வேறு மகிஷிகளாவது அவர்களின் பிள்ளைகள் பேரன்களாவது காரியம் செய்வதில் பிரயோஜனப்பட்டார்களென்று காணப்படவில்லை. ருக்மிணியின் வம்சத்தில் அரசர்கள் இருந்தார்கள். வேறு மகிஷிகளின் வம்சத்தில் யாராவது அரசர்கள் எங்கேயாவது எப்பொழுதாவது இருந்ததாகத் தென்படவில்லை. இந்தக் காரணங்களையிட்டு ருக்மிணியைத் தவிர்த்து ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வேறு பார்யையிருந்த தில்லையென்று நம்மால் உறுதியாகச் சந்தேகிக்க முடியும். அவருக்கு ஒரே பார்யைதான். பஞ்சபாண்டவர்களுக்குள் ஒவ்வொருவருக்கும் பல பல பத்நிகள் இருந்தார்கள். ஆதர்ச தர்மாத்மாவான பீஷ்மர் தனது கனிஷ்ட பிராதாவுக்காகக் காசியரசனின் மூன்று கன்னிகைகளை யபஹரணம் செய்துகொண்டு வந்தார். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஒரே விவாகத்தைத்தவிர வேறு விவாகம் நடக்கவேயில்லை. ஒரே விவாகத்தைத்தவிர வேறு விவாகத்தில் அவருக்கு விருப்பம் இல்லை. ஒரு புருஷனுக்கு ஒரு விவாகத்தைத்தவிர மறு விவாகம் செய்வது எல்லா நிலைமைகளிலும் அதர்மம். சரியான காரணமில்லாமல் ஒரு புருஷன் மறு விவாகம் செய்துகொள்ளுவது அதர்மமென்று நாம் நிச்சயம் செய்கிறோம். ஆனாலப்படிச்செய்வது எல்லா நிலைமைகளிலும் அதர்மமன்று. பத்நி, குஷ்டவியாதியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தால் அவள் தன் புருஷனுக்கு உலகவாழ்க்கையில் எவ்விதத்திலும் உதவியாயிருக்க முடியாது. அந்த நிலைமை ஏற்பட்டிருக்

தாலொழிய மற்றவிடங்களில் மறுதாரம் கல்யாணம் செய்துகொள்ளு வது ஞாயமென்று நமக்குத் தோன்றவில்லை. ஒருவனுடைய ஸ்திரீ யானவள் தர்ம்பிரஷ்டையாயும் குலத்தைக் கெடுப்பவளாயுமிருந் தால் நியாயஸ்தலத்தில் முறையிட்டு அவளை விலக்கிவிடாமல் மறு கல்யாணம் செய்துகொள்ளுவது சரியென்று நமது சிற்றறிவுக்கெட்ட வில்லை. நியாயஸ்தலத்தினிடம் மரியாதையான எண்ணம் எவ்வள விருக்கிறதென்று நாகரிகமுள்ளவர்களைப் பார்த்தால் தெரியவரும். எவனுக்கு உத்தராதிகாரி (சந்ததி) யவசியமோ அவனுடைய ஸ்திரீ மலடியாயிருப்பாளானல் அவன் மறு கல்யாணம் செய்துகொள்ளாம லிருப்பதை நாமறியவில்லை. ஐரோப்பியர்களின் வழக்கத்தில் எங்கில மையிலும் புருஷன் இரண்டாவது விவாகம் செய்துகொள்ளுவதில்லை. ஐரோப்பியர்களுக்குள் இவ்விதமான கெட்டவழக்கமில்லாமலிருந்தால் போனபார்ட்டென்பாம் (நெப்போலியன்) ஜோஸபைனை (நெப்போலி யன் மனைவி)த் தள்ளிவிட்டதான கொடிய பாவச்செய்கையில் விழுந் திருக்கமாட்டான். எட்டாவது ஹென்றி தன் மனைவியைக் கொன் றிருக்கமாட்டான். யூரோப்பில் நாகரிகம் என்று சொல்லிக்கொண்டு இக்கொடிய வழக்கம் இருந்துவருவதால் எவ்வளவு பத்நிகளின் கொலைகளும் புருஷர்களின் கொலைகளும் நடந்திருக்கின்றன. நமது சிக்ஷித (நாகரிகமான) ரீதி யென்னவென்றால் யூரோப்பியர்களின் வழக்கம்போலல்லாமல், பரிசுத்தமாயும், தோஷமற்றதாயும் முன்னும் பின்னும் 14 தலைமுறைகளைக் கரையேற்றக்கூடியது. நாம் யூரோப் பியர்களிடமிருந்து எத்தனை நல்ல காரியங்களைக் கற்றுக்கொள்ளுவது அவசியமோ அத்தனை காரியங்களை யவர்களும் நம்மிடமிருந்து கற்றுக் கொள்ளல் வேண்டும். விவாக விஷயமும் இவைகளில் ஒன்று.

ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு விவாகத்தைத்தவிர மறுவிவாகம் செய்து கொள்ளவில்லையென்ற விஷயத்தில் சரியான பிரமாணம் காட்டியிருக் கிறோம். ஒருகால் அவர் மறுவிவாகம் செய்திருந்தால் எதற்காக அப்படிச் செய்தார் என்று தெரிவிப்பதற்கு நம்பிக்கையான இதி ஹாஸம் ஒன்று மகப்படவில்லை. அவருக்கு எவரெவர் ஸ்யமந்தக மணியைக் கொடுத்தாரோ அவரவர் ஒரோர் சமயத்திலும் ஒரோர் கன்னிகையைக் கொடுத்தார் என்பது பாட்டியின் கதைபோலாகும்.

நரகாசுரனுக்கு 16000 கன்னிகைகளென்பது மூப்பாட்டியின் கதையையொக்கும். அவைகளைக்கேட்டு நாம் மௌனமாயிருப்போம். ஆனால், நம்மால் நம்பிக்கைகொள்ளல் முடியாது.

நான்காவது கண்டம்.

இந்திரப்பிரஸ்தம்.

அவிக்நம் ஸர்வகார்யேஷு தர்மகார்யார்த்தமுத்யதம் ।
வைகுண்டஸ்ய ச யத்ரூபம் தஸ்மை கார்யாத்மநே நம: ॥

எல்லாக் காரியங்களிலும் தடைபடாததாயும் தர்மகாரியத்துக்காக முயற்சியுள்ளதாயுமிருக்கிற ஸ்ரீமந்நாராயணனுடைய எந்த உருவமோ அந்தக்கார்ய வடிவாயிருக்கிற ரூபத்துக்கு நமஸ்காரம். (சாந்திபர்வம் 41வது அத்தியாயம்).

முதலாவது அதிகாரம்.

துரௌபதியின் ஸ்வயம்வரம்.

மகாபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணனைக்குறித்து எவ்வளவு விருத்தாந்தம் சொல்லப்பட்டிருக்கிறதோ, அதில் சிலபாகம் மூல பாரதத்திலிருக்கிறதென்கிற காரணத்தினாலேயே அது நம்பத்தக்கதாகும். இதைப்பற்றி இக்கிரந்தத்தின் முதலாவது கண்டத்தில் எவ்விதமான ஏற்பாடுகளை நாம் செய்துகொண்டோமோ அவைகளை யிப்போது நினைவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று இதைப் படிப்போர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மகாபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணனை, திரௌபதியின் முதலாவது ஸ்வயம்வரத்திற் காண்கிறோம். நம்முடைய பரிசீலனையில், இந்த

அம்சம் மூலபாரதத்தைச் சார்ந்ததென்பதற்கு யாதொரு சந்தேகமும் காணப்படவில்லை.

துருபதவரசன் அக்கினியிலிருந்து கன்னிகையை யடைந்தானென்பதை நாம் நம்பவில்லை. அந்தக் கன்னிகை ஐந்து கணவர்களை யடைந்தாளென்பதையும் நம்மால் நம்பவியலாது. அவள் துருபதவரசனின் ஔரஸ புத்திரியாயிருந்திருக்கலாம். அவளுக்கு ஸ்வயம்வர விவாகம் நடந்தது. அதில் அர்ஜுனன் குறியைத் தன் பாணத்தாலடித்து விட்டான் என்பதும் சம்பாவிதம்தான். அவளுக்கு ஒரே புருஷனிருந்தானா அல்லது ஐவர்களிருந்தார்களாவென்று விசாரிப்பதில் யாதொரு பயனுமில்லை. மகாபாரதத்தில் துரௌபதியின் முதலாவது ஸ்வயம்வரத்தில் ஸ்ரீ கிருஷ்ணனை நாம் காண்கிறோம். அவர் தைவிகத்தன்மைபொருந்தியவர் என்பதற்கு அக்காலததில் யாதொரு குறிப்புமில்லை.

மற்ற க்ஷத்திரியர்களைப்போலும், மற்ற யாதவர்களைப்போலும் கிருஷ்ணன் அழைக்கப்பெற்றுப் பாஞ்சாலத்துக்கு வந்திருந்தார். மற்ற க்ஷத்திரியர்களும் துரௌபதியை யடையவேண்டுமென்ற நோக்கத்தால் குறியையடிப்பதில் பிரயாசை யெடுத்துக்கொண்டார்கள். ஆனால் யாதவர்களில் ஒருவனாவது அப் முயற்சியைச் செய்யவில்லை.

பாண்டவர்கள் அழைக்கப்படாமலே சபைக்கு வந்திருந்தார்கள். அவர்களைக் கொல்லவேண்டுமெனத் துரியோதனன் ஏற்பாடு செய்திருந்தான். பாண்டவர்கள் வேஷம் மாறுடிக்கொண்டு, காடுகளில் திருந்துகொண்டிருந்தார்கள். துரௌபதியின் ஸ்வயம்வரச் சமாசாரத்தைக் கேள்விப்பட்டு மாறுவேஷத்துடன் சபைக்கு வந்தார்கள். பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் நிறைந்த அச்சபையில் மாறுவேஷத்துடனிருக்கிற பாண்டவர்களை ஸ்ரீகிருஷ்ணன் மட்டும் அடையாளம் கண்டுகொண்டார். அவர் தனது தைவிகசக்தியாலே அடையாளம் கண்டுகொண்டார் என்பதற்கு குறிப்பு ஒன்றுமில்லை. மனுஷ்யனுக்குள்ள இயற்கையான புத்தியால் மட்டும் அவர் தெரிந்துகொண்டார் என்பது ஸ்ரீ கிருஷ்ணனின் வார்த்தையாலே வெளியாகிறது. அவர் பலதேவரிடம் சொல்லுகிறார்.

"ஐயா பெரியதான இந்த வில்லை (தனுசை) எவன் இழுத்தானோ (நாணேற்றினானோ) அவனே அர்ஜுனன். அதில் யாதொரு சந்தேகமும் இல்லை. எவன் தனது கைவன்மையால் விருக்ஷமொன்றைப் பிடுங்கி அச்சமின்றிச் சபைநடுவில் நுழைந்தானோ அவனே பீமன்" என்றனர். இதன்பிறகு யுதிஷ்டிரர் ஸ்ரீ கிருஷ்ணனைப்பார்த்து "நீர் எங்களை யெவ்விதம் தெரிந்துகொண்டீர்" என்று கேட்டிருக்கிறார். அவர் அவ்விடத்திலிருந்தாரென்பதும் ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. ஸ்ரீ கிருஷ்ணன் அவருக்குப் பதில் சொல்கிறார்.—"சாம்பலாற் சூழப்பட்ட நெருப்பு மறைபடுமா" வென்று. மாறு வேஷத்துடனிருக்கிற பாண்டவர்களைக் கண்டுபிடிப்பது எவராலும் முடியாத காரியம். மற்றவர்கள் ஒருவருமவர்களைத் தெரிந்துகொள்ளவில்லை யென்பதில் வியப்பொன்றுமில்லை. ஸ்ரீ கிருஷ்ணன தனது இயற்கை யறிவினாலேயே அடையாளம் கண்டார் என்பதிலிருந்து அவர் மற்றவர்களைக் காட்டிலும் நுட்பவறிவுள்ளவரென்று தெரிகிறது. இதைப்பற்றி ஓரிடத்திலும் வெளிப்படையாய்ச் சொல்லவில்லை. ஆனாலும் ஸ்ரீ கிருஷ்ணன் மனித அறிவைக்கொண்டே காரியங்களைச் சாதித்தார். எல்லோரைக் காட்டிலும் அவர் புத்திக்கூர்மையுள்ளவர். ஸ்ரீ கிருஷ்ணன் மற்ற காரியங்களிற்போல் புத்தியிலும் ஆதர்சபுருஷர்.

அர்ஜுனன் குறிப்பை யடித்துவிட்டதால் அங்கு வந்திருந்த மற்றவரசர்களவர்களுடன் விவாதம்தொடுத்தார்கள். பிச்சைக்காரனான பிராமணவேஷத்துடன் அர்ஜுனன் இருந்தான். ஒரு ஏழைப் பார்ப்பான் தங்களுடைய முகத்தில் புல்லை யெறிந்தானே (அவமானப்படுத்தினானே) என்பது அவர்களால் சகிக்க முடியவில்லை. அர்ஜுனனை யவர்கள் எதிர்த்தார்கள். சண்டையில் அர்ஜுனனே ஜயித்தான். இவ்விவாதத்தைக் கிருஷ்ணனே தீர்த்துவிட்டார். மகாபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் செய்த முதலாவது காரியம் இதுவே. அவர் எவ்விதமாக விவாதத்தைத் தீர்த்துவிட்டார் என்பதை விவரிப்பதும் நமது நோக்கம். விவாதத்தைத் தீர்க்க அநேக உபாயங்கள் இருந்தன. அவரே பெயர்பெற்ற வீரர். அவ்விதமே பலபத்ரரும் சிறந்த வீரர். ஸாத்யகி முதலான அநேக வீரர்களும் அவருக்கு உதவியாயிருந்தார்கள். அர்ஜுனன் அவருக்கு அத்தையின் பிள்ளை. ஸ்ரீ

கிருஷ்ணன் யாதவர்களையுதவிக்குஅழைத்துக்கொண்டும் அர்ஜுனனை யும் கூட்டிக்கொண்டு போர்க்களத்துக்குச் சென்றிருந்தால், சண்டை தக்ஷணமேயமர்ந்துவிடக்கூடும். பீமனாலும் அவ்விதமே சண்டையை யமர்த்திவிட முடியும். ஆனால் கிருஷ்ணன் தார்மிகரான ஆதர்ச புருஷர். யுத்தமில்லாமலே சாதிக்கக்கூடிய காரியங்களில் அவர் சண் டையை விரும்புகிறதில்லை. தன்னைக் காத்துக்கொள்ளவும், பிறரை இரக்ஷிக்கிறதற்காகவும் யுத்தம்செய்வதும் தர்மமே. தன்னைக்காக்க வேண்டிய சமயத்திலும், பிறரைக் காப்பாற்றுதலிலும் சண்டைசெய் யாமலிருப்பது மிகவும் அதர்மம்.

ஸ்ரீ கிருஷ்ணன் இவ்விதமான காரியங்களைத்தவிர வேறு காரியங் களில் ஒருகாலத்திலும் ஓரிடத்திலும் யுத்தத்துக்காக முயற்சிசெய்த தில்லை. தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகச் சண்டைசெய்யப் பின் வாங்கினதுமில்லை.

இவ்விடத்தில் சண்டையைப்பற்றி யவர் நினைக்கவேயில்லை. யுத்தம் செய்ய ஆயத்தமாயிருந்தவர்களிடம் அவர் சொன்னார்.

"அரசர்களே! பாண்டவர்கள் தர்மத்தினாலேயே ராஜகுமாரியை யடைந்திருக்கிறார்கள். பொறுமை கொள்ளுங்கள். சண்டை செய் வதிற் பயனில்லை" என்று அவர் சொன்னார். தர்மம் என்ற வார்த்தை சிலர் மனதில் தோன்றவில்லையானாலும் க்ஷத்திரியர்களில் அநேகம் பெயர்கள் தர்மசீலர்களாகவிருந்தார்கள். அவர்கள் விருப்பத்துடன் சண்டைக்குச் செல்பவர்களில்லை. ஆனாலும அவர்கள் கோபத்தி லழுந்தித் தர்ம சங்கதியையே மறந்துவிட்டார்கள். ஆனால் எவர் தர்மாத்மாவோ, தர்மத்தை வளர்ப்பதே எவருக்கு ஆயுள் முழுமையும் உத்தேசமோ அந்தக் கிருஷ்ணனுக்கு மட்டும், எந்தக் கக்ஷியில் தர்ம மிருக்கிறதென்ற சங்கதி, மறந்துபோகவில்லை. தர்மத்தை மறந்தவர் களுக்குத் தர்மத்தை நினைப்பூட்டுவதும், தருமமறியாதவர்களுக்கு அதைப்போதிப்பதுமே, அவருடைய காரியமாக விருந்தது.

அரசர் கூட்டத்தை நோக்கி ஸ்ரீ கிருஷ்ணன் சொன்னார். "இவர்கள் தர்மத்தால் கன்னிகையை யடைந்தார்கள். ஆகையால்

யுத்தம் செய்வதிற் பிரயோஜனமில்லை” என்று. அதைக்கேட்டு அரசர்கள் சண்டையை நிறுத்தினார்கள். பாண்டவர்கள் · தங்களுடைய ஆசிரமம் சென்றார்கள். கொழுப்படைந்த வரசர்களைப் பார்த்து, அவர்களுக்குத் தர்மத்தைப் போதித்துச் சண்டையை நிறுத்தும்படி வேறு மனிதன் சொல்லியிருந்தால் அவர்கள் சண்டையை நிறுத்தியிருக்கவே மாட்டார்கள். இது நிச்சயம். தர்மத்தை யெல்லோருக்கும் ஞாபகப்படுத்தின ஸ்ரீ கிருஷ்ணன் கௌரவமுள்ளவர்; மகா பலசாலி; புத்தியிலும் தர்மத்திலும் கைவலிமையிலும் எல்லோருக்கும் முதன்மையானவர்; எல்லாக் காரியங்களையும் நன்றாகப் பரிசீலனை செய்பவர். நன்றாகப் பரிசீலனை செய்யப்படாத காரியம் ஒருகாலும் பயனைத்தராது. இவ்விதமான தர்மமர்மங்கள் ஸ்ரீ கிருஷ்ண சரித்திரத்தின் மூலமாக வெளியாகும்.

இரண்டாவது அதிகாரம்.

கிருஷ்ண யுதிஷ்டிர ஸம்வாதம்.

அர்ஜுனன் யுத்தத்தை நிறுத்திவிட்டு பிராதாக்களை யழைத்துக் கொண்டு தனது ஆசிரமம் சென்றான். அரசர்களும் தமது இடங்களுக்குப் புறப்பட வாரம்பித்தார்கள். துரௌபதியின் ஸ்வயம்வரம் நடந்தது. உற்சவங்களெல்லாம் தீர்ந்துவிட்டன. ஸ்ரீ கிருஷ்ணனுக்கு இனிப் பாஞ்சாலத்திலிருக்கவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. ஆதலால் தன்னிடத்துக்குச் சென்றார். மற்ற அரசர்களும் தங்களுடைய ஊர்களுக்குச் சென்றார்கள்.

அவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வேறு காரியம் இருந்திருக்கவில்லை. அவருக்கு யுதிஷ்டிரருடன் அதற்குமுன் சேர்க்கையாவது சல்லாபமாவது ஏற்படவில்லை. “வாஸுதேவன் யுதிஷ்டிரரை யெதிர்கொண்டுபோய் பாதங்களில் நமஸ்கரித்து அவருக்குத் தன்னுடைய பரிசயத்தைக் கொடுத்தார்” என்று மகாபாரதக்காரர் எழுதியிருக்கிறார். பலராமரும் அவ்விதமே செய்தார். ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் இதுதான் முதன்முதலாகப் பரிசயம். அத்தை

யின் குமாரர்கள் என்பதால் மட்டும் ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களுடன் சல்லாபம் செய்திருக்கிறார். லௌகிக விவகாரச் சம்பந்தமாக அவர்களுடன் யாதொரு வார்த்தையும் சொல்லவில்லை.

தாய்வழியிலாவது தகப்பன்வழியிலாவது பிராதா என்ற முறையிலிருப்பவர்கள் அரசர்களாவது அல்லது பெரிய மனிதர்களாவது இருந்தால் அவர்களிடம் யாசிப்பதற்காக ஜனங்கள் அவர்களுடன் வார்த்தையாடுவது உலகவழக்கம். பாண்டவர்கள் யாசகர்கள். ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களுடன் வார்த்தையாடியதால் அவருக்கு யாதொரு பிரயோஜனமும் இல்லை. யாதொரு காரியமும் அவருக்கு ஆகவேண்டியதில்லை. அவர் விநயத்துடன் யுதிஷ்டிரரிடம் சல்லாபம் செய்து பாண்டவர்களுக்கு மங்களத்தை விரும்பினவராக விவாகம் முடியும் வரையில் பாஞ்சாலநகரிலேயே தன்னுடைய விடுதியிலிருந்து வந்தார்.

விவாகம் முடிந்தவுடன் பாண்டவர்களுக்குச் சீர்வரிசைகளாக, வைடூர்யமணிகள், சுவர்ணாபரணங்கள், விலையுயர்ந்த வஸ்திரங்கள், அழகிய படுக்கைகள், பலவித வீட்டுச்சாமான்கள், எண்ணிறந்த வேலையாட்கள், பழக்கப்பட்ட யானைகள், சிறந்த குதிரைகள், கணக்கிலடங்காத தேர்கள், கோடிக்கணக்கான தங்கம் வெள்ளிச்சாமான்கள் இவைகளை வரிசை வரிசையாகச் செய்து ஸ்ரீ கிருஷ்ணன் அனுப்பி வைத்தார. அப்பொழுது பாண்டவர்களிடம் இவையிருந்திருக்கவில்லை. அவர்கள் பிச்சை யெடுப்பவர்களாயும் கஷ்டப்படுகிறவர்களாயு மிருந்தார்கள். ஆதலால் இவையெல்லாம் அவர்களுக்கு அவசியமாயிருந்தன. ராஜகன்னிகையுடன் விவாஹத்தால் அவர்கள் கிருகஸ்தர்களானார்கள். கிருஷ்ணனால் அனுப்பப்பட்ட வஸ்துக்களையெல்லாம் யுதிஷ்டிரர் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார். ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களிடம் போகாமல் தன்னிருப்பிடத்துக்குச் சென்றான். அதன்பிறகு அவர் பாண்டவர்களை யணுகவில்லை. பிறகு அவர்கள் பாதி ராஜ்யத்தை யடைந்து இந்திரப்பிரஸ்தத்தில் பட்டணத்தை நிர்மாணம் செய்து அதில் வாசம் செய்ய வாரம்பித்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் எவ்விதமாய்ச் சந்திப்பு ஏற்பட்டதென்பதைப்பற்றிப் பிறகு சொல்

வோம். ஸ்வயநலம் பாராட்டாதவரும், கஷ்டமடைந்தோருக்கு ஹிதம் செய்தலையே விரதமாகக் கொண்டவரும ஆகிய ஸ்ரீ கிருஷ்ணனைக் குறித்து மேற்றிசையாரும் அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் தூஷணவார்த்தை சொல்லுகிறார்கள். அவரைக் கெட்ட தொழில் செய்கிறவரென்றும், துர் எண்ணமுள்ளவரென்றும், பாவம் செய்கிறவரென்றும் அவர்கள் தூற்றுகிறார்களேயென்பது மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. இதிஹாஸத்தின் உண்மையைப் பிரித்துத்தெரிந்து கொள்ளச் சக்தியற்றவர்களும், அதில் சிரத்தையில்லாதவர்களும், அதில் முயற்சிசெய்யாதவர்களுமிவ்விதமாக நினைப்பது இயல்புதான். இதிஹாஸத்தின் உண்மையைத் தெரிந்துகொண்டவர்களா யிருந்தால் அப்படிப்பிதற்றியிருக்கமாட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் ஆதர்சபுருஷர். அவருடைய மற்ற வழக்கங்களைப்போல அவர் ஜனங்களின் பேரில் பிரீதியுடனிருப்பதான நல்ல குணமும் படிப்படியாக வெளிப்பட்டது.

நல்ல ஸ்திதியில் இருப்போர்க்கு உபகாரம் செய்து அவர்களின் பிரியத்தை எவன் பெற விரும்புகிறானோ அவன் உத்தமனல்லன். ஸ்ரீ கிருஷ்ணன் அவ்விதமானவர் இல்லை. தாழ்ந்த நிலைமையிலிருப்பவர்களையும் குடும்பிகளையும் தேடிப்பார்த்துத் தனதுகாரியங்களுக்குக் குறைவு வந்தாலும் அதைப்பாராட்டாமல், அவ்வேழைகளின் காரியத்தை நிறைவேற்றி, அவர்களிடம் பிரீதிவைத்துவந்தார். அவருடைய பிரீதிதான ஆதர்சப்பிரீதி. ஸ்ரீ கிருஷ்ணன் இவ்விதம் செய்தது ஆச்சர்யமல்ல. சிறிய காரியங்களிலிருந்துதான் மனிதனுடைய உண்மையான ஸ்வபாவம் தெரியவரும். துஷ்டனும் ஒரு பெரிய காரியத்தைச் செய்யக்கூடும். ஆனால் சிறுகாரியங்களிலும எவனுடைய தர்மம் வெளிபாகிறதோ, அவனே உண்மையில் மகாத்மா. ஸ்ரீ கிருஷ்ணனுடைய சிறியது அல்லது பெரியது எல்லாக்காரியங்களையும் பரிசிலனை செய்ய நாம் பிரவர்த்திக்கிறோம். நாம் இதுவரை அவ்விதமான முயற்சியைச் செய்யாததற்காக வியசனிக்கிறோம். அவ்விதம்செய்யாமல் ஸ்ரீ கிருஷ்ணசரித்திரத்தின் மத்தியில் "கூஹதாரே ஹூதஹ திமஜ:" என்பதை மட்டும் கற்றுக்கொண்டோம். அது உண்மையோ, உண்மையான சரித்திரத்தைச்சார்ந்ததோ, என்பதை நன்று விசாரியாமல் பொய்யானகட்டுக்கதைகளை மட்டும் இதுவரை பரி

சிலவை செய்து வந்தோமே; அது நமது துர்ப்பாக்கியம். ‘ஸுஹ்ருதாரோ ஹத உக்ரமஜ:’ என்கிற சங்கதியில் எவ்வளவுவரை பொய்யென்பதைத் துரோணவதம் என்கிற அத்தியாயத்தில் பிரமாண மூலமாக நிரூபிப்போம்.

இந்த விவாக சம்பந்தமான பர்வத்திலே வியாஸரால் ஒரு வேடிக்கைக் கதை சொல்லப்பட்டிருக்கிறது. துருபதவரசன் தன் கன்னிகைக்கு ஐந்து புருஷர்கள் ஏற்பட்டார்களெனக் கேள்விப்பட்டு, அவர்களுக்குக் கெடுதி செய்தான். வியாஸர் கெடுதி செய்யக்கூடாதென்று அவனைக் கண்டித்தார். அதற்காகத் துருபதனுக்கு ஒரு அற்புதமான உபாக்கியானத்தையும் அவர் சொன்னார். “ஒருகாலத்தில் இந்திரன் கங்காஜலத்தின் நடுவில் அழுதுகொண்டிருக்கிற ஓரழகிய ஸ்திரீயைக் கண்டான். அவளை அழுகிற காரணத்தை யவன் வினவினான். அதற்குப்பதிலாக அவள் இந்திரனைச் சமீபத்தில் வரும்படி சொன்னாள். இந்திரனைச் சமீபத்தில் வரவழைத்து அவனுக்கு அங்கே ஓர் வாலிபனும ஒரு யுவதியும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருப்பதைக் காட்டினாள். அவர்கள் இந்திரனுக்கு மரியாதை செய்யவில்லை. இந்திரன் கோபமடைந்தான். அவ்வாலிபன் ஸாக்ஷாத் மகாதேவர். இந்திரன் கோபமடைந்ததைப் பார்த்து மகாதேவரும் கோபமடைந்து அவனையொரு பள்ளத்தில் (குகையில்) நுழையும்படி சொன்னார். அவன் நுழைந்து பார்க்கும்போது தன்னைப்போல் வேறு நான்கு இந்திரர்கள் அங்கேயிருப்பதைக் கண்டான். மகாதேவர் அவ்வைந்து இந்திரர்களையும பூமியில் மனிதர்களாக ஆகும்படி சபித்தார். அவர்கள் மகாதேவரிடம் வந்து “இந்திரன் முதலான ஐந்து தேவர்கள் யாங்கள் எந்த ஸ்திரீயின் கர்ப்பத்தில் உற்பத்தி யாவோம்; சொல்லியருள வேண்டிய” எனப் பிரார்த்தித்தார்கள். பிறகு அவ்வைந்து தேவர்களுக்கும், பஞ்சபாண்டவர்கள் ஔரஸபுத்திரர்கள் ஆனார்கள். ஒரு குற்றமும் செய்யாத அந்த ஸ்திரீயைப் பார்த்து அவ்வைவர்களுக்கும் நீ பத்தினியாவாய் என்று மகாதேவர் சபித்தார். இனிச் சொல்லப்போகிற சங்கதி மிகவும் ரகஸ்யமானது. ஸ்ரீமந்நாராயணன் இச்சங்கதியைக் கேட்டுத் தன்னுடைய தலையிலிருந்து இரண்டு மயிர்களை யெடுத்து அவளிடம்

விட்டெறிந்தார். அவைகளில் ஒரு மயிர் வெண்மைநிறமுள்ளது. மற்றொன்று கருப்புநிறமுள்ளது. வெளுப்புமயிர் பலராமனாகவும் கருப்புமயிர் கிருஷ்ணனாகவும் ஆயின!"

மகாபாரதம் மூன்றாவது தடவை தொகுக்கப்பட்டபோது இக் கதையில் நுழைக்கப்பட்டதென்பதைப் படிப்போர்க்கு நாம்சொல்ல வேண்டுவதில்லை. மூலபாரதத்தின் எந்த அம்சத்திலும் இக்கதை காணப்படவில்லை.

இந்த உபாக்கியானத்தின் வசனநடை மகாபாரதத்தின் மற்றைய பாகங்களின் வசனநடைக்கு மிகவும் தாழ்ந்தது. மகாபாரதத்தின் மற்றப் பாகங்களுக்கும் இந்த உபாக்கியானத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. இவ்வுபாக்கியானம் எழுதப்படாமலிருந்தாலும் மகாபாரதத்தின் மற்றக் கதைகளை ஸ்பஷ்டமாய் அறிந்துகொள்ளக் கூடும். இந்த வித்தியாஸத்துக்கு வியாஸர் ஒரு உபாயம் சொல்லி யிருக்கிறார். அதுவும் அந்த அத்தியாயத்திலிருக்கிறது. அது சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கிறது. ஆதி மகாபாரதத்தில் அது அடங்கியிருக்கிறது. முன் சொன்ன உபாக்கியானத்துக்கு அது முற்றிலும் வேறானது. இரண்டு கதைகளிலும் துரௌபதியின் பூர்வ ஜன்ம விருத்தாந்தம் வெவ்வேறாகக் காணப்படுகிறது. இரண்டுக் குள் ஒன்று பிரக்ஷிப்தம் என்பதில் சந்தேகமில்லை. நாம் இனிச் சொல்லப்போகிற காரணங்களால் முதலிற் சொல்லப்பெற்ற உபாக் யானமே 'பிரக்ஷிப்தம்' என்று வெளியாகும். மகாபாரதத்தில் மற்ற எல்லாவிடங்களிலும் இந்திரன் ஒருவனே காணப்படுகிறான். இதி லோ இந்திரர்கள் ஐந்து பேர்கள். மகாபாரதத்தின் மற்றெல்லா விடங்களிலும் பாண்டவர்கள் முறையே தர்மர், வாயு, இந்திரன், அசுவினிகுமாரர்கள் என்ற இவர்களின் குமாரர்கள். இவ்விடத்திலோ பாண்டவர்களின் தகப்பன்மார் எல்லோரும் இந்திரர்களே.

யாதொரு ஒரு மூடன் பொய்க்கதையைத் தொகுத்திருக் கிறான். ஜகத்தை ஜயிக்கக்கூடியதான மகாபாரதத்தில் மூடனாற் சொல்லப்பட்ட கதையிருப்பது இயலாது என்பதற்குச் சந்தேக மில்லை. மகாபாரதம் மூன்று சமயங்களில் தொகுக்கப்பட்டிருக்கிற தென்பதை நாம் இதற்குமுன் உதாரணங்களின்மூலம் நிரூபித்திருக்

கிறும். எந்த விஷ்ணுவானவர் ஸூர்யனின் மூர்த்தியாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறாரோ, அவர் இம்மூடர்களின் கையிலகப்பட்டு என்னபாடு படுகிறார்; அவருக்கு மீசை, தாடி, தலைமயிர், வெள்ளை மயிர், கறுப்புமயிர் இவைகள் எல்லாம் உண்டாகிவிட்டன. இக்கதைகள் எல்லாம் பிரக்ஷிப்தங்கள். இவ்விடத்தில் மகாதேவரைச் 'சர்வேசுரரென்றும், ஸ்ரீமந்நாராயணனை அவருடைய கேசமாத்திரமாகவும் விவரித்திருக்கிறது. மகாபாரதத்தைப் பரிசீலனை செய்யும்பக்ஷத்தில் அநேகவிடங்களில் கிருஷ்ணபக்தர்களுக்கும், சைவர்களுக்கும் விரோதத்தை ஏற்படுத்தக்கூடிய சங்கதிகள் காணப்படுகின்றன. விரோதங்கள் காணப்படுகிற பாகங்களெல்லாம் பிரக்ஷிப்தங்கள். இவ்வுபாக்கியானம் ஆதிபாரதம் தொடுக்கப்பட்டு வெகுகாலத்துக்குப்பிறகே தொருக்கப்பட்டிருத்தல்வேண்டும். எவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணனின் உபாஸனையும் பரமசிவத்தின் உபாஸனையும் பலத்திருக்கின்றனவோ, அவ்விடத்தில் விவாதமும் அதிகமாகவிருக்கின்றது. மகாபாரதம் இயற்றப்பட்டகாலத்தில் இவ்விருவுபாஸனங்களும் மிகுதியாயில்லை. அந்தச் சமயத்தில் வேதங்களிற்கண்ட தேவதைகளைப்பற்றியே சொல்லிவந்தார்கள். பிறகு இருகக்ஷிக்காரர்களும் தங்கள் தங்கள் பக்ஷத்தை யுறுதிசெய்வதற்காக அநேக புதுக்கதைகளை நுழைத்து, மகாபாரதக் கிரந்தத்தையே பெரிதாக்கிவிட்டார்கள். இருகக்ஷிக்காரரும் மூலமகாபாரதத்தை ஓர்புறம்ஒதுக்கிவிட்டுத்தங்களுடைய இஷ்டதேவதைகளைப் பெருமைப்படுத்த வேண்டியதற்காகச் சிவமாகாத்மியத்தையும் விஷ்ணுமாகாத்மியத்தையும் காட்டக்கூடியவையான புதுக்கதைகளைத் தொகுத்து மகாபாரதத்தில் புகவிட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி யாநுசாஸந பர்வத்தில் அநேக சிறந்த உதாஹரணங்கள் காணக்கிடக்கின்றன. விருப்பமிருந்தால் அந்தப்பர்வத்தைப் படித்து அவ்வுதாஹரணங்களைத் தெரிந்துகொள்ளலாம். சிலவற்றில் கழுதையுடலின் நாற்றத்தையும் காணலாம்.

மூன்றாவது அதிகாரம்.

சுபத்திரையின் ஹரணம்.

த்ரௌபதியின் ஸ்வயம்வரத்தின்பிறகு ஸுபத்ராஹரணத்தில் நாம் ஸ்ரீ கிருஷ்ணனைக் காண்கிறோம். ஸ்ரீ கிருஷ்ணன் சுபத்ராஹரணத்தை எவ்விதமாய் நிறைவேற்றினரோ அதைக் கி. பி. 19-வது நூற்றாண்டிலிருப்பவர்கள் ஒத்துக்கொள்ளுகிறதில்லை. அந்நூற்றாண்டிலேயே அவர்களாற் கல்பிக்கப்பட்ட நீதிசாஸ்திரத்தைக் காட்டிலும் பெரியதான ஜகதீசுவரனின் நீதிசாஸ்திரம் ஒன்று இருக்கிறது.* அது எக்காலத்திலும் எத்தேயத்திலும் விளங்கக்கூடியது. அந்தச் சாஸ்திரத்தின் நீதியாகவே நாம் ஸ்ரீகிருஷ்ணனின் நடத்தைகளைப் பரீக்ஷை செய்வோம். இவ்விதமான விசாரணையில் நாம் பிரவர்த்திக்குமுன், சுபத்திராஹரண விருத்தாந்தமானது மூலபாரதத்திலுள்ளதா? அல்லது பிரக்ஷிப்தமாவென்று நிச்சயித்தல் வேண்டுமெனக் கிருஷ்ணபக்தர்கள் கேட்கக்கூடும்.

சுபத்திராஹரண விருத்தாந்தத்தை மூலபாரதத்திலேயே காணலாகும். முதலாவது தொகுதியிலேயே இருக்கிறது. இந்த விருத்தாந்தம் அநுக்கிரமணிகையிலும், பர்வசங்கிரகத்திலும் காணப்படுகிறது. பாரதத்தின் முதலாவது தொகுதி ஸரளமான (எளியதான) ரீதியிலிருக்கிறது. அதின்பின் தொகுதிகள் அலங்காரங்கள் நிரம்பியனவாயும் அதிசயோக்தி (அத்யுக்தி)கள் உள்ளனவாயும் இருக்கின்றன. ஆனால் சுபத்திராஹரண விருத்தாந்தம் பெரும்பாலும் ஸ்வபாவமான ரீதியுள்ளதாயும் அலங்காரம் அதிசயோக்திகளைப் பெறாததாயுமிருக்கிறது. அக்கதையை மகாபாரதத்திலிருந்து எடுத்துவிட்டால் அக்கிரந்தத்துக்கே குறைவு ஏற்படும். மகாபாரதமும் நிறைவுபெறாது. சுபத்திரையிடம் அபிமன்யுவும், அபிமன்யுவிடம் பரிக்ஷித்தும், பரிக்ஷித்துவிடம் ஜனமேஜயனும் ஜனித்தார்கள். ஸுபத்திரையுடையவும், அர்ஜுனனுடையவும் வம்சத்திற் தோன்றின வரசர்கள் வெகுகாலம் வரையிலும், பாரதவர்ஷத்திற் சிறந்த வரசர்களாக விளங்கிவந்தார்கள். துரௌபதியின் வம்சத்தில் ஒரு அரசர்களும் காணப்படவில்லை.

யஜுர்வேதம் மாத்தியந்தினசாகை 23-வது அத்தியாயம் 18-வது கண்டிகை 4-வது மந்திரத்தைப்பிந்தின பாரதத்தில் உதாஹரித்திருக்கிறது. இந்த மந்திரத்துக்கு "weber" முதலான மேற்றிசையோர் வேறு அர்த்தம் கற்பித்திருக்கிறார்கள். ஸ்ரீ சாயணாசாரியார் "காம்பீல்ய ஸப்தேந ஸ்லாக்யா வஸ்து விசேஷ உச்யதே" காம்பில்யம் என்ற வார்த்தையால், சிறந்ததோர் வஸ்து குறிக்கப்பட்டிருக்கிறது என்று வியாக்யானம் செய்திருக்கிறார். மேற்றிசையோர் சாயணாசாரியாரைக் காட்டிலும் தங்களுக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஞானம் அதிகம் என்று நினைத்திருக்கிறார்கள்.

அசுவமேதயாகம் செய்கிற வாசர்களுடைய பத்தினிகளுக்கிந்த மந்திரத்தைச் சொல்லிக்கொடுக்கிறார்கள். அவர்களும் தாங்கள் காம்பில்யத்திலிருக்கிற சுபத்ரவென மந்திரபூர்வமாகப் பதிலையும் சொல்லுகிறார்கள். ஸாமசிரமீயென்பவர் காம்பில்யமென்ற சொல்லுக்கு 'கல்யாணீ' என்றும் 'ஸௌபாக்யவதி' யென்றும் அர்த்தம் செய்திருக்கிறார். மஹிதரர் என்பவர் காம்பில்ய நகரத்திலுள்ள ஸ்திரீகள் எல்லோரும் மிகவும் ரூபலாவண்யமுள்ளவர்கள் என்று விவரித்திருக்கிறார். ஆகையால் இந்த மந்திரத்தின் அர்த்தம், "நான் ஸௌபாக்கியவதியாயும ரூபலாவண்யமுள்ளவளாயு மிருப்பதால் அசுவத்தின் சமீபத்தில் வந்திருக்கிறேன்" என்பது.

யுதிஷ்டிரர் அசுவமேதயாகம் செய்தாரென்றும் அவருக்கு முன்னிருந்த வைதிக வாசர்களும் அசுவமேதயாகம் நடத்தினார்களென்றும், மகாபாரதத்திலும், பழைமையானகிரந்தங்களிலும்காணக்கிடக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் வெகுகாலத்துக்குமுன் முதல் இந்தமந்திரம் இருந்துவருகிறது. தற்காலத்தவர்கள் காப்பியக் கிரந்தங்களிலிருந்து பெயர்களையெடுத்துத் தங்களுடைய குழந்தைகளுக்கு நாமகரணம் செய்வது வழக்கம். அதுபோல் அக்காலத்தவர்கள் வேதத்திலிருந்து பெயர்களை யெடுத்துத் தங்களுடைய பிள்ளை பெண்களுக்குப் பெயர் வைத்தார்களென்பது பொருந்தும்.

வேதமந்திரத்திலிருந்தே காசியாசன் தன்னுடைய மூன்று பெண்களுக்கும், அம்பை, அம்பிகை, அம்பாலிகை யெனப்பெயரிட்டான். இவ்விதமாகவே ஸ்ரீ கிருஷ்ணனின் சகோதரிக்கும ஸுபத்

ரையென வேதமந்திரத்தை யனுசரித்துப் பெயர் வைக்கப்பட்டிருக்கலாமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆதலால் ஸுபத்ராஹரணத்தின் பரிசிலனையிற் பிரவர்த்திப்போம்.

நாம் இதைப்படிப்போர்களை இவ்விதமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். மற்றக் கிரந்தங்களிலிருந்தோ, நாடகங்களிலிருந்தோ, கதை சொல்பவர்களிடமிருந்தோ, கிழவிகளின் பழங்கதைகளிலிருந்தோ, தாங்கள் படித்தோ கேள்விப்பட்டோ தெரிந்துகொண்ட சங்கதிகளை அவர்கள் முற்றிலும் மறந்துவிடவேண்டுமென்பதே. மகாபாரதத்தில் எவ்விதமாகச் சொல்லியிருக்கிறதோ அவ்விதமாகவே, நாம் ஸுபத்ராஹரணத்தைப்பற்றி விவரிக்கத் தொடங்குவோம்.

துரௌபதியின் விவாகத்தின்பிறகு பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தில் சௌக்யமாக வாசம்செய்து வந்தார்கள். எது காரணத்தாலோ அர்ஜுனன் இந்திரப்பிரஸ்தத்தைவிட்டு வெளியேறிப் பன்னிரண்டு வருஷகாலம் பிரதேசங்களிற் சுற்றிக்கொண்டிருந்தான். அநேக தேசங்களுக்குப் போனதின்பிறகு துவாரகைக்கு வந்து சேர்ந்தான். யாதவர்கள் அவனுக்கு உபசாரமும் மரியாதையும் செய்தார்கள். அவன் சிலநாட்கள்வரை யங்கேயே இருந்தான். ஓர் சமயம் யாதவர்கள் 'ரைவதக' பர்வதத்தில் ஒரு பெரிய திருவிழாக் கொண்டாடினார்கள். அவ்விடத்தில் யாதவவீரர்களும் குலஸ்திரீகளும் வந்திருந்து களிப்படைந்தார்கள். மற்ற ஸ்திரீகளுடன், சுபத்திரையும் வந்திருந்தாள் அவள் குமரிப் பெண்ணாகவும சிறியவளாகவுமிருந்தாள். அவளைக்கண்டு அர்ஜுனன் மோகிததான். ஸ்ரீ கிருஷ்ணன் அதையறிந்து "தோழனே! நீ காட்டில் திரிகிறவனாயிருந்தும் அனங்கனின் பாணத்தால் பரபரப்பை யடைந்துவிட்டாய்" என்று அர்ஜுனனிடம் சொன்னார். அர்ஜுனன் தன்னுடைய தப்பிதத்தை யொப்புக்கொண்டு தனக்குச் சுபத்திரை பார்யையாக ஆகும்படியான ஏற்பாட்டைச் செய்யும்படி ஸ்ரீ கிருஷ்ணனைப் பிரார்த்தித்தான். ஸ்ரீ கிருஷ்ணன், "ஹே! அர்ஜுனா! க்ஷத்திரியர்களுக்கு ஸ்வயம்வரமே செய்யத்தகுந்தது. நீ, ஸ்திரீகளின் ஸ்வபாவத்தை நன்றாயறிந்துகொள்ளவில்லை. அவ்விஷயத்தில் நமக்குச் சந்தேகம் உண்டாயிருக்கிறது. க்ஷத்திரியர்கள் விவாகம் செய்துகொள்வதற்காகத் தங்களுடைய கைவ

விமையாற் கன்னிகைகளை யபஹரிப்பதே சிலாக்கியம் என்று தர்ம சாஸ்திரம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நீ ஸ்வயம்வர காலத்தில் வருவாயானால் உனது புஜபலத்தைக்கொண்டு நமது சகோதரியான சுபத்திரையை யபஹரித்துப் போகலாமென்று பதிலுரைத்தார்.

இதை நினைத்துக்கொண்டே அர்ஜுனன் முதலில் குந்திக்கும் யுதிஷ்டிரருக்கும் தெரிவிக்கும்படி தூதனையனுப்பினான். ரைவதகப் பர்வதத்தைப் பிரதக்ஷிணம்செய்துகொண்டு சுபத்திரை, துவாரகையை நோக்கிச்செல்லும்போது அர்ஜுனன் அவளைப் பலவந்தமாக எடுத்துத் தனது தேர்மீது வைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான்.

தற்காலத்தில் ஒரு க்ஷத்திரியன் தனக்கு விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று பிறருடைய சகோதரியை பலாத்காரமாய் எடுத்துப் போவானேயானால், அவன் எல்லோராலும் நிந்திக்கப்படுவான். ராஜதண்டனைக்கும் உள்ளாவான். அக்காலத்தில் க்ஷத்திரியர்கள் அப்படிச்செய்வதில் யாதொரு குற்றமுமில்லை. ஜனங்களின் கண்களில் மண்ணைத்தூவி கிருஷ்ணனை எவ்விதத்திலும் சிலாகிக்கவேண்டும் என்ற எண்ணம் நமக்கு இல்லை. அவ்வபிப்பிராயம் நமக்கு இருந்திருக்குமானால் ஸுபதராஹரணத்தையாதைப் பிரக்ஷிப்தமென்று சொல்லியிருப்போம். ஒருவனை யுயர்த்திக்கூறவேணுமென்று ஒருவனுக்கும பொய்ப்புகழை நாம கொடுக்க விரும்பவில்லை. தர்மத்துக்கு விரோதமாக ஒரு காரியத்தையும் நாம் செய்யமாட்டோம். தர்மத்துக்கு உயர்வை விரும்புவோமேயொழிய அதன் தாழ்வை ஒருநாளும் விரும்பமாட்டோம, உள்ளபடி விருத்தாந்தத்தைச் சொல்லுவோம். அதைக் கவனிப்பீர்களாக.

ஒருவனுடைய பெண்ணை மற்றொருவன் எடுத்துப்போனால் எதனால் குற்றம் ஏற்படுகிறது? குற்றத்திற்கு மூன்று காரணங்களுண்டு. முதலாவது, அந்தப்பெண்ணுக்கு அபவாதம்ஏற்படும்; இரண்டாவது, பெண்ணின் தாய் தகப்பன் பந்துக்களுக்கு நிந்தையேற்படும். மூன்றாவது, ஜனங்களின்மீதில் அபவாதம் வரக்கூடும்.

மஹோபாத்தியாயர், டாக்டர் என்னும் பட்டங்களை அவர்களுக்கு அளித்துக் கௌரவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பாஷாபிமானிகளும் கல்வியின் மேம்பாட்டைக் கருது வோரும், தமிழ்ப் பெரியாராகிய ஐயரவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாட விரும்புவார்கள் என்பது திண்ணம்.

பிறநாடுகளிலே கல்வித்துறைகள் பலவற்றில் மேம்பாடுற்ற பெரி யார்களின் வாழ்க்கையில் இவ்வகையான சந்தர்ப்பங்களை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டுரைத் தொகுதிகளை வெளியிட்டு, உருவச்சிலைகளை நிறுவி, உபகாரநிதிகளையும் அமைத்துப் பலவாறுகப் பாராட்டுகிறார்கள்.

தமிழ்மக்களுக்கு ஐயரவர்களிடமுள்ள நன்றியறிவைப் புலப் படுத்துவதற்கும், சிறந்த பாஷாவிற்பன்னராகவும் போதகாசிரியாக வும் பதிப்பாசிரியராகவும் இருந்து நெடுங்காலமாக அவர்கள் செய்து வரும் அருஞ்செயல்களைப் பாராட்டுவதற்கும், இது தக்க சமயமாகும்.

ஆதலால் மார்ச்சு மாதம் 6-ம் தேதி புதன்கிழமை மாலை 5-மணிக்கு, ஐயரவர்களுக்கு உபசாரப்பத்திரம் ஒன்று அளித்தும், அவர்களுடைய உருவப்படத்தைச் சென்னைச் சர்வகலாசாலை மண் டபத்தில் நிலைபெற வைத்தும், அவர்கள் செய்துவரும் நூற்பதிப்பு வேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தும், பொருளுதவி செய்வோர் கருத்துக்கு ஒத்தபடி வேறு உசிதமானவற்றைச் செய்தும், அவர்களை இச்சமயம் பாராட்ட எண்ணியிருக்கிறோம்.

இந்த விழாவிலே தாங்களும் கலந்து கொள்வீர்களென்று நம்பு கிறோம். தங்கள் உடன்பாட்டையும் தங்களுடைய கருத்துக்களையும் தெரிவிப்பதோடு தங்களாலான பொருளுதவியையும் செய்யும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

பணம் அனுப்ப விரும்புவோர்கள் மயிலாப்பூர், வடக்குமாட வீதியிலுள்ள ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்களுக்கு

அனுப்பலாம். பொருளுதவி செய்வோரின் கூட்டமொன்று மார்ச்ச-மாதம் முதல் தேதி வெள்ளிக்கிழமை மாலை $5\frac{1}{4}$-மணிக்குத் தேனாம் பேட்டை மௌப்ரேஸ் ரோட்டில், தலைவர் கனம் பி.டி. ராஜனவர்கள் வீட்டில் நடைபெறும். தாங்கள் அச்சமயம் வந்திருந்து விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டியனவற்றைச் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்,

இப்படிக்கு,

பி. டி. ராஜன்
(தலைவர்).

டி. சிவராமசேதுப் பிள்ளை
பெ. நா. அப்புஸ்வாமி
எஸ். வையாபுரிப் பிள்ளை
(காரியதரிசிகள்).

கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்
(பொக்கிஷதார்).

ஸ்ரீ:

வாய்மை

மக்களால் விரும்பப்படும் அறம் பொருள் இன்பம் என்ற மூன்றனுள் சாலச்சிறந்தது அறமேயாம். அவ்வறமும் பலதிறப்படும். அவற்றுள் வாய்மையென்பதும் ஒன்று. இது, மை விகுதி பெற்ற பண்புப்பெயர். மெய்யினது தன்மை என்பது இதன் பொருளாம். எவர்க்கும் யாதொரு தீங்குமுண்டாகாத நன்மையை யுரைப்பதால் வேதத்திற்கு வாய்மொழியென்று பெயர் வழங்கப்பெற்றது. "மாயா வாய்மொழி" என்றும், "வாய்மொழிப் புலவ" என்றும், "வாய்மொழி யோடையாக" என்றும் பரிபாடலில் வேதத்திற்கு வாய்மொழி என்று வழங்கிவருவதும் இங்கறியத்தக்கது.

எவர்க்கும் ஒரு சிறிது தீங்குமின்றி நன்மையை மொழிவதே வேதத்திற்குரிமையா யிருக்குமேல் பிறருக்கு இடுக்கணுண்டுபண்ணுகிற * அபிசாரவேள்வியை வேதமுரையா திருத்தல்வேண்டும்; அவ்வேள்வியை அது மொழிவதால், எவர்க்குந் துன்பத்தை விளைக்காத நன்மையை யுரைப்பதே அதற்குரிமையெனல் பொருந்தாதெனின்; அற்றன்று. 'கடவுளில்லை; மறுமை முதலியனவையுமில்லை; இவையுண்டென்று சொல்கிற ஒலிவடிவினதாகிய வேதமும் பிரமாணமாகமாட்டாது' என்று காண்டலளவையே பிரமாணமாகக்கொண்டு வாதிக்கிறவர்களின் நம்பிக்கையற்ற புத்தியை ஒழிக்கவேண்டுமென்பதில் நோக்குடையதாய் வேதம் மாரண வேள்வியை யுரைத்ததேயன்றி வேறில்லை யாதலால், உண்மை மொழிவதே வேதத்திற் கியல்பிற்றுமென்பதிற் குறையின்றென்க.

---

* அபிசாரவேள்வி—அதர்வண வேதத்தில் விதிக்கப்பட்ட மாரண வேள்வி. இதனைச் சேன யாகமென்றும் வழங்குவர். பகைவரைக் கொல்லக்கருதியவர்கள் இந்த வேள்வியைச்செய்து தாம் கருதிய பலனைப் பெறுவர். இதனைக் கண்கூடாக் காணலாம்.

கிற்க, தெய்வப்புலமை திருவள்ளுவனார் வாய்மைக்கு இலக்கண முரைக்க வந்தவிடத்து,

"வாய்மையெனப்படுவதியாதெனின்யாதொன்றும்
தீமையிலாதசொலல்"

என்றுரைத்தனர். ஈண்டுரைத்த இலக்கணப்படி பிறரொரு வருக்கும் துன்பம் விளைக்காத சொல்லைச் சொல்வதே வாய்மை யெனக்கொண்டால் ஒரு சில இடங்களில் உண்மையுரைப்பதால் பிறர்க்குத் துன்பம் விளையக்காண்கின்றோமாதலால், அவ்வுரையும் வாய்மை யாகாதொழிய வேண்டுமெனின்; இங்ஙனங் கொள்வதும் உடன்பாடேயாம்.

முன்னொருகாலத்தில் உண்மையுரைப்போன் என்பவன் காட்டின் மார்க்கமாகச் சென்றனன். அப்பொழுது சில மறையோர்கள் திருடர்கட்குப் பயந்து அங்குள்ள ஓர் குகையிற்போய் மறைந்து கொண்டனர். இதனை உண்மையுரைப்போன் பார்த்துக்கொண்டிருந்தான். அதுசமயம் திருடர்கள் உண்மையுரைப்போனை நோக்கி, 'இங்கெவரேனும் வந்தனரோ?' என்று வினவினர். அவன் 'இங்கிருக்கின்ற குகையில் சில வேதியர்கள் மறைந்திருக்கின்றார்கள்' என்றான். இதனைக்கேட்ட திருடர்கள் குகையிற்சென்று அங்கிருந்த மறையோர்களைக்கண்டு அவர்கட் கின்னலைச்செய்து அவர்கள் பாலுள்ள பொருள்களையும் வவ்விக்கொண்டார்கள். இங்கு உண்மை யுரைப்போன் சொல்லிய கூற்றால் வேதியர்கட்குத் துன்பம் விளைந்தமையால் பின்பு உண்மையுரைப்போன் நிரையத்துட்புக்கு வருந்தினன். இவ்வரலாறு பாரதத்திற் கேட்கப்படுகிறது. இதனால் உண்மை யுரையும் பிறர்கட்குத் துன்பத்தை விளைக்குமேல், அதுவும் வாய்மை யாகாதென்பது பெறப்பட்டது. இதனால் திருவள்ளுவனார், பொய்க் கூற்றாயினுமாகுக; மெய்க்கூற்றாயினுமாகுக; ஈண்டு இது முக்கிய குறிப்பன்று; பிறருக்கு இன்னல் விளைக்காதிருக்கின்ற உரையை மொழிவதுதான் வாய்மையாகக் கொள்ளத் தக்கதென்று தெரிவித்தார்.

இனி பலபேர்கட்கும் இன்னல் செய்துகொண்டிருப்பான் ஒரு கொடியோன் ஒருநாள் அரசனுடைய காவலர்களால் தாக்கப்பட்டு ஓரிடத்திற்சென்று ஒளித்துகொண்டான். இங்ஙனம் ஒளித்துக் கொண்டதை ஒருவன் பார்த்துக்கொண்டிருந்தான். இவனைக் காவலர்கள் கண்டு இவ்விடத்தில் ஓடிவந்தான் ஒருவனைப்பார்த்தாயா? என்று வினவினர். அப்பொழுது அவன் 'இன்னவிடத்தில் ஒளித்துக் கொண்டிருக்கிறான்' என்று அக்கொடியோனைக் காட்டிக்கொடுத் தான். காவலர்கள் அவனைப்பிடித்து அரசனிடத்திற் கொண்டுபோய்க் காட்டித் தண்டித்தார்கள். இங்கு இக்கொடியோன் விஷயத்தில் உண்மையுரைத்ததே அவனுக்கோர் துன்பத்தை விளைத்தது. முன் னுரைத்தபடி எவர்க்கும் ஒருசிறிதும் இன்னல் விளையாதிருக்கும் சொல்லைச்சொல்வதே வாய்மையாமெனக் கொண்டால், இங்கு இக் கொடியோன் விஷயத்திற்கூறிய உண்மையுரையும் வாய்மை யாகா தெனக் கொள்ளவேண்டும. இங்ஙனம் கொண்டால், "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட்டதனொடு நேர்" என்று கொடியவர்களை கொலையாற் றண்டிப்பதும் அறமாமென்ற உரையோடு மாறுபடும். ஆதலால் யாவர்க்கும தீமைபயவாது சொல் லல் வாய்மை யென்னின், அது கொடியார் விஷயத்திற் பொருந்தா தென்பது தேற்றம்.

இது பற்றியே திருவள்ளுவரும முதற்குறளால் வாய்மையின் இலக்கணம முழுமையும் சொல்லப்படவில்லை யென்பது கருதியே இரண்டாவது குறைகளில் "பொய்மையும் வாய்மையிடத்த பொறை தீர்ந்த, நன்மை பயக்குமெனின்" என்றுரைத்தார். முன்னுரைத்த குறளின் பொருளையே, "பொய்மையும் வாய்மையிடதத" என்று அநுவதித்தார். எவ்வாறெனின பொய்யுரையாயினும பிறர்க்கு ஏதம் விளையாதிருக்குமேல அதுவே வாய்மையாகும் என முதற்குறளிற் பெறப்பட்டதையே இந்தக் குறளினும் கூறினாராதலானெனக. இங் குப் "பொறைதீர்ந்த நன்மை யொன்றுள" தெனபது பெறப்பட் டது. ஒரு பொய்யுரையால் கொடியவனுக்கோர் நன்மையுண்டாகு மேல் அதனல் அக்கொடியோன் பலர்க்கும இன்னலை விளைவிப்பான். அதனல் இவனுக்குச் செய்யும் நன்மை பொறைதீர்ந்த நன்மை

யர்காது. அறிவொழுக்கங்களிற் சிறந்த நல்லார்கட்குத் தீமைபயவாத. வுரையை மொழிவதே வாய்மையின் இலக்கணமாகுமென்பது. பெறப் பட்டது. கண்ணன் கீதையில் நல்லோர்களைப் பாதுகாப்பதே முக்கிய பிரயோஜனமாகக்கொண்டு பிறப்பிலியாகியதான் அவதரிப்பதாக அருளிச்செய்தான். இதனால் நல்லோர்களைப் புரத்தலென்பது எத் துணையோ சிறந்த அறமாகுமென்பது போதரும்.

இத்தகை வாய்மையைப் பொன்னேபோற் போற்றாது பொய்த்து விடுவானாயின் அவன்றன் மனமே சாக்ஷியாயிருந்து அவினை வருத்தும். இதனை,

" தன்னெஞ்சறிவதுபொய்யற்கபொய்த்தபின்
தன்னெஞ்சேதன்னைச்சுடும் "

என்றார். மனுஷத்துவத்தின் நிலைமையறிந்தவர் பொய்யுரைக்கு மாறில்லையென்பது இதனால் விதிக்கப்பட்டது. ஆத்மாவானது உட் கரணமாகிய மனமுதலியவைகளையும், வெளிக்கரணமாகிய கண் கை கால் முதலிய அவயவங்களையுங்கொண்டு எல்லாவினைகளையுஞ் செய் கிறது. இந்த இரண்டு வகைக்காரணங்களுள் மனமென்ற உட்கரணமே ஆத்மாவுக்குச் சிறந்த துணையாகவும, சாக்ஷியாகவுமிருக்கும். வெளிக் கரணமாகிய கண் முதலிய காரணங்கட்கும், குடமுதலிய பொருள் கட்கும் சம்பந்தமுண்டானாலும், ஆத்ம மன சையோகமில்லாதபோது குட முதலிய ஞானமுண்டாவதில்லை. எப்பொழுதும் வேறு எந்த ஞானமும் ஆத்ம மன சையோகமில்லாதபோது உண்டாவதில்லை யென்பது ஒரு தலையாதலால், ஆத்மா மனதுடன கூடியபிறகுதான கருதல், காண்டல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், பரிசித்தல், நடத் தல், எடுத்தல் முதலிய எல்லாம நிகழ்கின்றன. மூர்ச்சையுற்றுக்கிடக் கின்ற காலத்தில ஆத்மா மனதுடன்கூடாது நிற்கும் நிலையாதலால் உலகினர் அவனை யுணர்ச்சியற்றுக் கிடக்கிறான என்பர்கள். ஆகவே மனம் ஆத்மாவுக்குப் பெருந்துணையாகவும், சிறந்த சாக்ஷியாகவு மிருக்குமென்பது வெளியாயிற்று. ஆதலா மனமறியாமல் பொய் யுரையேனும், மெய்யுரையேனும் சொல்வதற்கியலாது. இவ்வுண் மையை யறியாமல் ஒருவன் பிறரொருவரு மறியவில்லையென்று

பொய் சொல்வதற்குத் துணிவானேல், அப்பொழுது தனக்குப் பெருந்துணையாயிருக்கும் மனமானது, 'இவன் இங்ஙனங் கூறியதை நாமறிந்திருந்தும் அதனையறியாமல் பொய்யுரைக்கின்றனனே' என்று பொய்யின் பயனாகிய துன்பத்தை யனுபவிக்கச் செய்யும். வெகுளியால் அடாதகாரியஞ்செய்ய நேர்ந்தவிடத்துப் பின்னர்க் கழிவிரக்க முண்டாகி வருந்துதலை அவரவர் அநுபவத்தாலறியலாம்.

சத்தியகீர்த்தியாகிய அரிச்சந்திரன் வாய்மையையே சிறந்த அறமாகக்கொண்டானாதலால் மதியிழந்து பாலனிழந்து மனையிழந்து துன்புற்ற விடத்திலும், மனத்திற்கேற்ப பொய்கூறாதொழுகினன்.' ஆதலால் இன்றளவும் இவனைக் கொண்டாடுகிறார்களென்ற இதிகாசத்தையும்,

"உள்ளத்தாற்பொய்யாதொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்"

என்றதனால் விளக்கினார். இதனால் வாய்மை மொழிந்தோன் புகழுடம்பே என்றும் நிலைபெற்று விளங்குமென்று இம்மைப் பயனுரைக்கு முகத்தான் வாய்மை மொழியதில் எல்லோருக்கும் முயற்சி யுண்டாகவேண்டுமென்று தெரிவித்தாராயிற்று.

பொய் கூறாது வாய்மை மொழிபவனை உலகத்தவர் நினைத்துக் கொண்டிருப்பதுபோல் அரிய தவம் புரிந்தோனாகிய பகிரதன் முதலானவர்களையும், சிறந்த கொடையாளியாகிய கர்ணன் முதலானவர்களையும் உலகத்தவர் நினைத்துக்கொண் டிருக்கிறார்களன்றோ! அங்ஙனமிருக்க வாய்மை மொழிபவனைமாத்திரம் எவ்வாறு சிறந்தவனாவானென்று ஐயம் நிகழும். அதனையகற்ற,

"மனத்தொடுவாய்மை மொழியிற்றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை"

என்றார். தவஞ் செய்தோரும், தானஞ் செய்தோரும் தனித்தனி வாய்மை மொழிந்தோனுக் கொப்பாகமாட்டாரென்பது ஒருபுறமிருக்க, தவம் தானமென்ற இரண்டறங்களை ஒருசேரச் செய்தவு

னும், இவனுக்கொப்பாகான். இவனே அவனிலும் சிறந்தவனாவான். வாய்மையில்லாதபோது எத்துணைச் சிறந்த அறங்களைச் செய்தாலும் அவை பயன்படமாட்டா, எல்லா வறங்களும் பயனுறும்படி செய்வது வாய்மையாதலால் இதுவே சிறந்ததாகும்.

மேலும், இராமபிரானைத் தேவர்கள் நோக்கி, 'நீயே திருமாலாகிய இறைவன்; இங்ஙனம் அவதரித்து எங்கள் காரியத்தைச் செய்தருளினை' என்று தோத்திரஞ் செய்தார்கள். அப்பொழுது இராமபிரான் தேவர்களை நோக்கி 'யான் தசரதனுகிய ஓரரசகுமாரன்; என்னை நீங்கள் இங்ஙனம் புகழ்ந்துரைக்க வேண்டாம்' என்றுரைத்தான். இங்கு இராமபிரான் தானே தன்னை ஓர் மானிடனுக ஒப்புக்கொண்டிருக்க, சடாயுவுக்கு இந்த இராமபிரான் எவ்வாறு வீடுபேற்றைக் கொடுக்கக்கூடும்? என்று வாதிப்பார்கள். இதற்கு, "ஸத்யேந லோகாந் ஜயதி" (சத்தியத்தால் எல்லா லோகங்களையும் வெற்றி கொள்கிறான்) என்பது அறவுரை யாதலால், மானுடனுயிருந்தும் சத்தியத்தினுல் வீடுபேற்றைக் கொடுக்கலாம். அம்முறைபற்றி இராமபிரான் சடாயுவுக்கு வீடுபேற்றை யளித்தனன் என்று ஆன்றோர்கள் சாமாதானங் கூறியுள்ளார்கள். இதனுல் வாய்மை யொன்றே எல்லா அறப் பலன்களையுந் தரவல்லதென்பது பெறப்படும். இதனை,

> " பொய்யாமையன்னபுகழில்லையெய்யாமை
> எல்லாவறமுந்தரும் "

என்று சுட்டினர், ஒருவனுக்கு இம்மைக்கு வாய்மையொத்த புகழ்க் காரணமில்லை. மறுமைக்குச் சரீரம் வருந்தாமல் அவனுக்கு எல்லா வறங்களையும் தானே கொடுக்குமானுல் நூல்களில் விதிக்கப்பட்ட வனைய அறங்களைச் செய்யவேண்டிய தில்லையோவெனின்; உரைக்கின்றார்,

> " பொய்யாமை பொய்யாமை யாற்றினறம் பிற
> செய்யாமை செய்யாமை நன்று "

என்று. வாய்மையை இடைவிடாமல் உறுதியாகச் செய்வனேல் அவன் பிறவறங்களைச் செய்யாதிருப்பது நலமாம். இங்குப் பிறவறங்

களைச் செய்யாதிருப்பது நன்று என்ற குறிப்பால் பிறவறங்கள் செய்வதருமை யென்பதும், சில தவறினல் பெருங் குற்றமுண்டா மென்பதும் விளங்கும். சிலர் வேள்வி செய்யத்தொடங்கி, அதில் மந்திரலோப முதலிய வற்ருல் பிரம இராக்கதர்களாய் வந்து பிறந் தார்களென்ற விவரம் இதிகாசங்களிற் கேட்கப்படுகிறது. வாய்மை ஆற்றுவதில் இக்குறைகளொன்றுமில்லை. மேலும் மெய்வருத்த மின்றிச் செய்யத்தக்கதாயு மிருக்கிற இவ்வாய்மை யொன்றே எல்லா அறப் பலன்களையும் தாவல்லதாயிருப்பதால் இஃதொன்று செய்ய வமையும் என்பார் அறம் பிற செய்யாமை நன்று என்ருர்.

இன்னும் வாய்மை ஒன்றைச் செய்யவேசாலும் என்பதை உவமை காட்டி நிறுவுகிருர்,

> " புறத்தூய்மைநீரானமையுமகந்தூய்மை
> வாய்மையாற்காணப்படும் "

என்று. உடம்பிலுண்டாகிய அழுக் ககல்வது நீரிலுண்டாம். அதுபோல மனத்தின் கண்ணுள்ள மாசகல்வது வாய்மையாலுண் டாம். இந்த மன மாசறுதலே சிறந்த அறமாமென்பதை 'அறன்வலி யுறுத்தல்' என்ற அதிகாரத்தில் "மனத்துக்கண் மாசிலனுதலனைத் தறன், ஆகுலநீரபிற" என்றதனுலும் உரைத்துள்ளார். ஆதலால் சான்ருேர்க்குப் புறவிருளைப் போக்குவதாகிய ஏனைய விளக்குகளைக் காட்டிலும் அகவிருளைப் போக்குகிற வாய்மையென்ற விளக்கே சிறந்ததாகுமென்பதை,

> " எல்லாவிளக்கும்விளக்கல்லசான்ருேர்க்குப்
> பொய்யாவிளக்கேவிளக்கு "

என்றதனுல் தெரிவித்தார். இந்த குறள் தொடங்கி அவரோகண முறையாக ஆராய்ந்தால், வாய்மையை யாவரும் கையாளவேண்டு மென்ற பொருட் சிறப்புக் கிடைக்கிறது.—பொய்யாமை என்ற விளக்கே மன மாசறுதற்குக் காரணமாம். ஆதலால் இஃதொன்றைச் செய்யவே அமையும். ஏனென்ருல் இதுவே எல்லா அறப்பலன்களை யுஞ் செய்யவல்லதாதலால் இத்தகைய வாய்மையுடையான் தவத்

தோடு தானஞ்செய்வாரைக் காட்டிலும் சிறந்தவனுவான். இவனையே உலகத்தார் என்றும் மறவாதிருப்பார். இத்துணைச் சிறப்புடைய வாய்மையை யாவரும் கையாளவேண்டும். கையாளாது பொய்த்து விடுவரேல், அவரது நெஞ்சே வருத்தும். எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சிறப்பித்துக் கூறுவது கவிமரபாதலால் அம்முறை பற்றி இங்கு வாய்மை என்ற அதிகாரத்தில் இதனைத் திருவள்ளுவர் சிறப்பித்துக் கூறினுரேயன்றி வேறில்லை என்று கருதக்கூடும். வாய்மை என்பது சிறந்த அறமாதலால் இவ்வதிகாரத்திற் கூறிய வுரையினைத் தம் புனைந்துரையன்று; உண்மையுரைகளாம் என்று ஆணை யிட்டுச் சொல்லுகிறுர்.

"யாமெய்யாக்கண்டவற்றுளில்லையெனைத்தொன்றும்
வாய்மையினல்ல பிற" என்று

யாம் மெய்ந்நூல்களாகக் கண்டநூல்களுள் யாதொரு தன்மையாலும் வாய்மையைக்காட்டிலும் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்க ளில்லை. இங்கு மெய்யுணர்த்துவனவாகிய நூல்களை மெய்யென்றுர். தாமுள்ளவாறுணரவும் உணர்ந்ததைப் பிறருக்குணர்த்தவும் வல்லரா யிருப்பாரால் செய்யப்பட்ட நூல்களே உண்மைநூல்களாம். இவ் வுண்மை நூலுரைப்பவர்கள் இறைவனருளால் பயக்கம், ஆசை, வெறுப்பு என்ற குணங்களற்றவர்களாயிருப்பர். மயக்கவுணர்வற்றுற் றுன் பொருள்களையுள்ளவாறுணரக்கூடும். இங்ஙனமுணர்ந்ததை அப் படியே பிறருக்குணர்த்தவேண்டுமானுல் விருப்பு வெறுப்பென்ற குணங்களில்லாதிருத்தல் வேண்டும். இந்தக்கெட்ட குணங்களற்றவர் களே உலகப்பற்றற்றவர்களாயிருப்பர். இவர்களே உறுதிப்பொருள் களை உள்ளவாறுணர்த்துதற் குரியவராவரென்பதை நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தாலறியலாம். ஆகவே தத்துவதரிசிகளியற் றிய உண்மை நூல் பலவற்றையும் ஆராய்ந்து பார்த்தவிடத்தும் வாய் மையே சிறந்த அறமாகுமென்பது முடிந்ததொன்றுதலால் இதனைக் கையாள வேண்டியது அறிவுடையாரின் கடமையாகும். இதுவே இக் கட்டுரையிற் குறிப்பிடும் முக்கியப் பொருளாம்.

ஸ்ரீ:

கேள்விச்செல்வம்.

உலகத்தில் பொன், வெள்ளி, முத்து, இரத்தினம் முதலியவை களே செல்வங்களாகுமென்று மதித்து எல்லோரும் கொண்டாடுகின்றனர். கற்றறிந்தமேலோர் இந்தச் செல்வங்களோடு கல்வி கேள்விகளையுமுடனெண்ணிச் செல்வங்கள் என்பர். எல்லோருங் கண்ட பொன் வெள்ளி முதலிய செல்வங்கள் உருவுடைப் பொருளாயிருப்பன. கற்றறிந்தார்கண்ட கல்வி, கேள்விச்செல்வங்கள் உருவப் பொருளாயிருப்பதில்லை. ஆதலால் இவை செல்வமென்று வழங்குமா றெங்ஙனம் என்று ஐயமுண்டாகலாம். கண்ணுக்குப் புலனாகின்ற உருவுடைப்பொருள்களே செல்வங்களாகும்; கண்ணுக்குப் புலனாகாத அருவப்பொருள்கள் செல்வமாகாவென்பதில்லை. உபகாரமாயிருப்பதோடு மகிழ்ச்சியை விளைப்பதெதுவோ, அது செல்வமாம் என்று செல்வத்திற்கு இலக்கணமமைத்துக் கொள்ளல்வேண்டும். இங்ஙனங்கொண்டால் கல்வி கேள்விகளையும் செல்வமென்று வழங்குவதற்கு ஒருகுறையு மின்றன்றோ! எவ்வாறெனின்; பொன், வெள்ளி, முதலிய செல்வங்கள் உபகாரமாயும், மகிழ்ச்சியை விளைவிப்பதாயு மிருக்கின்றன. அங்ஙனமே கல்வி கேள்விகளு மிருக்கின்றன. ஆதலால் இந்தக் கல்வி கேள்விகளும் செல்வங்களாகுமென்பதற்கு ஒருதடையுமின்றெனக. இந்தப் பொருட்செல்வம் கல்விச் செல்வம் என்ற இருவகையான செல்வங்களில் ஒன்றுக்கொன்று உயர்வு இழிவுண்டா? இவ்விரண்டும் சமமான உரிமையுடையனவா? என்று ஆராயவேண்டும். இவ்விரண்டு செல்வங்களில் அழியா வியல்பிற்றெதுவோ அதுவே சிறந்ததாகும். செல்வப்பொருள் உருவுடையதாதலால் அழியுமியல்பிற்றென்பது கண்கூடு. கல்விப்பொருள் அருவப்பொருளாதலால் அழியமாட்டாதென்பது தெளிவு. இஃதல்லாமலும் செல்வப்பொருள் ஓரிடத்திற் புதைத்துவைத்துப் பரிபாலிக்க வேண்டும். இதனை நெஞ்சிலே புதைத்துவைத்தாளலாம். இன்னும் ஓரிடத்திற் புதைத்துவைத்த அப்பொருள் மற்றோரிடம் சென்று

அதை உபயோகிக்கவிரும்பினல் உதவமாட்டாது. இதனை நினைத்த நினைத்த விடத்தில் உபயோகிக்கலாம். அந்தப் பொருள் கள்வர் முதலானவர்களால் அபகரிக்கப்படும். இந்தச் செல்வத்தை அங்ஙனஞ் செய்யமுடியாது. அந்தச் செல்வமுடையவனைச் சமயம்பார்த்துக் கொன்று அதைப் பறித்துச்செல்வார்கள். இங்கிதியுடையார்க்கு அத்தகைய ஆபத்தொன்றுமில்லை. இவைகளெல்லாம் ஒருபுறமிருக்க, கல்விச் செல்வத்திற்கோர் இன்றியமையாத பெருமையுண்டு. அஃதாவது கொடுக்கக் கொடுக்கக் குறைவில்லாத் தன்மையாம். இவ்வளவு பெருமையெல்லாம் கல்விச் செல்வத்திற்குளதென்று கருதியே தெய்வப்புலமை திருவள்ளுவர் "கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்றையவை" என்றுரைத்தனர். இதனல் அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியேயென்பது பெறப்பட்டது.

கல்வியாவது—தெள்ளிய அறிவினையுடைய ஆசிரியன்பால் கற்கப்பட்ட அறிவுநூற்பொருள்கள் எப்பொழுதும் மனத்தில் ஊற்றிருக்கும்படி பயிறல். கேள்வியாவது—கேட்கப்படும் நூற்பொருளைக் கற்றறிந்தார் கூறக்கேட்டலாம். யாண்டும் பெரியார் இந்தக் கல்வி கேள்விகளை முறையே அங்கமாகவும், அங்கியாகவும் கொண்டுள்ளார்கள். அங்கமாவது—சாதனம், அங்கம், சாதனம், காரணம், உபகாரம் என்பன ஒரு பொருட் சொற்கள், அங்கி—அங்கத்தையுடையது. எழுத்திலக்கணம் சொல்லிலக்கணத்தை யறிவதற்குச் சாதனமாயிருக்கும். ஆதலால் எழுத்திலக்கணம் அங்கம். சொல்லிலக்கணம் அங்கி. அதுபோல கேள்வியறிவைப் பெறுவதற்கு நூலறிவு உபகாரமாயிருக்கும். கல்வி கேள்விகள் முறையே அங்காங்கிகளாமென்பதை வலியுறுத்துவதற்காகவே தெய்வப்புலவரும் 'கல்வி', 'கல்லாமை' என்ற அதிகாரங்களின் பின் 'கேள்வி' என்ற அதிகாரத்தை வைத்தனர். "கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே" என்று கம்பரும் உரைத்துள்ளார். இங்கு இராமபாணம் இலக்குப்பொருளை ஊடுருவிச்சென்ற வளவில் தங்கி நின்றுவிடாமற் சென்றது என்பதற்கு இந்த உவமையைக்குறிப்பிட்டார். கற்றுணர்ந்தார் கல்வியறிவில்லாத மூடர்க்குரைக்கப்பட்ட கல்விப்பொருளானது அவர்கள் நெஞ்சிற்றங்காது போவதுபோல என்பது இவ்வுவமையின்

பொருளாம். இதனால் அறிஞர் கூறும் கல்விப்பொருளைக் கற்றறிந்த ஒருவனே கேட்பதற்குரியவனாவானென்பதும், அதனால் கேள்வியறிவுக்குக் கல்வியறிவு அங்கமாகுமென்பதுந் தெளிவாயின. இஃதன்றிக் கேள்வி யறிவு பருப்பொருளாகிய கல்வி யறிவை யுண்டுபண்ணுவதால், அப்பருப்பொருளறிவிற்குக் கேள்வி அங்கமாயுமிருக்கும்.

இனி, கல்வி கேள்வி என்ற இரண்டும் ஒத்த சிறப்பினையுடையனவா? இவ்விரண்டில் ஒன்றே சிறந்ததா? என்பன ஆராயப்படும்:-

"கல்வி" என்ற அதிகாரத்தில் கல்வியானது அழியாத சிறந்த செல்வமாகுமென்பதை "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்று குறிப்பிட்டார். இத்தகைய கல்வியையும், கேள்வியையும் சீர்தூக்கிப் பார்ப்போமாகில் கேள்வியே சிறந்ததென்பது விளங்கும். உலகத்தில் ஐயந்திரிபறத்தெளிந்த நூலறிவும், பிறர்க்கெடுத்துரைக்கும் போற்றலும் எவர்க்குண்டாயிருக்குமோ, அவரே சிறந்த பண்டிதரென்று கொண்டாடப்படுவர். இச்சிறப்பெல்லாம் கேள்வியறிவாலுண்டாக வேண்டும். கற்றறிந்தானொருவன் நுண்ணறிவுடையார் வாயிலாகக் கேட்கக் கேட்க, ஐயந்திரிபுகளாகிய மயக்க உணர்வகலும். இஃதகலவே பிறர்வியக்க எடுத்துரைக்கும் பிரசங்கவாற்றலுமுண்டாகும். இவ்விருதிறவாற்றலும் கேள்வியினாலுண்டாகின்றமையால் கேள்வி கல்வியைக்காட்டிலும் எத்துணையோ சிறந்தது என்று துணிந்து சொல்லலாம்.

நிற்க, கபிலருடைய புலமையின் சீர்மையுரைக்க வந்தவிடத்தில், "வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்" என்று சொல்லப்பட்டுளது. இங்கு மிக்க சிறந்த கேள்வியறிவால் விளங்குகின்ற கபிலர் என்றதனால் கபிலருடைய புகழிற்கும் கேள்வியறிவே காரணமாகவிருந்ததென்பது புலனாகிறது. இன்னும் தசரதன் மந்திரிகளின் அறிவின் பெருமையை யுரைக்க வந்தவிடத்தில் "பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினர்" என்றும, சடாயுவின் பெருமை குறிப்பிடுகிறவிடத்தில் "தூய்மையன் இருங்கலை துணிந்த கேள்வியன்" என்றும், அறவணவடிகளின இயல்புரைக்க வந்தவிடத்தில், "மறவணநீத்த மாசறு கேள்வி, அறவணவடிகள்" என்றும் உரைக்கப்பட்டுள்

என. இங்ஙனமே பல புலவர்களும் கேள்வியறிவினால் விசேடிக்கப்படு கின்றனர். இக்கருத்தையெல்லா முட்கொண்டே தெய்வப் புலவரும்,

"செல்வத்துட்செல்வமசெவிச்செல்வமச்செல்வம்
செல்வத்துளெல்லாந்தலை,".

என்றுரைத்தனர். இதற்குப் பரிமேலழகர் கூறியவுரை வருமாறு.— "செல்வத்துட்செல்வம் செவிச்செல்வம்—ஒருவற்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான் வரும் செல்வம். அச்செல்வம் செல்வத்துள் எல்லாந்தலை—அச்செல்வம் பிறசெல்வங்கள் எல்லாவற்றிலும் தலையா தலால், எ—று.

செவியான் வருஞ்செல்வம் கேள்வியால் எல்லாமறிதல். பிறசெல் வங்கள் பொருளான் வருவன. அவை நிலையாவாகலானும், துன்ப விளைவினவாகலானும் இது தலையாயிற்று. அவற்றையொழித்து இத னைச் செய்கவென்பது குறிப்பெச்சம்."

இந்தக் குறளையும் உரையையும் ஆராய்ந்தால் கேள்விச்செல்வமே நிலைபேறுடையதென்பதும், அதனால் அது சிறந்ததென்பதும், அதனை யாவரும் முயன்று பெறவேண்டுமென்பதும் வெளியாகின்றன.

கேள்விச்செல்வம் சிறந்ததாயினும் அதனை அறிவொழுக்கமுடை யவனிடத்திலே பெறவேண்டும். அறிவு ஒன்றுமாத்திரமே யுடையவ னிடத்திற் கேட்பதால் முன் குறிப்பிடப்பெற்ற தெளிவுணர்ச்சியும், எடுத்துரைக்குமாற்றலும உண்டானலும் அவர் வாய்ச்சொல் மறு மைப் பயனை விளைவிக்கமாட்டாது. ஏனெனில், ஒழுக்கமிலார் அறி வுடையராயினும் அறிவிலரேயாவர். இவர்கள் நூலிற்கூறிய பொருளை உண்மையென நம்பி அதன்படி ஒழுகாதொழிகின்றாராதலால் ஆஸ் திக நாஸ்திகராவர். அதனால் இவர்கள் வாய்ச்சொல் மறுமைப் பயனை விளைவிக்கமாட்டாதென்பது ஒருதலை. இதுபற்றியே தெய்வப்புலவ ரும், "இழுக்கலுடையுழியூற்றுக் கோலற்றே, ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் என்றார். இங்கு வழுக்குதலையுடைய சேற்று நிலத்தில் இயங்குவார்க்கு ஊன்றுகோல் துணையாயிருப்பதுபோல ஒழுக்க முடையார் வாய்ச்சொல் மனத்தளர்ச்சி வந்தவிடத்து, அதனை பகற்று

தற்கு உறுதுணையாயிருக்குமென்று குறிப்பிட்டதனால் ஒழுக்கமிலார் 'வாய்ச்சொல் துணைசெய்யாதென்பது வெளிப்படையன்றோ! மேலும், ஊற்றுக்கோலற்றே' என்ற உவமையால் தடுமாறலுற்ற பிறவிப் பிணியை ஒழித்தற்கும் ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் பெரிதும் துணையாயிருக்குமென்ற பொருளும் கொள்ளலாம். இதனால் இவர்கள் வாய்ச்சொல் மறுமைப் பயனையும், விளைவிக்குமென்பது தேற்றம்.

கேள்விச்செல்வம் மிகச் சிறந்ததென்றும், அதனைப் பெறுதற்கு அதிகாரியாயிருப்பவன் கற்றறிந்தானென்றும் உரைத்துவிட்டால் அந்தோ! கல்வியறிவில்லாதார் கதிதான் என்னே? இவர்கள் அச் செல்வத்தை இழந்துபோகவேண்டியதுதானோ? அல்லது ஏதேனும் ஒருவகையில் பெறுதற்கு வழியுண்டோ? என்று ஆராயவேண்டியது கடமையாகும். நல்ல பொருளை எல்லோருமநுபவிக்கவேண்டுமென்ற விசாலமான நோக்கம் நூலிற்கும்,நூலறிபுலவர்க்கு மிருக்குமேயன்றி, ஒருசிலரேயதனை யனுபவிக்கவேண்டுமென்ற குறுகிய கருத்திருப்ப தில்லை. ஆதலால் கல்வியறிவிலாதவரும் அக்கேள்விச்செல்வத்தைப் பெற்று ஒருவகைப் பயனை யடையலாமென்று வழிகாட்டியிருக்கின்றனர். அதுவருமாறு:—

" கற்றிலனாயினுங் கேட்கவஃதொருவற்கு
ஒற்கத்தி னூற்றாந் துணை "

என்ற இதனால் கல்லாதவர்களும் கற்றறிந்தாரிடத்திற் கேட்டால், அக்கேள்வி அவர்க்கு இடுக்கண்வந்து அதனால் தளர்ச்சியுண்டான போது துணையாயிருக்கும் என்று குறிப்பிட்டார். இதனால் கேள்வியால் கல்லாதவர்க்கும் ஓர் பிரயோஜனம் கூறியவாறு காண்க. கற்றுணர்ந்தவர் கேள்விச்செல்வத்தால் பல நன்மைகளை யடைவர். கல்லாதவர் பல நன்மைகளையடையா தொழிந்தாலும் முன் குறிப்பிடப் பெற்ற நன்மையையடையக் குறையில்லை. எல்லோர்க்கும் நன்மையைப்பயக்கின்ற கேள்விச்செல்வத்தை யாவரும் விரும்பியடைய வேண்டியது இன்றியமையாததாகும்.

இந்தச் செவிச்செல்வத்தை ஒருவன் வாழ்நாளில் அடையா திருப்பனேல், அவன் வாழ்ந்திருந்ததினாலும் ஒரு பயனுமில்லை; இறந்துவிட்டதனாலும் ஒரு கஷ்டமுமில்லை என்று வெறுத்துக் கூறு வார். "செவியிற் சுவையுணரா வாயுணர் வின்மாக்கள், அவியினும் வாழினுமென்" என்றார்.

ஆறறிவுபடைத்த மக்கள் மாக்களாய்ப் பெரியார் வெறுப்பிற்கு விஷயமாகாமல் செவிச்செல்வத்தைப் பெற்று இன்புறுவாராக.

ஸ்ரீ:

"அண்டகோள மெய்ப்பொருள்"

விஷய சோதனம்.

சேதுஸம்ஸ்தான மஹாவித்வானும், பாஷாகவிசேகரரும், அண்ணாமலைச் சருவகலாசாலைத் தமிழாராய்ச்சி யாளருமாகிய ஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்கார் ஸ்வாமி, சென்னைத் திருவல்லிக்கேணி "ஸ்ரீ வேதவேதாந்த வர்த்தனீ மஹாஸபை"யில் பிரஸங்கித்து வெளியிட்ட "அண்டகோள மெய்ப்பொருள்" என்ற நூலைப் பார்த்தேன். அதில், நெடுங்காலம் சிந்தித்து இந்த மெய்ப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பெற்றுளது. இங்ஙனம் நெடுங் காலம் ஆய்ந்தெழுதியதில் மெய்ப்பொருளாக உணர்ந்துகொள்ளத்தக்க குறிப்பொன்றுமில்லையே என்பதுபற்றி இப்பரிசோதனம் எழுதப் படுகிறது.

"சங்கக் குவடிறக் குத்திய மாறப்பேயர்க் கொலையானை" என்று ஆழ்வார் சங்கத்தார்களை வெற்றிகொண்டதைக் கம்பர் பொதுவாக வுரைத்துள்ளார். "அண்டகோளத்தாரென்னு மாரியத்தமிழாலன்று, தண்டமிழ்ச்சங்கம் வென்ற சடகோபர்" என்று கூடற்புராணமுடையார் "அண்டகோளத்தாரணு" என்ற பாசுரத்தால் ஆழ்வார் சங்கத்தார்களை வென்றார் என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். இவை அண்டகோள மெய்ப்பொருளுடையார்க்கும் உடன்பாடே. ஆதலால் இந்த "அண்டகோளத்தாரணு" என்ற பாசுரம் 'கல்விவென்றி' என்ற துறைப் பாட்டென்பது புலனாகிறது. இருவர் தம்முண் மாறுபட்டு வழக்காடிய அவ்வழக்கில் ஒருவன் வெற்றிகொண்டான் என்றால் வழக்கின்னதென்பதும், வெற்றிகொண்ட முறையின்னதென்பதும் தெரிவிக்க வேண்டும். அப்பெற்றிபோல ஈண்டுச் சங்கத்தார்களை ஆழ்வார் வென்றாரென்றால், சங்கத்தார்கட்கும் ஆழ்வாருக்கும் நிகழ்ந்த விவாதம் இன்னதென்பதும், அதனை இந்த நியாயவழியில் வெற்றிகொண்டாரென்பதும், அதனால் இஃதின்னதிணைக்குடைய

தென்பதும் தெரிவிப்பது மெய்ப்பொருளாகும். இந்த மெய்ப்பொருளுரையில் இவை யொன்றும் குறிப்பிடவில்லை. இஃதல்லாமலும் முன் பின் விஷய முரண்களும், பொருண்முடிவின் றொடர்பின்மையும், ஈண்டைக்கு வேண்டா மேற்கோள்களும் இதில் நிரம்பியுள்ளன. இவை ஈண்டு விளக்கப்படுகின்றன.—

6-வது பக்கத்தில், " அண்டகோளத்து ஆரணு ஆகி என்பது அண்டகோளத்தினுடைய அரிய அணுவளர்ந்து என்றவாறு. .... அண்டகோளத்து ஆரணு — அண்டகோளமாகிய பிரபஞ்சத்தின் இறுதி அம்சமாகிய பரமாணு. அஃதாகி என்றது அஃதண்டகோளமாக வளர்ந்து என்றவாறு." என்று குறிப்பிடப்பட்டுளது.

ஈண்டு, 'அண்டகோளத்தாரணு' என்ற தொடர்மொழியின் பதவுரையையும், விசேடவுரையையும் ஆராய்ந்தவிடத்து ஆகி என்ற எச்சத்திற்கு வினை முதல் பரமாணு என்று குறிப்பிட்டிருப்பதால் அண்டகோளமாகிய பிரபஞ்சத்திற்கு உபாதான காரணம் பரமாணு என்பது பெறப்பட்டது. பரமாணுவைத் திரவியமாகவும், அது பிரபஞ்சத்திற்குபாதான காரணமாகவும் ஈச்வரனை நிமித்த காரணமாகவும் கொள்பவர் நியாயசமயவாதியன்றோ! அவாறு கொள்கையைப் பரமவைதிக ஸித்தாந்த ப்ரவர்த்தகராகிய ஆழ்வார் அருளிச்செய்த பாசுரத்திற்குப் பொருளாகக்கொள்வது எங்ஙனம் பொருந்தும்?

மேலும், " சிலர் பரமாணுவைக் காரணமென்றார்கள். பரமாணுவில் பிரமாணமில்லாமையாலும் ஸ்ருதி விரோதத்தாலும் அது சேராது" என்று லோகதேசிகன் அருளியதும், இதற்கு மணவாள மாமுனிகள், "அவிரோதப்ரதிபாதகமான த்விதீயாத்யாயத்திற்படியே ப்ரஹ்ம காரணத்வ விரோதியான பரமாணு காரண வாதியரை நிராகரிக்கிறார் 'சிலர் பரமாணுவைக் காரணமென்றார்கள்' என்று தொடங்கி" என்று அவதாரிகை அருளியதையும் நோக்கினல் பரமாணு காரணவாதியர் கொள்கை பரமவைதிக ஸித்தாந்தத்திற்கு விரோதமென்பது தெளிவு. இங்ஙனமிருக்க, இதனைப் பாசுரத்தின் பொருட்டொடக்கத்தில் எடுத்துக்கொண்டது யாது நயம்பற்றி? வக்தாவின் ஹ்ருதயத்திற்குப் பொருத்தமென்பதுபற்றியா? அல்லது

வேறு காரணம்பற்றியா? தொடக்கத்திலுரைக்கும் பொருள் வக்த்ரு தாத்பர்யத்திற்கு இயைந்ததாயிருக்குமேல், அது பாதமற்றதாயிருக்கும். அஃதில்லாதிருக்குமேல் பின்னுரைக்கும் பொருள்களெல்லாம் ஆக்ஷேபிக்கத்தக்கனவாமென்பது ஒருகலை.

6-வது பக்கம் 27-ம் வரி தொடங்கி, "பிரபஞ்சத்தின் இறுதி நிலை (இதுவே படைப்பிற்கு முன்னிலையுமாகும்) பரமாணுவே என்பதை ஸ்ரீபாகவதம் ௩-ஆம் ஸ்கந்தம் (௧௧-௧) "பிரபஞ்சத்தின் இறுதியம்சம் பரமாணு என்றறியப்படுவது" என விளக்கியவாற்றான் உணர்க" என்று குறிப்பிடப்பட்டுளது.

ஸ்ரீபாகவதம் பத்தாவது அத்யாயத்தில் மஹதஹங்கார பூதேந்திரிய தேவமனுஷ்ய திரியக் ஸ்தாவர வர்க்கங்களின் ஸிருஷ்டிக்கிரமம் வெளியிடப்பட்டுளது. இந்தச் ஸிருஷ்டி முறையில் ப்ரக்ருதியின் தன்னியல்பாம் நிலையும், அதன் விக்ருதிநிலையும் தெளிவாக எடுத்துரைத்திருப்பதால் உலகிற்குபாதனம் ப்ராக்ருதியாகக் கூடுமோ என்ற ஐயம் நிகழக்கூடுமென்றே அதை யகற்றுதற்கு இந்த அத்யாயத் திறுதியில் ஸர்வேஶ்வரன் தன் அமோகஸங்கல்பத்தால் தானே ஜகத்தாகிறான் என்ற ஶ்ருதிச்சாயையைப்பற்றி, "ஸ்ருஜத்யமோக ஸங்கல்ப ஆத்மைவாத்மாநமாத்மநா" என்றுரைக்கப்பட்டது. இதனால் உலகிற்குபாதான காரணமும் தானே என்பது வலியுறுத்தலாயிற்று.

மேலும் ஸர்வேஶ்வரன் காலசரீரனாயிருந்து ஸிருஷ்டிக்கிறானாதலால் காலவிசேஷங்களை மைத்திரேயர் விதுரருக்குக் கூறுவான் றொடங்கிப் பதினோராம் அத்யாயம் * முதல் ஶ்லோகத்தில் காலபரமாணுவின் இலக்கண முரைக்கிறார். இந்த அத்யாய முற்றிலும் காலத்தின் இலக்கண முரைக்கின்றாரென்பதை ஸ்ரீதரரும் "[illegible]" என்றுரைத்திருக்கின்றார். சரமாவயவமுடையதும், அநேகமாயிருப்பதும், கார்யாவஸ்தையும் ஸமுதாயா

* "சரம: ஸத்விஶேஷாணாமநேகோऽஸம்யுத: ஸதா ।
பரமாணு: ஸ விஜ்ஞேயோ ந்ருணாமைக்யப்ரமோ யத: ॥

வஸ்தையுமில்லாதது மெதுவோ அது காலபரமாணுவென்றே இந்த அத்யாயத்தின் முதல் ஶ்லோகத்தின் தாத்பர்யமாகும்.

அங்ஙனமிருக்க, பிரபஞ்ச பரமாணு படைப்பிற்கு முன்னிலையா யிருக்கும் பெற்றியதென்ற பொருளை இந்த முதல் (கக-க) ஶ்லோகம் உணர்த்துகிறதென்பது எவ்வாறு பொருந்தும்? பத்தாம் அத்யாயத் திறுதியில் உலகிற்குக் கர்த்தாவும் காரணமும் இறைவன்ருனேயா னென்ருனென் றுணர்த்திய பொருளோடு, பிரபஞ்சோத்பத்திக்குப் பரமாணு காரணமென்பது பெரிது முரண்பாடன்றே! பரமவைதிக ஸித்தாந்தத்தில் பரமாணுவிற்கு ஜகத்காரணத்வ முரைக்கின்றபுடை எங்கேனும் கண்டதுண்டோ?

7-வது பக்கம் 4-வது வரி தொடங்கி, "ஷை ௩-ம் ஸ்கந்தம் கக-ஆம் அத்யாய முடிவில், "ஐம்பது யோஜனை அகலமுள்ளதும் மேன்மேலும் பதின்மடங்கு அதிகமுள்ள விசேஷண முதலியவற்ருல் வெளியிற் சூழ்ந்ததுமாகிய இவ்வண்டகோசமும் இன்னும் மற்று முள்ள பல்கோடி யண்டங்களும் எந்த வஸ்துவினிடம் பிரவேசித்துப் பரமாணுவாகக் காணப்படுகின்றனவோ அந்த வஸ்துவை காரணங் கட்கெல்லாம் காரணமெனவும், புருஷனும் மஹாத்மாவுமாகிய விஷ்ணுவின் ஸ்வரூபமெனவும், அக்ஷரமாகிய பரப்பிரமம் எனவுங் கூறுகின்றனர்" என வருதலான் இதனுண்மை நன்கறியப்படும். பலகோடி அண்டகோள வரிசைகளும் பரதெய்வத்தினிடம் பரமாணு வாக ஒடுங்கிக்கிடந்து பின் அவன் ஸங்கல்பத்தாற் பரிணமித்து அவ்வண்டவரிசை யாதலையே இங்குக் குறித்தாரென்பது ஜகத்காரண மாகப் பரப்பிரமத்தைக் கூறுதல்கொண்டு எளிதிலறியப்படும்" என்று குறிப்பிடப்பட்டுளது.

இங்கு, "பல்கோடி யண்டங்களும் எந்த வஸ்துவிடம் பிரவே சித்துப் பரமாணுவாகக் காணப்படுகின்றனவோ என்று எடுத்துக் காட்டிய பிரமாணத்தால் பிரபஞ்சத்தினுடைய சத்தையும் ஈசுவரா தீனம் என்று ஈசுவரனது காரணத்வம் வலியுறுத்தலாயிற்று. இங்ஙனம் வலியுறுத்திய இந்தப் பிரமாணம படைப்பிற்கு முன்னிலை யாயிருப்பது பரமாணுவே என்று முன்னுரைத்த பொருளோடு

முரண்படுமன்றே! முரண்படுகின்ற இந்தப் பிரமாணத்தை அநு கூலப் பிரமாணமாகக் காட்டியது யாண்டையது?

7-ம் பக்கம் 26-ம் வரியில் "ஆகிப் பூத்தமரம் என இயையும்" என்று குறிப்பிடப்பட்டுளது.

உரை கூறியவிடத்தில் ஆகி என்ற எச்சத்திற்குப் பரமாணுவை வினைமுதலாகக்கூறி, அந்வயமுரைக்கிறவிடத்தில் ஆகி என்ற எச்சத் திற்கு மரத்தை வினைமுதலாகக்கொண்டது எவ்வாறு இயையும்? ஆகி என்ற எச்சத்திற்கு மரம் வினைமுதலாகும்போது மரமாகிய பரம்பொருள் பரமாணுவாக வளர்ந்து என்று பொருளுரைக்க வேண் டும். விபுவாய் யாண்டும ஒருபடிப்பட்டிருப்பவனாகிய இறைவனுக்கு வளர்தலாகிய விகாரமுரைப்பது சங்கதமாகாதென்பதைப் பின்னர்க் குறிப்பிடுகின்ற தொடர்மொழிகளே விளக்குவனவாம்.

7-ம் பக்கம் 19-ம் வரி தொடங்கி "'ஆகி' என்று பரிணமித்தல் கூறுதலான் இவ்வாரணு உயிரணு ஆகாமை நன்கறியலாகும். பிரபஞ்சமாகிய பரமாணுவுக்குப் பரிணாமம் உள்ளதல்லது, அணு வாகிய ஆத்மாவுக்கு அஃதில்லாமை தெளிக" என்று குறிப்பிடப் பட்டுளது.

இங்ஙனங் குறிப்பிடப்பட்ட தொடர்மொழிகளால் ஜீவாத்மா விற்கு விகாரப்பாடில்லையென்பது தெளியலாகும். ஜீவாத்மாவிற்கே விகாரமில்லாதபோது பரமாத்மாவுக்கு விகாரமில்லை யென்பது சொல் லாமலே பெறப்படும். இங்ஙனம் ஸித்தித்த அர்த்தத்தை மறந்து 'மரமாகிய பரம்பொருள் பரமாணுவாக வளர்ந்து' என்று பரமாத்மா வுக்கு விகாரம் உணர்த்தியது பெரிதும் வியப்பே!

7-வது பக்கம் 27-வதுவரி தொடங்கி, "பிண்டம்பூத்த பேரெழி லொருமை என்பது சராசரரூபமான பிராணிகள் மலர்தற்குக் காரண மான பெருமையோடு கூடிய நலத்தையும் ஏகத்வத்தையுமுடைய எ-று. ஆகிப் பூத்தபேரெழில் ஒருமை மரம் என இயைக்க. பூத்த மரம் என்பது பூத்தற்குக் காரணமான மரமென்றவாறு; "தாழ்ந்த இயல்பின்மை" (திருக்குறள் 903) "சிறப்புகழ்ந்த யாக்கை" (பதிற்றுப்

பத்து 44-8) என்புழிப்போல. பிண்டம்—சராசரப் பிராணிகளின் தொகுதி. இவ்வாழ்வார் பரதெய்வத்தைத் தொன்மிகு பெருமரம் என்று விருக்ஷமாக உருவகப்படுத்துகின்றாராகலின், அதற்கியைய விருக்ஷ காரியத்தாற்பூத்த என்று ஏகதேசரூபக முகத்தாற் பிராணி ஸமுதாயத்தை மலர்களாக்கினர். ஸ்ரீ ஸஹஸ்ரநாமத்தில், "புஷ்ப ஹாஸ:" என்னுந் திருநாமத்திற்கு ஸ்ரீசங்கர பகவத்பாதர் "பூவரும்பு வது போலப் பிரபஞ்சரூபமாக மலர்பவன்" என்று பொருள் கூறினர். இதனால் பூத்தது பிரபஞ்சரூபமென்பது துணியலாகும்" என்று குறிப்பிடப்பட்டுளது.

இத்தத் தொடர்மொழிகளில், முன் பின்னுரைத்த பொருள் களுள் ஒன்றற்கொன்று முரண்பாடும், எடுத்துக்காட்டிய மேற்கோள் கட்கு இயல்பின்மையும், காணப்படுகின்றன.

பிண்டம்பூத்த மரம் என்பதற்குச் சராசரரூபமான பிராணிகள் மலர்தற்குக் காரணமான மரமென்று பொருள்கொண்டதனால் மலர்த லாகிய வினைக்குக் கர்த்தா பிராணிகளென்பதும், மரம் அதற்குத் துணைக்காரணமா யிருப்பதென்பதும் அறியலாகும்.

பின்னர் இங்ஙனம் பொருளுரைத்தற்கு விரோதமாக, "ஆகிப் பூத்த பேரெழில் மரமென இயக்க" என்று அந்வயம் காட்டப்பட் டுளது.

ஈண்டு அந்வயங் காட்டியதற்கேற்பப் பொருள்கொண்டால் பர மாணு ஸ்வரூபமாய்ச் சராசர வடிவினவாகிய பிராணிகளாக மலர்ந்த மரம் எனக்கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்ளாமல் அண்ட கோளத்தினுடைய அரிய அணுவளர்ந்து, சராசரரூபமான பிராணி கள் மலர்தற்குக் காரணமான மரமென்று பொருள்கொண்டதில், ஆகி என்ற செய்தென வாய்பாட்டு வினையெச்சம் தன் கர்த்தாவினை கொண்டு முடியாமல் பிழைபட்டிருப்பதறியலாம். மேலும், ஆகி என்ற எச்சத்திற்கு வினைமுதல் பரமாணுவாகவும், பூத்த என்ற பெயரெச்சத்திலுள்ள வினைக்கு வினைமுதல் பிராணிகளாகவும் கொண் டதை மறந்து ஆகிப்பூத்த பேரெழில் மரமென்று அந்வயங் காட்டி யிருப்பது வியக்கத்தக்கதே.

இனி, பூத்தமரம் என்ற தொடர்க்குப் பூத்தற்குக் காரணமான மரமென்று பொருள்கூறியது குற்றமாமென்பது ஆராயப்படும்.—

பெயரெச்சத் தொடர்மொழிகளில் பெயரெச்சத்திலுள்ள வினைக்கும், பெயரெச்சம் கொண்டுமுடியும் பெயர்க்குமுள்ள சம்பந்தத்தை யறிந்துகொண்டு பொருளுரைக்கவேண்டும். விளைந்த நிலம் என்பதில் விளைதல் என்ற கிரியைக்கு ஆசிரயமாயிருப்பது பைங்கூழ். நிலத்திற்கும் பைங்கூழிற்கும் ஆதாரஆதேயபாவ சம்பந்தமுண்டு. நிலமாகிய ஆதாரமில்லாதபோது பைங்கூழ் விளையாது. ஆதலால் இத் தொடர்க்கு விளைதற்குக் காரணமான நிலமெனப் பொருள்கொள்ள வேண்டும். சென்ற மனிதன் என்பதில் சென்ற என்ற பெயரெச்சத்திலுள்ள வினை, அவ்வினையையுடைய மனிதனிடத்தில் சமவாய சம்பந்தமாகவிருப்பதால், இத்தொடர் செல்லுதலையுடைய மனிதனென விரியும். அதுபோலப் பூத்தமரம் என்பதில் பூத்தலென்ற கிரியைக்கு ஆசிரயம் பூ. பூ மரத்தின் சினை. மரம் முதல். பூவாகிய அவயவம் மரமாகிய அவயவியில் சமவாய சம்பந்தமாகவிருப்பதால் இத்தொடர் பூத்தலையுடைய மரமென்றே விரியும். இவ்வாறு கொள்ளாமல் பூத்தற்குக் காரணமான மரமென்றால் பூ காரியம், மரம் காரணமெனல்வேண்டும். யாண்டும் பூவிற்கும் மரத்திற்கும் சினையும் முதலுமாயிருக்கும் சம்பந்தமுண்டேயன்றி, காரணகாரிய சம்பந்த மிலலை. மரம் கிளை பூ காய் கனி முதலியவையெல்லாம் வித்தின் காரியமே. ஆதலால் பூத்தற்குக் காரணமான மரமெனப் பொருள்கொள்வது சம்பவமாகுமா?

மேலும், பூத்தற்குக் காரணமான மரமென்று பெயரெச்சத்திற்குக் காரணப்பொருள் தானுரைத்ததை வலியுறுத்துவதற்காக, "தாழ்ந்த இயல்பின்மை" என்ற திருக்குறளை எடுத்துக்காட்டியதும் முரணேயாம். "இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்றும், நல்லாரு ணாணுத் தரும்" என்ற திருக்குறளில் தாழ்ந்த வியல்பின்மை என்ற பெயரெச்சத்தொடர்க்குப் பரிமேலழகர் "தாழ்தற்கு ஏதுவாய அச்சம்" என்று பொருளுரைத்தனர். ஈண்டுத் தாழ்ந்த என்ற எச்சத்திலுள்ள தாழ்தலாகிய ஒழுக்கத்திற்கும், எச்சங்கொண்டு முடியும் பெயராகிய அச்சமென்ற குணத்திற்கும் காரண

காரிய சம்பந்தமுண்டு. அச்சம் சாரணமாகத் தாழ்ந்த ஒழுக்கமுண்டாம். அதனுன் தாழ்தற்கு ஏதுவாய அச்சமென்று பொருள் கூறினுர். இங்கு இச்சமபந்தம்பற்றிப் பெயரெச்சத்திற்குக் காரணப் பொருளுரைததிருப்பதை ஆராயாமல், பொதுவாகப் பெயரெச்சத்திற்குக் காரணப்பொருளு முண்டென்று கருதிச் சந்தர்ப்பங்களை நோக்காது பொருள்கொள்வது அத்துணைச் சிறப்புடையதாகுமா?

ஈண்டு "இவ்வாழ்வார் பரதெய்வத்தைத் தொன்மிகுபெருமரம் என்று விருக்ஷமாக உருவகப்படுத்துகின்ருராதலின், அதற்கியைய விருக்ஷகாரியத்தாற்பூத்த என்று ஏகதேசரூபகமுகத்தாற் பிராணி ஸமுதாயததை மலர்களாக்கினர்" என்பதும் பொருந்தாக்கூற்றும் உருவகமாவது உவமேயப்பொருளை உவமப்பொருளாக மதித்து இரு பெயரொட்டாயுரைப்பதாம். இங்கு "வேரும் வித்துமின்றித்தானே, தன்னிலையறியாத் தொன்மிகுபெருமரம்" என்ற தொடரில் மரம் விசேடியமாயும், வேரும் வித்துமின்றித் தானே தன்னிலையறியாத் தொன்மிகு "என்ற தொடர் விசேடணமாயுமிருக்கும். வாசுதேவதரு முகமதி என்பனபோல இங்கு 'மரம்' என்ற சொல்லின்முன்னர் உவமேயச் சொற்றுந்துரைத்திருத்தல் வேண்டும். அஃதில்லாததினுல் "தொன்மிகு மரம்" என்பது உருவகமாகாது. இஃதுருவகமல்லாத போது இத்தொடரில ஏகதேசரூபகமென் றெடுத்துககாட்டுவதும பொருந்தாக்கூற்றுமென்பது சொல்லாமலே பெறப்படும.

இனி, மெய்ப்பொருளுரையுடையார் கொள்கைப்படித் தொன்மிகுபெருமரம என்பதை உருவகமாகக்கொண்டு அவருரைக்கும் ஏகதேச உருவகத்தை ஆராய்ந்தால் அதுவும் ஸித்திப்பதில்லை. ஏகதேச உருவகமாவது, ஓரிடத்தில் உருவகஞ்செய்த பொருளோடு சம்பந்த முடைய மற்றெரு பொருளை உருவகஞ்செய்யாது விடுதலாம். "உரனென்னுந் தோட்டியானேரைந்துங் காப்பான், வரனென்னும் வைப்புக்கோர் வித்து" என்பதில் அறிவைத்தோட்டியாக உருவகஞ்செய்து அத்தோட்டியால் வசப்படுத்தத்தக்க ஐந்து இந்திரியங்களை யானை என்று உருவகஞ்செய்யாமல் ஐந்து என்ற மாத்திரமிருப்பதால் இது ஏகதேசவுருவகமாயிற்று. அதுபோல இங்கு மரம் என்ற உருவகத்திற்கேற்பப் பிண்டம் என்ற சொன்மாத்திர மிருக்குமாகில் பிண்ட

மலர் என்பதில் மலர் என்ற சொல் தொக்கிருப்பதாகக்கொண்டு ஏக தேசவுருவகமாகக் கொள்ளலாம். அவ்வாறின்றிப் பிண்டம் பூத்த என்றிருப்பதால், பூத்த என்ற பெயரெச்சத்திலுள்ள பூத்தல் என்ற சிறப்புவினையால் மலரென்பது தானேகிடைக்கும். ஆதலால் இஃ தேகதேசவுருவகமாகாது. "இவ்வாழ்வார் பரதெய்வத்தைத் தொன் மிகு பெருமரமென்று உருவகஞ் செய்கின்றூராதலால் அதற்கியைய விருக்ஷகாரியத்தாற் பூத்தவென்று ஏகதேச ரூபகத்தாற் பிராணி ஸமு தாயத்தை மலர்களாக்கினர்" என்ற தொடர்மொழி உருவகத்தை யும் ஏகதேசவுருவகத்தையும் விளக்கிக்காட்ட எழுந்தது. இதில் உரு வகமும், ஏகதேச வுருவகமும் தோற்றுகின்றனவா? தொன்மிகு பெருமரமென்பது எவ்வாறு உருவகமாகும்? பூத்த என்ற பெய ரெச்சம் எ வ்வாறு ஏகதேசவுருவகமாகும்?

"ஸ்ரீ ஸஹஸ்ர நாமத்தில் "புஷ்பஹாஸ:" என்னும் திருநாமத் திற்கு ஸ்ரீ சங்கரபகவத்பாதர் "பூவரும்பு மலர்வதுபோலப் பிரபஞ்ச ரூபமாக மலர்பவன் என்று பொருள் கூறினர்" என்று எடுத்துக் காட்டிய மேற்கோள் நின்று பயனின்மையாயிருப்பதை நன்கறியலாம். பரமாணு வளர்த்தது, பிராணி மலர்த்தது என்று வளர்தற்கும் மலர் தற்கும் கர்த்தாவாயிருக்கும் தன்மை பரமாணுவிற்கும் பிராணிகட் கும் உண்டென்று கூறியதற்கேற்ப மேற்கோள்தந்துரைத்தால் முற் கூறிய பொருளை நிலைநாட்டியதாகும். "பூவரும்பு மலர்வதுபோல மலர்பவன்" என்பது உலகிற்குபாதானகாரணமும் இறைவனே என் பதை வலியுறுத்தும். இந்த மேற்கோளிற்கு முன்னுரைத்த பொரு ளோடு என்ன இயைபிருக்கிறது?

இனி, மெய்ப்பொருளுடையார் பேரெழில் ஒருமை என்ற விசேடணங்கட்கு நயவுரையாக மதித்துக்கூறிய பகுதி ஆராயப்படும்.

"பெருமை பரமாணுவை அண்டபிண்ட ரூபமான பிரபஞ்ச மாக்கிச் செயற்கரியசெய்யும் ஸங்கற்பவிசிஷ்டனுதற்றன்மை" என்று பெருமைக்குப் பொருள் விளக்கப்பட்டது. 8-வது பக்கம் 4-வது வரி யில் பிண்டம் என்பதற்குச் சராசர பிராணிகளின் தொகுதி என்று குறிப்பிட்டிருப்பதால் மெய்ப்பொருளுடையார் கொள்கைப்படி அண்டபிண்டம் என்பதற்கு அண்டமும் அண்டத்தில் வாழ்கின்ற

உயிர்த்தொகுதியுமெனப் பொருள்கொள்ளவேண்டும். அதன்மேல் அத்தொடர்மொழியை விரித்துரைக்கப்புக்கால், ஸர்வேசுவரன் பரமாணுவை அண்டமாகவும், சராசரரூபமான உயிர்த்தொகுதியாக வும் செய்கிறான் என்ற பொருள் கிடைக்கிறது. இப்பொருளிற் கேற்பக் குயவன் மண்ணைச் சட்டி பானையாகவும உயிராகவும் செய் கிறானென்ற இவ்வுதாரண வாய்பாட்டை எடுத்துரைத்தால் எவரும் மறுக்கமாட்டார்கள். குயவன் மண்ணைச் சட்டி பானையாக்கினாலும் உயிராக்கவொண்ணாது. அதுபோலப் பரமாணுகாரணவாதியர் கொள் கைப்படி இறைவன் பரமாணுவை அண்டமாக்கினாலும், அதனை யுயிராக்குவதெப்படி ? உயிரல் பொருளிலிருந்து உயிர்ப்பொருள் தோன்றுமா ? மண் முதலிய நான்கு பூதங்களின் சேர்க்கையால் சைதன்யமென்றொரு தர்மம் பிறப்பதாக நாஸ்திகர் கூறினரேயன்றிப் பரமாணு உபாதானமாக உயிர் தோன்றுவதாக உரைத்தாரல்லர். இங்ஙனமிருக்க வைதிகஸமயத்தினர் இவ்வாறு எடுத்தியம்ப மாட் டார்களென்றுரைப்பதும் மிகையன்றோ ! இறைவன் பரமாணுவை உபாதானமாகக்கொண்டு உயிரை உண்டாக்குகிறானென்ற விஷயம் புதிதாகக் கேட்கப்படுகிறது.

பலபுடைகளிலும் ஆத்மாவுக்கு நித்தியத்துவ முரைத்திருப்பதை மெய்ப்பொருளுணர்வுடையாரும் நன்கறிவர். இங்ஙனமிருந்தும் இவ் வாறுரைத்ததை நோக்குங்கால், இறைவன் அளவற்ற ஆற்றலுடைய வன், அவன் ஆற்றலை விளக்குவான் கருதி அவன் பரமாணுவை அண்டங்களாவும், உயிர்த்தொகுதிகளாகவும் செய்கிறானென்றுரைத் தனர்போலும்.

பலபொருளுணர்த்தும் பொது ஆற்றலுடைய சொற்களைப் பிரகாணம் நோக்கிப் பொருள் விரித்துரைக்கவேண்டும். பெருமை என்ற தர்மமானது வியக்தியையும் ஆசிரயித்திருக்கலாம். குணத் தையும் ஆசிரயித்திருக்கலாம். ஈண்டுரைக்கும் பெருமை வியக்தியை ஆசிரயித்ததா? குணத்தை ஆசிரயித்ததா ? என்று ஐயம் நிகழ்ந்தால், அப்பொழுது அதிகரித்த விஷயத்தை நோக்கிப் பொருளுரைத்துத் தெளியவேண்டும். ஈண்டு அதிகரித்த விஷயமோ சிருஷ்டி. இதற் கேற்பப் பெருமைக்குப் பொருள் கொள்ளவேண்டும். இங்கு வியக்தி

யிற் பெருமை கொள்வது அத்தனைச் சிறப்புடையதன்று. குணத்
திற் பெருமை கொள்ளவேண்டும். இறைவன் குணங்களோ அனந்த
மாயிருக்கின்றன. எந்தக் குணத்திற்குக் கொள்வதெனின்; சண்டைக்
குசிதமெதுவோ அது பற்றிக்கொள்ளவேண்டும். ஸங்கல்பரூப குணத்
திற்குக்கொள்வது உசிதமில்லை. ஈண்டு அதிகரித்த விஷயம் சிருஷ்டி.
இறைவன் ஸங்கல்பமோ சிருஷ்டிக்கு மூந்தியதாதலால் இதனைக்
கொள்ளலாகாதென்க. இறைவன் உலகிற்குத் தானே உபாதானமா
யிருந்து ஜகத்தாய் விகஸிக்கும் சக்தி விசேஷத்தைப் பெருமைக்குப்
பொருளாகக்கொள்வது உசிதமாகும். இங்குச் சங்கல்பரூப ஞானத்
திற்கே பெருமை கொள்வது உசிதமென்று தோற்றினல், ஸச்சப்த
வாச்சியமாயுள்ள பொருளொன்றேயுளதென்று சொல்லும்படி எல்
லாப்பொருளும் இறைவன்றன்வயின் ஒடுங்கிக்கிடந்த காலத்தில்
"பஹுஸ்யாம்" என்கிற ஸங்கல்பவிசிஷ்டனுதற்றன்மையைப் பெரு
மையென்று சுட்டியதென்று பொருளுரைக்கவேண்டும். அவ்வாறன்றி
"பெருமை—பரமாணுவை அண்டபிண்ட ரூபமான பிரபஞ்சமாக்கிச்
செயற்கரிய செய்யும் ஸங்கல்ப விசிஷ்டனுதற்றன்மை" என்பது
பொருந்துமா? இந்தத் தொடர்மொழியில் ஸங்கல்பரூப ஞானத்தின்
ஸ்வரூபமுரைத்ததாகத் தோற்றுகிறதா?

"எழில் - ஞானசக்தியாதி எல்லா நலங்களும்" என்று பொருள்
கூறியது கூறியதுகூறலாம. முன்னர்ப் பெருமை என்பதற்குச்
சங்கல்பவடிவ குணத்தைப் பொருளாகக்கூறி, எழில் என்பதற்கு
ஞானசக்தியாதி எல்லா நலங்களும் என்று பொருள்கொண்டதனல்
போந்ததென்னை? பெருமை என்றதனுற் குணச்சிறப்பும், எழில்
என்றதனல் குணப்பொதுமையும் கூறியதனல் ஓரதிசயமும் தோற்ற
வில்லையே. தானே உபாதானமாயிருந்து ஜகத்தாய் விகஸிக்கும்
பெருமையுடையான் சேதனசேதனங்களோடு கலந்திருந்தும் அவற்
றிற்குள்ள சுகதுக்க விகாரங்கள் தனக்கில்லாதிருக்கும இயல்பை
எழில் என்பது சுட்டுகிறதென்றாலும் ஒருவாற்றான் பொருத்த
முடையதாகும்.

"ஒருமை—அவ்வண்டபிண்ட ரூபமான பிரபஞ்சத்தோடு கலந்
தொன்றாயுள்ள தன்மை" என்று ஒருமைக்குப் பொருளுரைக்கப்பட்
டுளது. இங்குக் கலக்கப்படும் பொருள்களோ இரண்டு. அவற்று
ளொன்று ஞானசூன்யமாய் விகாராஸ்பதமாயிருக்கும் அசித்து.
மற்றொன்று ஞானாநந்த வடிவாயிருக்கும் சித்து. இந்த இரண்டு

பொருளில், தன்னையொழிந்த எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணமாயிருக்கும் பரமபொருள் கலந்து ஒன்றாயிருப்பதெப்படி? சமானத்வ தர்மமுடைய பாலும் பாலும் நீரும் நீரும் கலந்தால் ஒன்றாய்விடும். பிந்நத்வ தர்மமுடைய அரிசி மிளகு வெந்தயம் கலந்தால் வேறுபாடு தோன்ற விருக்கும். ஞாநாநந்த வடிவினனாகிய ஆத்மாவோடு விலக்ஷண ஞாநாநந்தவடிவினனாகிய பரமாத்மா கலந்தொன்றானாலும், அசித்தோடு கலக்கும்போது வேறுபாடு தோற்றுமாதலால் பாலும் பாலும் கலப்பதுபோலக் கலந்தொன்றாயிருக்கிறானென்று சொல்வதற்கியலாது. ஆக, இக்கலப்பு அரிசி மிளகு வெந்தயம் போன்ற கலப்பென்றே சொல்லவேண்டும். அப்படியானால் கலந்தொன்றாயிருக்குமென்பது ஸம்பவமுடையதன்றென்பது வெள்ளிடைமலை.

8-வது பக்கம் 24-ம் வரி தொடங்கி, “பரதெய்வத்தின் சிதசித் வேஷமே உபாதான காரணமாதல் காட்டியவாறும். இங்ஙனம் திரிவித காரணமும் பரதெய்வமேயாகும் என்பது தோன்றப் பேரெழிலொருமையால் விசேடித்தார்” என்று குறிப்பிடப்பட்டுளது.

முன்னர் ஒருமை என்பதற்குப் பொருள் கூறவந்தவிடத்து, அண்டபிண்டரூபமான பிரபஞ்சத்தோடு கலந்தொன்றாயிருக்கும் தன்மை என்று குறிப்பிட்டிருப்பதால், இங்குச்சிதசிதவேஷமென்பது ஸ்தூல சிதசிதவேஷமென்பது பெறப்படும். ஸூக்ஷ்ம சிதசித் வேஷமே உலகிற்குபாதன காரணமேயன்றி ஸ்தூல சிதசித்வேஷம் உலகிற்குபாதானமாகாது. ஆதலால் இங்கு இதனை உபாதானமென்பது குடம மண்ணிற்குபாதானமென்பதுபோல் அசம்பவமாகும்.

“இங்ஙனம் திரிவிதகாரணமும் பரதெய்வமேயாகுமென்பது தோன்றப் பேரெழில் ஒருமையால் விசேடித்தார்” எனற தொடரும், முன னுரைதத பொருளோடு முரணுடையதே. முனபு பெருமைக்குப் பொருளுரைக்கவந்தவிடததுப் பரமாணுவை அண்டபிண்டமாக்கி என்றுரைததிருப்பதால அண்டபிண்டததிற்கு உபாதானம் பரமாணுவென்பது பெறப்பட்டது. இங்கு அதற்கு விரோதமாகத் திரிவிதகாரணமும் பரதெய்வமேயாகுமென்பது தோனறப் பேரெழில் ஒருமையால் விசேடித்தார் என்பது எவ்வாறு பொருந்தும்?

தொடரும்.

கோபாலகிருஷ்ணப் பிள்ளை,
மதுரை.

Resolutions passed at the meeting held on 23-2-35 at Nanguneri.

We publish below for the information of our subscribers the details of the meeting held on 23-2-35 at Nanguneri regarding "**The Hindu Mutt's Bill**" pending legislation in the in the Madras Legislative Council and the resolutions that were passed by the meeting unanimously. The Bill, if passed into law, would prove to be serious menace to the spread of Vaishnava religion and all efforts should be made to prevent the passing of such a Bill into law.

A largely attended public meeting of the disciples and well-wishers of Sree Vanamamalai Mutt was held under the Presidency of M. R. Ry. N. S. T. Chariar Avl., M.A. B.Sc. to protest against the Hindu Maths Bill now before the Select Committee in the Madras Legislative Council. The President in his able speech drew pointed attention to the incompetency of the Madras Legislative Council to pass legislation in respect of an Institution like the Sree Vanamamalai Mutt which has large properties and disciples all over India and referred to the grave consequences that will flow form such a sweeping enactment. He also dealt with the confiscatory and expropriatory character of the bill at great length and said that the bill strikes at the very foundation of Sree Vaishanava Siddandham, not to speak of Hindu Religion. He then concluded his forceful speech by appealing to the entire body of Sishyas all over, the country to oppose the proposed bill tooth and nail and send memorials to His Excellency the Viceroy and His Excellency the Governor of Madras requesting them not to give their assent to the said bill.

M. R. Ry., T. Jagannatha Iyengar avl., Retired Gazetted Officer then read messages from Zamindars of Nuzvid, Udayarpalayam and letters and telegrams received from various other places requesting that immediate and necessary steps should be

taken to see that this hasty piece of legislation does not get into the Statute book of the Province.

The following resolutions were unanimously passed:—

I. Resolved that this meeting of disciples of Sree Vannamamalai Mutt strongly deprecate the introduction in the Madras Legislative Council of the Hindu Maths Bill No. 24 as the Bill seriously affects the fundamental beliefs of Vaishnavite community and is purely confiscatory and expropriatory in character.

II. Resolved also that in view of the fact that the Totadri or Sree Vanamamalai Mutt is more an all India Institution this meeting question the right of the Local Legislatures to pass as an enactment for this institution which has the effect of interfering with the rights of persons and properties outside the Presidency.

III. Resolved also that immediate steps should be taken to communicate to the Millions of disciples scattered all over India about the disastrous consequences of this impeding hasty legislation so that they may lodge their protest and take suitable steps to stop the passing of the Bill.

IV. Resolved that agent of the Mutt, M. R. Ry. T. Jaganatha Iyengar Avl., assisted by a committee consisting of influential disciples of the Mutt be requested to take necessary and immediate steps to enlighten the disciples of the Mutt of the effcet and consequences of this legislation and thus organise the public opinion of the disciples against the proposed measure.

After the vote of thanks, the President followed by all those that attended the meeting went to His Holiness and submitted to His Holiness that there is no discontent or dissatisfaction amongst the disciples of Sree Vanamamalai Mutt about the management of the Mutt and therefore there is no warrent or necessity for the intereference of the Legislature and that the above facts should be stated in the Memorandum of opinion called for from His Holiness.

ஒருவனும் மற்றொருவன்பேரில் பலாத்காரமாக அக்கிரமம் செய்யக்கூடாது. அப்படிச்செய்தால் ஜனசமூகத்தின் ஒழுங்குகெட்டுப்போகும். மேலும் அதில் மேலே விவரித்த மூன்று குறைகளுமிருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணன் ஸுபத்திரைக்கு அண்ணன். எல்லா விதத்திலும் வம்சத்தில் பெரியவன். எவ்வகையிலேனும் சுபத்ரைக்கு மங்களமுண்டாகுமோ அவ்வகையினையே செய்வது அவருடைய கடமை. சுபத்திரையை நல்ல வரனுக்கு விவாகம் செய்து கொடுப்பதே அவரால் அவசியம் செய்யத் தகுந்தது (Duty). தெரிந்தவர்களுக்குள், தனது சகோதரிக்கு நல்ல வரன் கிடைக்காவிட்டால் ஸ்ரீ கிருஷ்ணனுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஆதலால் ஸுபத்ரை அர்ஜுனனைக் கல்யாணம் செய்துகொள்ளும்படியான எல்லா முயற்சிகளையும் ஸ்ரீகிருஷ்ணன் செய்தார். பலாத்காரமாக அபஹரிப்பதைத்தவிர்த்து ஸுபத்ரைக்கு மங்களத்தைச்செய்ய அவருக்கு வேறு வழியிருந்திருக்கவில்லை.

ஆகையால் ஸ்ரீ கிருஷ்ணன் ஸுபத்ரையின் க்ஷேமத்தை நாடித் தர்மகாரியத்தையே செய்தார். அக்கிரமம் ஒன்றும் செய்யவேயில்லை. ஸுபத்ரையை யபஹரிப்பதில் கெடுதல்களுமிருந்தன.

நல்ல பயனையடையவேண்டிக் கெட்ட உபாயங்களைக் கைக்கொள்ளுதல் நியாயமில்லையென்று (The end does not sanctify the means.) சிலர் சொல்கிறார்கள்.

இதற்கு இரண்டுவிதமான சமாதானங்கள் சொல்லலாகும். முதலாவது அர்ஜுனன் பேரில சுபத்திரைககு வெறுப்பில்லை; விருப்பமேயிருந்தது. விருப்பத்தையும வெறுபபையும அவள் வெளிப்படையாய்க் காட்டவில்லை. ஹிந்து ஜாதியிற் பிறந்த பெண்குழந்தைகள் விவாஹ விஷயமாகத் தங்களுடைய இஷ்டத்தை வெளிக்காட்டுவதில்லை. பெண்குழந்தைகள் வெட்கத்தினால் விருப்பத்தை வெளியிடாவிட்டாலும் பெரியோர்கள் அதை ஊஹித்தறிந்து பலாத்காரமாக விவாகத்தை நிறைவேற்றுவதில் என்ன குற்றமிருக்கிறது?

காரியம் நல்லதாயிருந்தாலும் அதை விரும்பாதவனுக்குப் பலாத்காரமாகச்சாதித்துக்கொடுக்க எவருக்கும் அதிகாரமில்லை. சில சம

யங்களில் பலாத்காரம் செய்தலும் நியாயமாகவிருக்கும். பிராணன் போகிற சமயத்தில் ஒருவன் வெறுப்பினால் மருந்தையுண்ண மறுத ளித்தால் அவனைக் காப்பாற்றுவதற்காக அவனுக்குப் பலாத்காரமாக மருந்தை ஊட்டலாம். அவ்வதிகாரம் எல்லோருக்கும் இல்லை. டாக் டர்களுக்கு மட்டும் உண்டு குழந்தைகள் எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ள மறுதளிததால், அவர்களைக்கண்டித் துக்கல்விபுகட்டுவதற்குத் தாய் தந்தைகளுக்கும் உபாத்தியாயருக்கும் அதிகாரம் உண்டு. வயதையடையாத பெண்குழந்தையோ ஆண்குழந்தையோ தெரியாத் தனத்தால் சரியில்லாத விவாகத்தை விரும்பினால், அவ்விவாகத்தைப் பலாத்காரமாகத் தடுக்கத் தாய் தகப்பன்களுக்கு அதிகாரமில்லையா?

தற்காலத்தில் யூரோப்பியர்களுக்குள்ளும் தங்கள் குழந்தைகளைச் சரியில்லாத விவாஹத்தைச் செய்துகொள்ளாதபடி, தடுக்கிற வழக்க மிருக்கிறது. அதேமாதிரியாக அறிவில்லாத குழந்தைகளை அவர்கள் நல்ல வரன்களை விவாகம் செய்யும்படி கட்டாயப்படுத்த, ஹிந்துஜாதித் தாய் தந்தையர்களுக்கு அதிகாரமில்லையா? நல்ல வரன்களிடம் தங் கள் பெண்குழந்தைகளை யவர்களின் க்ஷேமத்துக்காகவே கட்டாயப் படுத தியாவதுஒப்புவித்துவிடததாய்தந்தைகளுக்குப் பாத்தியமுண்டு.

அப்படியிருக்கும்போது சுபத்ராஹரண விஷயத்தில் ஸ்ரீ கிருஷ் ணன் அனுமதி கொடுத்தது ஏன் நிந்திக்கததக்கதாகும்?

இதற்கு இரண்டு பதில்களிருக்கின்றனவென்று முன்பே சொன் னோம். இரண்டாவது கெடுதியைப்பற்றி விசாரிக்கத் தொடங்கு வோம். ஸ்ரீ கிருஷ்ணன் ஸுபத்ரைக்கு மங்களத்தை விரும்பினார். அதை நிறைவேற்ற வேறு வழியிலாமல் பலாத்காரமாக அபஹரித் துப்போவதே நலமென்றெண்ணியதற்குடன்பட்டார். ஸ்வயம்வரம் நடந்திருந்தால், சிந்தறிவுள்ள பெண்குழந்தைத் தன குலத்துக்குத் தகாதவனை ஒருவனுக்கு மறதியினால் மாலையிட்டுவிடக்கூடும். ஆதை யால் ஸ்ரீ கிருஷ்ணன் பலராமர் வஸுதேவர் முதலானவர்கள் தங்களு டைய குலவழக்கம்போல் நல்லவனுக்கே பெண்ணைக்கொடுத்தார்கள். யாதவர்கள் எல்லோரும் கிருஷ்ணனுக்கு உட்பட்டவர்கள். அவர்களில்

ஒருவனும் அதை யாக்ஷேபிக்கவில்லை. அர்ஜுனன் நல்லவன். யாருக்கு என்ன ஆக்ஷேபம் இருக்கக்கூடும்?

இக்காலத்திலேயே இத்தக்காரியம் ஒழுங்கானதென்று நினைக்கப்படுகிறது. ஆனால் பல வருஷங்களுக்கு முந்தின காலத்தில் நடந்த ஸுபத்ரா விவாகம் இக்காலத்தில் நடக்கிற விவாகங்களைப்போல் இல்லை. அக்காலத்திய வழக்கங்களை நாம் நன்றாய்த் தெரிந்துகொள்ளாமல் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஆதர்ச புத்தியையும் ஆதர்சப்பிரீதியையும் தெரிந்துகொள்ள முடியாது.

மநுதர்ம சாஸ்திரத்தில் விவாகங்கள் பிராம்மம், தைவம், ஆர்ஷம், பிராஜாபத்யம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் என்று எட்டுவிதங்கள் சொல்லப்பட்டுள்ளன. எட்டுவித விவாகங்களிலும் எல்லா வர்ணத்தாருக்கும் அதிகாரமில்லை. க்ஷத்திரியர்களுக்கு எவ் விவாஹங்களில் அதிகாரமுண்டென்று அடியிற்கண்ட வாக்கியத்தால் விசதமாகும்.

“ஷடாநுபூர்வ்யா விப்ரஸ்ய க்ஷத்ரஸ்ய சதுரோऽவராந்” இதற்குக் குல்லூகபட்டர் வியாக்கியானம் செய்திருக்கிறார். “க்ஷத்ரியஸ்யாவராந் பஶ்சிமாந் ஆஸுராதீந் சதுர:” “க்ஷத்திரியர்களுக்குப் பின்சொல்லப்பட்ட ஆஸுரம் முதல்நான்கும்” என்று. அதாவது க்ஷத்திரியர்களுக்குள் ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம், இந்நான்கும் சாஸ்திரீயமான விவாகங்கள். மற்றவை சாஸ்திர விரோதமானவைகள். ஆனால் 25வது சுலோகத்தில், “பைஶாசஶ்சாஸுரஶ்சைவ ந கர்தவ்யௌ கதாசந”. பைசாச விவாகமும் ஆஸுர விவாகமும் ஒருகாலும் யாராலும் அனுஷ்டிக்கத்தக்கதில்லை என்றிருக்கிறது. ஆகையால் க்ஷத்திரியர்களுக்கு காந்தர்வ விவாஹமும், ராக்ஷஸ விவாகமுமே விதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

இவைகளில் கன்னிகையும் வரனும் ஒருவருக்கொருவர் அநுராகத்தால் செய்துகொள்ளும் விவாகம் காந்தர்வம் என்பது. சுபத்திரைக்கு அர்ஜுனனிடம் அநுராகம் இருந்திராவிட்டால் அவர்க

ளுக்கு விவாகம் நடந்திருக்கமாட்டாது. காந்தர்வ விவாகம் காமத்தா லேற்படக்கூடியதாகையால் நீதிமானான ஸ்ரீகிருஷ்ணனால் அது அநு மதிக்கப்பட்டிருக்கமாட்டாது. ஆகையால் க்ஷத்திரியர்களுக்கு ராக்ஷஸ விவாகத்தைத்தவிர வேறுவிவாகம் சாஸ்திரப்படி யுக்தமுமில்லை, நல்ல துமில்லை. (ப்ரசஸ்தம்). கன்னிகையைப் பலாத்காரமாக அபஹரித்துப் போவதையே ராக்ஷஸ விவாகம் என்று சொல்லுகிறார்கள். அதுதான் க்ஷத்திரியர்களுக்கு உத்தமமான விவாகம்.

மனு 3, அத்தி. 24வது சுலோகத்தில் சொல்லியதாவது:

சதுரோ ராக்ஷஸாத்யாந் ப்ரசஸ்தாந் கவயோ விது: ।
ராக்ஷஸம் க்ஷத்ரியஸ்யைகம் ஆஸுரம் வைஸ்ய ஶூத்ரயோ: ॥

ராக்ஷஸம் முதல் நான்குவிவாஹங்கள் மேன்மையுள்ளவையென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். க்ஷத்திரியர்களுக்கு ராக்ஷஸ விவா கமும், வைசிய சூத்திரர்களுக்கு ஆஸுர விவாகமும், மிகவும் சிறந் தது. ஸ்ரீ கிருஷ்ணன் தன் சகோதரியுடையவும் அவளுடைய கணவ னுடையவும் நன்மையையும் கௌரவத்தையும், தன் குலத்தின் கௌ ரவத்தையும் உத்தேசித்துத் தர்மமானதும் சிலாக்கியமானதுமான விவாகத்தையே யவளுக்கு நடத்தி வைக்கப் பாத்தியப்பட்டவராக இருந்தார். ஆதலால் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்குச் சுபத்திரை யை யபகரிக்கும்படி அநுமதி கொடுத்தார். இந்த விருத்தாந்தத்தி லிருந்து ஸ்ரீகிருஷ்ணனுடைய சாஸ்திரப்பயிற்சியும், சிறந்த நீதியறி வும், நிலைத்ததான புத்தியும், எல்லாருடைய மரியாதையையும் காக்க விருப்பமும், யாவருக்கும் ஹிதம் செய்யவேண்டுமென்ற இச்சையும் காணப்படுகின்றன.

இவ்விஷயத்தில் மனுவின் சுலோகங்கள் பொருந்தாது என்று சிலர் சொல்லக்கூடும். பாண்டவர்களின் காலத்தில் மனுஸம்ஹிதை யிருந்ததென்பதற்குப் பிரமாணம் எது? இதைப்பற்றியநேக விவா தங்களேற்படுகின்றன. மனுநீதி யென்பது முன்பு அநுஷ்டானத்தி லிருந்த வழக்கங்களையே ஒருங்குசேர்த்துத் தொகுக்கப்பட்ட ஒரு புஸ்தகம் என்று படித்தவர்களில் சிலர் நினைக்கிறார்கள். ஆகையால்

யுதிஷ்டிரருடைய காலத்தில் இவ்விதமான முறையிருந்ததாவென்று விசாரித்தல் அவசியமாயிருக்கிறது. மகாபாரதத்தில் இதைக்குறித்து என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றி விசாரிப்போம். ஸுபத்ராஹரண அத்தியாயத்தை மட்டிலும் பரிசீலனை செய்தால் போதாது. மற்ற அத்தியாயங்களையும் படித்தல் வேண்டும்.

அர்ஜுனன் ஸுபத்ரையையெடுத்துப் போனதைக்கேள்விப் பட்டு, யாதவர்கள் கோபமடைந்து யுத்தத்துக்கு ஆயத்தமானார்கள். அவர்கள் அக்கிரமத்தைச் செய்யுமுன் ஸ்ரீ கிருஷ்ணன் என்ன செய்தாரென்பதை நாம் கவனிக்கவேண்டும். அவர் மௌனமாகவிருந்தார். தங்களுடைய குலத்துக்கே யவமானம் விளைந்ததென்று பல தேவர் கோபத்தையடைந்து, கிருஷ்ணனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினார். ஸ்ரீ கிருஷ்ணன் அவருக்குப்பதிலுரைத்தார்.

"அர்ஜுனன் நமது குலத்துக்கு அவமானம் செய்யவில்லை, ஸந்மானத்தையே செய்திருக்கிறான். அவன் நம்மைத்திரவியவாசையற்றவர்களென்று நினைத்துப் பணத்தைக் கொடுத்துச்சுபத்திரையைப் பெற்றுக்கொள்ள நினைக்கவில்லை. தகப்பன் தாய்மார்களின் அனுமதியின்பேரில் கொடுக்கப்பட்ட கன்னிகையை விவாகம்செய்வதில் வீர்யமுள்ள க்ஷத்திரியனுக்கு அழகல்ல. நம்முடைய நிச்சயத்தையறிந்துகொண்டும் குந்தீ புத்திரனான தனஞ்சயன் மேற்சொல்லிய தோஷத்தைத்தெரிந்துகொண்டும் பலாத்காரமாகச் சுபத்திரையை யபஹரித்தான். அர்ஜுனனுடன் சம்பந்தமானது நமது குலத்துக்கு உசிதமானது. குலம், சீலம், வித்யை, புத்தி இவைகளில் நிறைவுபெற்றவனை பார்த்தன் பலாத்காரமாய் அபஹரித்தான் என்பதால் ஸுபத்ரைக்குப்புகழ் உண்டாகுமே தவிர வேறில்லை. இவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் க்ஷத்திரியர்களுக்கு உசிதமான நான்கு விவாகங்களைப் பற்றி விவரமாகச்சொன்னார்.

1. பணத்தைக்கொடுப்பதால் எந்த விவாகம் முடிவுபெறுமோ அது ஆஸுரம்.
2. ஸ்வயம்வர விவாகம்.

3. தாய்தந்தைகளாற் கொடுக்கப்பட்ட கன்னிகையை விவாகம் செய்துகொள்ளுவது அல்லது பிராஜாபத்யம்.

4. ராக்ஷஸம்-பலாத்காரமா யபஹரித்தல்.

இவைகளில் முதலாவது விவாஹம் கன்னிகையின் குலத்துக்கு அபகீர்த்தியைக் கொடுக்கக்கூடியது. இரண்டாவதின் முடிவு நிச்சய மற்றது. மூன்றாவது விவாஹத்தால் வரனுக்குக் கௌரவம் ஏற் படாது. காரியம் நிறைவேறுவதற்கு நான்காவதுதான் ஒழுங்கா னது. இது ஸ்ரீகிருஷ்ணனுடைய வார்த்தையிலிருந்தே பிரகாசமா கிறது. நாம் எவ்விதத்திலும் ராக்ஷஸ விவாகத்தையே பெருமைப் படுத்துகிறோமென்று நினைக்கவேண்டாம். ராக்ஷஸ விவாகம் கிலாக் கியமானதில்லையென்று நினைத்து மங்களமான காரியத்தைக் கெடுத்து விடுதல் பிரயோஜனமற்றது.

இதைக்குறித்து நாம் விஸ்தாரமாய் எழுதியதற்குக்காரணம் உண்டு. ஸ்ரீ கிருஷ்ணனின் விரோதிகள்கூட, ஸுபத்ரையை யபஹ ரிக்கும்படி யவர் அனுமதி கொடுத்ததற்காக அவரை ஓரிடத்திலும் நிந்திக்கவில்லை.

அயல் தேசத்து வழக்கங்கள் நல்லவையென்று சில அற்பக்காரி யங்களை நாம் பின்பற்றினோமானால் நமது முன்னோர்களின் ஒப்பற்ற வையான பழைய வழக்கங்களையும் நாம் இழக்கும்படி ஏற்படும். நம்மிடமிருக்கிற சில கெட்ட பழக்கங்களை நாம் விலக்கிவிடுதலும் வேண்டும்.

நான்காவது அதிகாரம்.

காண்டவவன தாகம்.

ஸுபத்ராஹரணத்திற்குப் பிறகு ஸ்ரீகிருஷ்ணனை காண்டவ தாகத்தில் காண்கிறோம்.

பாண்டவர்கள் காண்டவபிரஸ்தத்தில் வாசம் செய்துகொண்டி ருந்தார்கள், அவர்களின் ராஜதானிக்குச் சமீபத்தில் காண்டவம்

என்ற ஒரு பெரிய வனமிருந்தது, ஸ்ரீகிருஷ்ணனும் அர்ஜுனனும் அதை யெரித்துவிட்டார்கள். அதின் விருத்தாந்தம் இவ்வளவுதான் அதைப்பற்றி பொய்க்கதைகள் நிரம்ப நிறைந்துவிட்டன.

பூர்வகாலத்தில் சுவேதகியென்று பெயருள்ள ஒரு அரசன் இருந்தான். அவன் யக்ஞங்களைச் செய்வதில் மிகவும் பிரியமுள்ளவன். ரித்விக்குகளான பிராமணர்கள் அவனுக்கு யாகங்களைச்செய்து வைத்துத் தனித்துப்போனார்கள். இனிமேல் தங்களால் யாகத்தைச் செய்துவைக்க முடியாதென்றும் அரசனை ருத்திரனிடம் போகும் படிக்கும் அவர்கள் சொன்னார்கள். ருத்தரரோ, யாகம் செய்வித்தல் பிராமணர்களின் தொழிலென்றும், தன்னால் செய்விக்க முடியாதென்றும, துர்வாஸர் என்ற ஓர் அந்தணரிருக்கிறாரென்றும், அவர் தன்னுடைய அம்சமென்றும், அவரிடம் தானே உத்திரவிட்டிருப்பதாயும், அரசனிடம் தெரிவித்தார். ஸ்ரீ ருத்திருடைய ஆக்ஞைப் பிரகாரம் துர்வாஸர் அரசனுடைய வேள்வியை நடத்திவைத்தார். யாகமோ பெரியது. ஒருவருஷகாலம் வரை இடைவிடாமல் அக்னியில் நெய்யின் தாரை விழுந்துகொண்டிருந்தது. நெய்யைக் குடித்துக் குடித்து அக்னிக்கு அஜீரண ரோகம் (Dyspepsia) ஏற்பட்டது. அக்னி, பிர்மாவிடம போய் "ஐயா பெரிய ஆபதது வந்திருக்கிறது. அதிக மாயுணவு கொண்டதால், சரீரததுக்குக் கெடுதியேற்பட்டிருக்கிறது. அதைச் சொஸ்தப்படுத்த உபாயம் ஏது" எனறு அவரைக் கேட்டார். பிர்மாவானவர் வைத்தியர்கள் 'உஷ்ண உஷ்ணஸ்ய ஔஷதி, என்று சொல்லியிருக்கிறார்கள். எதினால் வியாதியேற்பட்டதோ அதைக்கொண்டே அந்த வியாதியைச் சொஸ்தப்படுத்தவேண்டுமென்று அக்னியிடம் சொல்லி மறுமடியும் உணவை நிரம்பவெடுத்துக்கொள்ளச் சொன்னார். அக்னி காண்டவனத்தையணுகினது நெருப்பு வனத்தைச்சுற்றிலும் நாலாபக்கங்களிலும் சூழ்ந்துகொண்டது. அந்தக்காட்டில் அநேக ஜீவஜந்துக்கள் வசித்துவந்தன. யானைகள் தங்களுடைய துதிக்கைகள் நிறைய ஜலத்தை மொண்டுவந்து நெருப்பையணைத்துவிட்டன. ஜந்துக்கள் காக்கப்பட்டன. நெருப்பு ஏழு தடவை காட்டையெரித்தது. ஏழு தடவைகளிலும் யானைகள் நெருப்பை யணைத்தன. பிறகு அக்னி, பிராமண வடிவங்கொண்டு

கிருஷ்ணனையும் அர்ஜுனனையுமணுகித் தனக்கு மிகவும் பசியாயிருக்கிறதென்றும் அவர்களைத் தனக்கு உணவுகொடுக்கும்படிக்கும் பிரார்த்தித்தான். அவர்கள் சம்மதித்தார்கள். பிறகு அக்நி சுயரூபம் கொண்டு தனக்குக் காண்டவ வனத்தைச் சாப்பிட உத்தரவளிக்கும்படி பிரார்த்தித்தான். அவர்களும் ஆக்ஞை கொடுத்தார்கள். நெருப்பு காட்டையெரிக்கததொடங்கியது. ஆனால் இந்திரன் பெரிய மழையைப்பெய்யச்செய்து அவ்வனத்தைக்காக்க வாரம்பித்தான். விருஷ்டியால் பயிர்களுக்கு நலம் என்பது மட்டும் நமக்குத் தெரியும். அர்ஜுனன் காட்டுக்குச் சமீபம் வந்தான். இந்திரன் யுத்தத்துக்கு வந்தான். எல்லாதேவர்களும் தங்களுடைய அஸ்திரங்களுடன் இந்திரனுக்கு உதவிக்கு வந்தார்கள். எல்லோருமாக அர்ஜுனனையெதிர்க்க முடியவில்லை. இந்திரன மலைகளையெடுத்து எறிந்தான். அர்ஜுனன் தனது பாணங்களால் கோட்டைகட்டி வனத்தைக்காத்தான். இந்திரன் வஜ்ராயுதத்தைக் கையிலெடுத்து அடிக்கவாரம்பித்தான். அப்பொழுது ஆகாயவாணி தோன்றி, இவர்கள் நாராயணர்களென்ற பிராசீன ரிஷிகளென்று சொல்லிற்று. ஆகாயவாணியின் வார்த்தையைக் கேட்டுத் தேவர்கள் விண்ணுலகம் சென்றார்கள். கிருஷ்ணனும் அர்ஜுனனும இஷ்டப்பிரகாரம் வனத்தை யெரித்தார்கள். பசுக்களும் பக்ஷிகளும் வனததைவிட்டு ஓடவாரம்பித்தன. அவர்கள் அவைகளையும பிடித்துப்பிடித்துக் கொன்று நெருப்பிலேயே எறிந்தார்கள். அவைகளின் கொழுப்பைச் சாப்பிட்டதால் அக்னிக்கு அஜீர்ண ரோகம் தீர்ந்தது. விஷத்தால் விஷமடிபட்டது. அக்னி பகவான் கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் வரம தந்தருளினர்.

இப்பொய்க்கதைகளைப்பற்றி விவரிக்கப்புகுந்தால் கேலிக்கிடமாகும். வேறு பயனில்லை. இந்த விருத்தாந்தத்தில் ஏதாவது உண்மையான சங்கதியிருக்குமானல் அதைக் கீழே விவரித்திருக்கிறோம. பாண்டவர்களின் ராஜதானிக்குச் சமீபத்தில் ஒரு காடு இருந்தது. அதில் துஷ்ட மிருகங்கள் அநேகமிருந்தன. கிருஷ்ணனும் அர்ஜுனனும் அதில் நெருப்பை வைத்துக் காட்டை யழித்து ஜனவாஸத்துக்கு யோக்கியமாகச் செய்தார்கள். கிருஷ்ணனும் அர்ஜுனனும் அப்படிச்செய்ததிலிருந்து ஒரு அபகீர்த்தியும் அடையவில்லை.

நாம் இவ்விதம் சொல்வதற்குக் காரணங்களிருக்கின்றன. காண்டவதாக விருத்தாந்தத்தின் பெரும்பாகம் பாரதம் மூன்றாவது தொகுதியில் காணப்படுகிறது. முதலாவது தொகுதியில் அது இல்லை. பர்வஸங்கிரஹ அத்தியாயத்திலும், அநுக்கிரமணிகா அத்தியாயத்திலும் இதினுடைய பிரஸ்தாபம் இருக்கிறது. காண்டவனதாகத்திலுருந்தே, சபாபர்வம் ஆரம்பிக்கப்படுகிறது. இவ்வனத்தின் மத்தியில் மயனென்ற வசுரன் ஒருவன் வாசம் செய்துவந்தான். அவனுக்கு அபாயம் ஏற்பட்டது. அவன அர்ஜுனனிடம் தன்னைக் காப்பாற்றும்படி கேட்டான். சரணமடைந்தமயனை அர்ஜுனன் காத்தான். இதற்குப் பதிலுபகாரமாக மயன் பாண்டவர்களுக்கு ஒரு விசித்திரமான சபையை நிர்மாணம் செய்து கொடுத்தான். அந்தச் சபையின் விருத்தாந்தத்திலிருந்து தொடங்கி ஸபாபர்வத்தின் கதையிருக்கிறது. இந்தப் பர்வத்தில் மகாபாரத யுத்தத்துக்கு விதை விதைக்கப்பட்டிருக்கிறது.

சபையும், அதில் ராஜஸூயயாகம் நடந்ததும் உண்மையான விருத்தாந்தங்கள். சபை வாஸ்தவமாயிருந்தால் அதைக்கட்டி முடிப்பதற்கு ஒரு மனிதன் இருந்திருக்க வேண்டும. அந்த மனிதன் அல்லது இஞ்சினீயரின் பெயர் மயன். மயனென்பான் ஆர்யஜாதியைச் சேர்ந்தவனல்ல. ஆகையாலவனையஸுரன என்று சொல்லப்படுகிறது. அவன் அர்ஜுனனையண்டிப் பிழைத்தான. அர்ஜுனனிடமிருந்து அவன் எவ்விதமான உபகாரத்தைப்பெற்றான் என்பது காண்டவனதாக விருத்தாந்தத்தில் காணப்படுகிறது. உண்மைக்கதையைச் சுற்றிலும் அநேகவிதமான பொய்க்கதைகள் சூழ்ந்து உண்மையை இருட்டில் மறைததிருக்கின்றன. இதைபப்போல் அநேக சரித்திரவுண்மைகளும இருளில் பொதிந்துகிடக்கின்றன. காண்டவநதாகம என்பதே ஓர் கவியின் உல்லேகம் என்று சிலர் சொல்கிறார்கள். இருந்தாலும் கவியானவன் எந்த உத்தேசத்தையிட்டு கிருஷ்ணார்ஜுனர்களின் சரித்திரத்தைத் தொகுத்திருக்கிறானோ, அந்த உத்தேசம் மிகவும் நல்லது.

மயனானவன் உயிர் காப்பாற்றப் பெற்று அர்ஜுனனிடம் சென்று "தாங்கள் என்னை ரக்ஷித்தீர்கள்; நான் தங்களுக்கு என்ன

பிரத்யுபகாரம் செய்யவேண்டும், உத்திரவிடுங்கள்'' எனப்பிரார்த்தித்தான். அர்ஜுனன் பிரத்தியுகாரத்தை விரும்பவில்லை அவனுடைய பிரியத்தை மட்டும் விரும்பினன். ஆனல் மயன் அத்துடன் விடவில்லை. தான் ஏதாவது காரியம் செய்து கொடுப்பதாகக் கட்டாயப்படுத்தினன். அப்பொழுது அர்ஜுனன் ''ஓ! கிருதக்ஞனே! நீ சாகும்தருவாயிலிருந்தபோது, என்னுல் காக்கப்பட்டாய், என்பதை நினைத்து, பிரத்தியுபகாரம் செய்ய விரும்புகிருய். இதன் நிமித்தம் உன் மூலமாக நான் ஒரு உபகாரத்தையும் பெற்றுக்கொள்ளமாட்டேன்'' என்று மயனிடம சொன்னன்.

இதுதான் நிஷ்காமகர்மம். யூரோப்பில் இவ்விதமில்லை. ஐரோப்பியர்களுடைய ஸ்ரக்தங்களிலிருந்து நாம் தர்மத்தையும் நீதியையும் கற்றுக்கொள்ள விரும்புகிருேமே; அது நமது துர்ப்பாக்யம். அர்ஜுனனுடைய வாக்கியத்தின் பின்பாகத்திலிருந்து நிஷ்காமகருமம எது என்று தெரிந்துகொள்ளக்கூடும. ஆனல் மயன் அர்ஜுனனுக்கு ஏதாவது காரியம் செய்துகொடுத்து மனத்திருப்தியையடைவதாயிருந்தால் அதைக்கெடுக்க அர்ஜுனனுக்கு இஷ்டமில்லை. அர்ஜுனன் மயனிடத்தில் ''உன்னுடைய அபிப்பிராயத்தை வீணுக்க நான் இஷ்டப்படவில்லை. ஆகையால் நீ, ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஏதாவது காரியம் செய்துகொடுத்தால, அதுவே எனக்குப்பிரத்யுபகாரம் செய்ததாக ஆகும் '' என்று சொன்னன்.

மயன் கிருஷ்ணனைத்தனக்கு உத்தரவிடும்படி கேட்டான். மயன் தானவர்களுக்குள் விசுவகர்மா (Chief Engineer). ஸ்ரீ கிருஷ்ணன் தனக்காக ஏதாவது காரியம் செய்யும்படி மயனிடம் சொல்லவில்லை. யுதிஷ்டிரருக்கு ஒரு சபை கட்டிக்கொடுக்கும்படி மயனிடம் ஸ்ரீ கிருஷ்ணன் சொன்னர். அச்சபையைப்போல் வேறு ஒருவரும் சபை கட்ட முடியாதபடி அவ்வளவு சிறந்ததாகச்சபையைக் கட்டி முடிக்கும்படி ஸ்ரீ கிருஷ்ணன உத்திரவிட்டார். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு இது தனது கார்யமில்லாமலிருந்தாலும, அவருக்கு அது சொந்தக்கார்யமேதான். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு இரண்டே நோக்கங்கள்; தர்மத்தைப்பிரசாரம் செய்தலும், தர்ம ராஜ்ஜியத்தை ஸ்தா

பித்தனுமாம். தர்மப் பிரசாரத்தைக்குறித்து நாம் இப்பொழுது பிரஸ்தாபிக்கவில்லை. இந்தச்சபையைச் செய்வித்ததே தர்மராஜ்ய ஸ்தாபனத்தின் முதலாவது அங்கம். சபை நிர்மாணம் செய்யப்பட்டதிலிருந்தே யுதிஷ்டிரருக்கு மற்றக் காரியங்களும் நிறைவேறின. தர்மராஜ்யத்தை ஸ்தாபித்தல் ஜகத்தின் காரியம். ஜகத்துக்கு உபகாரமான காரியம் எதுவோ, அதைத் தன்னுடைய சொந்தக்காரியமாக ஸ்ரீகிருஷ்ணன் கருதிவந்தார்.

ஒரு மரத்தை வளர்ப்பதற்குக் கிளைகளில் தண்ணீர் வார்க்காமல், வேரில் ஜலத்தை ஊற்றுவதுபோல, ஸ்ரீகிருஷ்ணன் எல்லோருடையவும் நன்மைக்காகவே, அதற்கு மூலமான தர்மத்தை வளர்ப்பதில் எண்ணமுள்ளவராக இருந்தார். ஜனங்கட்கு நன்மைசெய்வதால் நமக்கொரு பிரயோஜனமில்லையே என்று வேற்றுமையாக நினைத்து நாம் அதில் பிரவர்த்திப்பதில்லை. நமக்குக் கீர்த்தி வருவதாயிருந்தால், அந்தக்காரியத்தில் நாம் பிரவர்த்திக்கிறோம். வெள்ளைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுகிற காரியங்களையே, பெரியவை யென்று நினைக்கிறோம். தர்மத்தை மறந்துவிட்டோம். தர்மத்தின் உயர்வைத் தவிர வேறெதைக் கைப்பிடித்து நாம் முன்னுக்கு வரக்கூடும்? ஆகையால் நாமெல்லோரும் ஒரே மனதுள்ளவர்களாகத் தர்மத்தின் உயர்வில் எண்ணத்தை வைப்போம். ஸமாஜத்தைச் சீர்திருத்துவதற்கு வேறு வேலை செய்யவேண்டாம். தர்மத்தைக் காப்பாற்றுவிடில் ஸமாஜ ஸம்ஸ்காரம் ஏற்படாது.

5-வது அதிகாரம்.

ஸ்ரீகிருஷ்ணனின் (ஆதர்சமான) மனிதத்தன்மை.

ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றிய இந்தச் சரித்திரத்தில் அவருடைய மனிதத்தன்மையை மட்டும் நாம் கவனித்து வந்தோம். அவர் ஈசுவரரோ அன்றோ? இதைப்பற்றி நாமொன்றும் சொல்லவில்லை.

தர்மமென்பது ஓர் உத்தமமான வஸ்து. ஒருவன் எப்படிக்கிருப்பினும் தர்மத்தை யனுஷ்டானம் செய்துவந்தால், அவன் வீணாகப் போகவேமாட்டான்.

நாம் ஸ்ரீ கிருஷ்ணனின் ஈசுவரத்தன்மையைப்பற்றி விவரிக்கப் புகவில்லை. அவருடைய ஆதர்ச மனுஷ்யத் தன்மையைப்பற்றி மட்டும் பரிசிலனை செய்ய வாரம்பித்திருக்கிறோம். அவர் ஆதர்ச புருஷ ரென்று முன்பே சொல்லியிருக்கிறோம். மனித சக்திக்கு மீறினதாக அவர் எந்தக் காரியத்தையாவது செய்திருந்தால், அவருடைய மனித சக்தி விகாஸத்தை (மலர்ச்சியை) யடைந்ததாகக் கொள்ளவேண்டும். மனிதர்களுக்குப் புத்தி புகட்டுவதற்காகவே ஈசுவரன் மனித ரூபமாக இவ்வுலகில் அவதரிக்கிறார் என்று முன்னமே நாம் சொல்லியிருக்கிறோம். ஸ்ரீ கிருஷ்ணன் ஓரிடத்திலும் உலகத்துக்கு மீறின சக்தியால் காரியங்களை நிர்வாகம்செய்துவரவில்லை. ஏனென்றால் மனிதனுக்கு உலகத்தை மீறின வல்லமையில்லை. ஆதலால் ஸ்ரீ கிருஷ்ணன் ஈசுவராவதாரமாயிருந்தும், அவர் தம்மை ஈசுவரனென்று சொல்லிக்கொள்ளவுமில்லை. பிறர் அவரை ஈசுவரனென்று சொன்னாலுமதையவர் ஆமோதிப்பதுமில்லை. "நம்மால் இயன்றமட்டிலும் புருஷகாரத்தை (முயற்சியை) ப்பிரகாசப் படுத்தமுடியும். தைவம்போல் நடக்க நம்மால் முடியாது" என்று அவர் ஓரிடத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். மனுஷ்யருக்குள்ள ஆசார வியவகாரங்களையே அவர் அனுஷ்டானம் செய்து வந்திருக்கிறார். தன்னைத் தைவம் என்று பிறர் நினைக்கவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு ஒருநாளுமிருந்ததாகத் தெரியவில்லை. அவர் காண்டவ வனதாகத்திலும், மற்றக் காரியங்களிலும் எப்படி நடந்துகொண்டாரோ அதைப்பற்றி யிப்பொழுது சொல்கிறோம்.

வைசம்பாயினர் சொல்கிறார் "பகவான் வாஸுதேவர் மிகவும் பிரீதியடைந்து பாண்டவர்களாற் பூசிக்கப்பெற்றுக் கொஞ்சகாலம் காண்டவப் பிரஸ்தத்தில் வாசம் செய்து வந்தார். பிறகு தன்னுடைய தகப்பனாரைக் காண விரும்பியதால் தன் கிருகத்துக்குப்போக நினைத்தார். அவர் முதலில் யுதிஷ்டிரரை யழைத்து, அத்தையான குந்திதேவிக்கு வந்தனம் செய்தார். பிறகு தனது சகோதரியான ஸுபத்திரையைப் பார்க்க வேண்டுமென்று அவளுடைய சமீபத்துக்குச் சென்றார். உண்மையானவைகளாயும், அர்த்தம் நிரம்பினவைகளாயும், சுருக்கமானவைகளாகவும், ஹிதம் செய்யக்கூடியவைகளாயும்,

ஆக்ஷேபிக்கத் தகாதவைகளாயும் உள்ள வார்த்தைகளால் சுபத்திரைக்கு ஸ்ரீகிருஷ்ணன் புத்திமதியைச் சொன்னார். தனக்கு நல்லதை யுரைப்பவர்களான தாய் தகப்பன் முதலிய பெரியோர்களிடம் மரியாதையாகப்பேசி யவர்களுக்கு வந்தனம் செய்து பூஜையும் செய்தார். விருஷ்ணிவம்சத்துக்கு அலங்காரமான ஸ்ரீகிருஷ்ணன், அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டுத் திரௌபதியையும் தௌம்யரையும் கண்டார். தௌம்யரை வந்தனம் செய்து, துரௌபதியுடன் ஹிதமாகச் சம்பாஷணை செய்தார். பிறகு அர்ஜுனனுடன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, யுதிஷ்டிரர் முதலான நான்கு சகோதரர்களிடம் சென்றார். ஸ்ரீ கிருஷ்ணன் பஞ்சபாண்டவர்களாற் சூழப்பெற்று, தேவர்களுடன் கூடின இந்திரனைப்போல் விளங்கினார். பிறகு ஸ்நான ஜபங்களை முடித்துக்கொண்டும், யாத்திரைக்கான வஸ்திராபரணங்களால் அலங்காரம் செய்து கொண்டும், புஷ்பங்களாலும் பூமாலைகளாலும் வாசனைத்திரவியங்களாலும் தேவர்களையும் பிராம்மணர்களையும் பூஜைசெய்து முடித்தார். தனது நகரத்துக்குப் போகவேண்டுமென்று வெளிக்கட்டிடத்துக்குவந்தார்; அங்கே தயிர், பழம், புஷ்பம் முதலான மங்களவஸ்துக்களுடன் பிராமணர்கள் அவருக்கு ஸ்வஸ்திவசனம் செய்தார்கள். ஸ்ரீவாஸுதேவர் அவர்களுக்குத் திரவியங்களைக் கொடுத்து, அவர்களைப் பிரதக்ஷிணம் செய்தார். பிறகு உத்தமமான திதி நக்ஷத்திரத்துடன் கூடின நல்ல முகூர்த்தத்தில், குடை, கத்தி, தனுசு முதலிய ஆயுதங்களையெடுத்துக்கொண்டு கெருடக் கொடியுடன் கூடின தேர்மீதேறிக்கொண்டு தனது நகரம் சென்றார். அந்தத்தேர்மீது, யுதிஷ்டிரரை ஆதரவுடன் ஏற்றிவைத்து, ஸாரதியான தாருகனை விலகியிருக்கச்சொல்லி, தானே ஸாரதியாகக் குதிரைக்கடிவாளங்களைக் கைகளில் பிடித்துக்கொண்டார்; அந்தத் தேர்மீதில், அர்ஜுனனும் ஏறிக்கொண்டு ஸ்வர்ணத்தண்டுடன் கூடின வெண்சாமரத்தை வீசிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனை வலம் வந்தான். மகாபலசாலியான பீமனும்மற்றப் பாண்டவர்களும் புரோகிதர்களும் அவரைப் பின்தொடரவாரம்பித்தார்கள். சத்துருக்களை ஜயிக்கவல்ல ஸ்ரீ கிருஷ்ணன் யுதிஷ்டிரர் முதலான பாண்டவர்களாற் சூழப்பெற்றுச் சிஷ்யர்களுடன் கூடின குருமார்களைப் போல் பிரகா

சித்தார். அவர் அர்ஜுனனை இறுகத்தழுவியும், யுதிஷ்டிரரையும், பீமசேனனையும் பூஜை செய்தும், நகுல, ஸகாதேவர்களுக்கு மரியாதையும் செய்தார். யுதிஷ்டிரரும், பீமனும், அர்ஜுனனும் அவரை யாலிங்கனம் செய்தார்கள். நகுல சகாதேவர்கள் அவரை நமஸ்காரம் செய்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் யுதிஷ்டிரரையழைத்து அவரைத் திரும்பிப் போகும்படி சொல்லியவர் கால்களில் விழுந்தார். தர்மராஜாவான யுதிஷ்டிரர் காலில்விழுந்த தாமரைக் கண்ணனை கண்ணீர்க்கைகளாலெழுப்பிவிட்டு, உச்சி முகர்ந்துபார்த்துச் சொந்த ஊருக்குப்போக அனுமதி கொடுத்தார். ஸ்ரீ கிருஷ்ணனும் வருத்தத்துடன் அவர்களை விட்டுப்பிரிந்து துவாரகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது அவர் அமராவதிக்குச் செல்கிற இந்திரன் போல் காணப்பட்டார். ஸ்ரீ கிருஷ்ணன் எப்போது காணக்கிடைத்தாரோ அப்போது அவரைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டும், கண்களுக்கு எட்டுகிற வரையில் மனதினாலேயயவரைத் தொடர்ந்து சென்றார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் தங்களுடைய பார்வைக்கு மறைந்த பிறகு அவரையே தியானித்துக்கொண்டு பாண்டவர்கள் தங்களுடைய நகரத்துக்குத் திரும்பினார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் சந்தோஷத்துடன் துவாரகைக்குச்சென்றார். உக்ரஸேனர் முதலான யாதவர்கள், அவருக்கு உபசாரஞ்செய்தார்கள். வாஸுதேவர், வயதுசென்றவர்களான தனது பிதாவையும், ஆசிரியரையும், பலபத்திரரையும், நமஸ்கரித்தார். பிறகு பிரத்யும்னன், சாம்பன், நிசடன், சாருதேஷ்ணன், கதன், அநிருத்தன், பானு இவர்களை யாலிங்கனஞ் செய்து பெரியோர்களின் அனுமதியின்பேரில் ருக்மிணியின் கிருகத்துக்குச் சென்றார்'' என்று.

६-வது அதிகாரம்.

ஜராஸந்த வதத்தின் பரிசீலனை.

சபை நிர்மாணம் முடிந்தவுடன் ராஜஸூய யாகத்தின் பிரஸ்தாபம் வந்தது. யாகம் செய்யும்படி யுதிஷ்டிரருக்கு எல்லோரும் அனுமதி கொடுத்தார்கள். ஆனாலவர், ஸ்ரீகிருஷ்ணனுடைய உத்தரவில்

லாமல் அவ்விஷயத்தில் பிரவர்த்திக்கச் சம்மதிக்கவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் சிறந்த நீதிமானுகையால், அவரையழைத்துவர யுதிஷ்டிரர் ஆள் அனுப்பினர். ஸ்ரீகிருஷ்ணன் இந்தச்சமாச்சாரம் தெரிந்தவுடன் காண்டவப் பிரஸ்தத்துக்குப் புறப்பட்டு வந்தார். அவர் யுதிஷ்டிரரிடம் சொன்னதாவது:—

"நானும் யாகம் செய்வதில் விருப்பமுள்ளவன்தான். இந்த யாகத்தை, நினைத்தவுடன் செய்ய முடியாது. அது தங்களுக்குத் தெரிந்த விஷயமே. எவனுக்கு எல்லாச்செல்வமும் இருக்கிறதோ, எவன் எல்லாராலும் பூஜிக்கப்பெறுகிறனே, எவன் பூலோகம் முழுவதற்கும் அரசனே, அவனே அந்த யாகத்தைச் செய்யத்தகுதியுள்ளவன்." என்று. யுதிஷ்டிரர் ஸ்ரீ கிருஷ்ணனிடம் வணக்கத்துடன் சொல்கிருர்.—"நான் அவ்விதமான அரசனு? எல்லா ஸம்பத்துக்களும் என்னிடம் இருக்கின்றனவா? நான் எல்லாவிடங்களிலும் பூஜிக்கப் பெறுகிறேனு?' என்று. தனதுபிராதாக்களின் பலத்தினுல் ஒருவன் பெரிய அரசனுகக் கௌமபியிருக்கலாம். அதனுல் அவன் ராஜஸூய யாகம் செய்யத்தகுந்தவனுகமுடியுமா? தானே பெரிய அரசனென்று ஒருவனும் தனுலேயே நிர்ணயிக்கமுடியாது. துராத்மாவும் ஆடம்பரமுள்ளவனுமான மனிதன், தானே பெரியோன் என நினைத்துக் களிப்படைவது சகஜம்தான். ஆனுல் யுதிஷ்டிரரைப்போல் ஸாவதானமுள்ளவனுக்கும் விநயமுள்ளவனுக்கும் அவ்விதமான நினைவு ஏற்படாது. தான் பெரியவாசனென்ற எண்ணம் அவர் மனதில் உதிக்கவில்லை. அவர் மந்திரிமார்களையும் பிராதாக்களையும் அழைத்து இவ்விஷயத்தில் ஆலோசனை செய்தார். அவர்கள் அவர் தகுதியானவரென்று பதில் சொன்னுர்கள். யுதிஷ்டிரரின் மனம் சமாதானமடையவில்லை. தனக்கு அந்தாங்கப்பிரியமானவர்களிடம் யோசனை செய்யாமல் அவ்விஷயத்தை அவரால் ஸ்திரப்படுத்த முடியவில்லை. மகாபாகுவாயும் ஸர்வோத்தமனுயுமுள்ள ஸ்ரீ கிருஷ்ணனிடம் கேட்க நினைத்தார். கிருஷ்ணனே ஸர்வக்ஞரென்றும், ஸர்வசக்தரென்றும், நல்லயோசனை சொல்லத்தகுந்தவரென்றும் அவர் நினைத்தார். ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் சொல்லியனுப்பினர். அவர் வந்துசேர்ந்தவுடன், யுதிஷ்டிரர் அவரிடம சொன்ன வார்த்தைகளைத் தெரிவிப்போம்:—

"எனது இஷ்டர்கள் எல்லோரும் இந்த யாகத்தை நடத்தும்படி என்னைத் தூண்டினார்கள். நான் தங்களைக் கேட்டுத்தான் நிச்சயம் செய்யவேண்டு மென்றிருந்தேன். பந்துக்களைத் தூஷிப்பவர் பலரிருக்கிறார்கள். தன்னலம் பாராட்டிக்கொண்டு பிரியவசனம் சொல்வோர் அநேகர். தங்களுக்கு எக்காரியத்தால் லாபமேற்படுமோ அதையே ஸ்திரப்படுத்துவதற்காகப் புத்திசொல்ல முன்வருவோர் பலர். ஹே! மகாத்மாவே! இப்பூமியில் மேலே சொல்லப்பட்ட மனிதர்களே, அதிகமாகவிருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு ஒரு காரியமும செய்தல் கூடாது." என்று யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணனிடம் சொன்னார். யுதிஷ்டிரரைச் சார்ந்தவர்கள் தங்களுடைய சொந்தக்காரியத்தை முடித்துக்கொள்வதற்காகவே அவரை யாகம் செய்யும்படி நிர்ப்பந்தித்து வந்தார்கள். ஆனால் அதை யுதிஷ்டிரர் ஒத்துக்கொள்ளவில்லை. ஸ்ரீகிருஷ்ணனை, அவர்கள் எல்லோரும் காமக்குரோதமற்றவரென்றும், ஸத்யவானென்றும், தோஷமற்றவரென்றும், ஸர்வோத்தமரென்றும், ஸர்வக்ஞரென்றும், எல்லாம் செய்ய வல்லவரென்றும் நினைத்திருந்தார்கள். ஆனால் நாமோவென்றால் ஸ்ரீகிருஷ்ணனை ஸ்திரீ லோலரென்றும், தயிர் வெண்ணெய் திருடியவரென்றும், கெட்ட நடத்தையுள்ளவரென்றும், மற்றுமநேக தோஷங்களுள்ளவரென்றும் நினைக்கிறோம். பிராசீன கிரந்தங்களில் எவரைத் தர்மத்தில் சிறந்தவரென்று கூறியிருக்கிறதோ, அவரைக் குற்றஞ்சொல்லும் நம்மவர்களிடம் தர்மக் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்பதில் ஆச்சரியமென்ன?

யுதிஷ்டிரர் எவ்விதமாக நினைத்தாரோ அவ்விதமே முடிந்தது. ஸத்யவானான ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டிரரை நோக்கி "நீர் ராஜஸூய யாகம் செய்யத்தகுதியற்றவர். ஸம்ராட்டைத்தவிர வேறு அரசன் ராஜஸூய யாகம செய்தல்கூடாது. நீர் 'ஸம்ராட்' அல்ல. மகத தேசத்தரசனான ஜராஸந்தன் ஒருவனே ஸம்ராட். அவனை ஜயிக்காமல் நீர் ராஜஸூய யாகம் செய்யத்தகாது. நம்மாலும் சபமதிக்க முடியாது" என்று சொன்னார். ஸ்ரீகிருஷ்ணனைக் கெட்டவர் என்றும் சுயநலம் பாராட்டுகிறவரென்றும் எவர்கள்சொல்கிறார்களோ அவர்கள் கீழ்கண்டபடி சொல்கிறார்கள்:— "கிருஷ்ணனுக்கு ஜராஸந்தன்

விரோதி. அவரால் அவனை ஜயிக்க முடியவில்லை. தன்னிஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ள இதுவே சமயமென நினைத்துப் பலசாலிக ளான பாண்டவர்களைக்கொண்டு தன்னுடைய காரியத்தை முடித்துக் கொள்ள ஸ்ரீகிருஷ்ணன் நினைத்தா" ரென்று.

ஜாரஸந்தன் சக்கிரவர்த்திதான். ஆனால் அவன் தாமர்லேன் (Tamerlane) போலவும் நெப்போலியனைப்போலவும் அக்கிரமம் செய்துவந்தான்.

ஜராஸந்தன் ராஜஸூயயாகம் செய்வதாகப் பிரதிக்ஞைசெய்து தனது புஜபலத்தால் எல்லா அரசர்களையும்பிடித்துவந்து யானைகளைச் சிங்கம் எவ்விதம் குகையில் தள்ளிவிடுமோ அவ்விதமாகவே அவர் களைக் காராக்கிருஹத்தில் அடைத்துவிடவேண்டுமென்று உத்தேசம் செய்தான. அவனது இந்தக்கெட்ட நினைப்புப் பிறர்கள் மூலம் ஸ்ரீ கிருஷ்ணனுக்குத் தெரியவந்தது. முன காலங்களில் யாகத்தில் நரபலிகள் கொடுக்கப்பட்டனவென்று இதிஹாஸம் படிப்போர்க்கு நாம் சொல்லவேண்டுவதில்லை. ஸ்ரீ கிருஷ்ணர் யுதிஷ்டிரரை நோக் கிச் சொன்னதாவது:—

ஹே! பாரதகுலத்தின் விளக்கே! ஜராஸந்தன் தன்னால் பிடித் துக்கொண்டுவரபபட்ட அரசர்களை, மாடுகளைக் கொட்டத்தில் அடைப்பதுபோல், சிறையில் அடைததிருக்கிறான். சீக்கிரம் அவர் களைப்பலிபிடப்போகிறான்; ஆகலால் நாம் உம்மை யவனுடன் யுத்தம் செய்யும்படி சொன்னோம். அந்த அரசர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார் கள். இந்தத் துஷ்டன் 86 அரசர்களை யேற்கனவே கொண்டுவந்திருக் கிறான். இனனும் 14 அரசர்களைக் கொண்டுவர நினைத்திருக்கிறான். எலலோரையும் ஒரேகாலத்தில் ஸம்ஹாரம செய்ய உததேசித்திருக் கிறான். இந்த அயோக்கியனைகொன்று கீர்த்திபெற எவன் பிரவர்த் திக்கிறானோ! அவனே வாஸ்தவத்தில் "ஸம்ராட்".

ஆதலால் ஜராஸந்தனைக் கொல்லும்படி யுதிஷ்டிரரை ஸ்ரீ கிருஷ் ணன் கேட்டுக்கொண்டது சுயநலத்தைக்கருதியல்ல. அதனால் யுதிஷ் டிரரின் காரியம் சித்திப்பதிலும் ஸ்ரீ கிருஷ்ணனுக்குத் தாத்பர்ய

யில்லை. அடைபட்டுக்கிடக்கிற அரசர்களை விடுவிக்கவேண்டுமென்பதே அவருடைய தாத்பர்யம். அவனுடைய தொந்தரவினால் கஷ்டமடைந்துவந்த பாரதவர்ஷத்தைக் காக்கவேண்டுமென்பதும் சாதாரண ஜனஸமூகத்தை ரக்ஷிக்கவேண்டுமென்பதும் அவருக்கு விருப்பம்.

ரைவதக மலைக்கோட்டையிலிருக்கிற கிருஷ்ணனை யெதிர்ப்பதும் ஜயிப்பதும் ஜராஸந்தனால் முடியாத காரியம். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஜராஸந்தனைக்கொல்வது உத்தேசமில்லை. எக்காரியத்தால் உலகத்துக்கு நன்மை விளையுமோ அதைச் செய்யும்படி ஏவுதல் தர்மாத்மாவான ஸ்ரீ கிருஷ்ணனின் கடமை. தனது கடமை நிறைவேறுவதற்கு எந்தக்காரியம் அவசியமோ அதைச்செய்யும்படியுபதேசம செய்ய அவருக்குப்பாத்தியமுண்டு. அநேகர் அவரைச் சுயநலம் பாராட்டுகிறவரென்று அபவாதம் சொன்னாலும், அதைப்பொறுத்துக்கொண்டு அவர் உலகத்துக்கு நன்மையையே செய்துவந்தார். அவர் தர்மாத்மா.

யுதிஷ்டிரர் ஸாவதானமுள்ள மனிதர். ஜராஸந்தனுடன் போர் புரிய அவர் இஷ்டப்படவில்லை. அப்படியிருந்தும் பீமசேனனின் சிறந்த பலத்தினாலும், அர்ஜுனனின் வீரவாக்கியங்களாலும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய தூண்டுதலாலும், முடிவில் அவர் யுத்தத்துக்கு இணங்கினார். பீமனும் அர்ஜுனனும் ஸ்ரீ கிருஷ்ணனுடன் புறப்பட்டார்கள். ஜராஸந்தனை ஜயிப்பதற்காகச் சீக்கிரமாக வெளியேறினார்கள். துராத்மாவான ஜராஸந்தனை வதைப்பது நியாயந்தான். ஆனால் அவனுடைய ஸைந்யங்கள் துஷ்டர்களல்லவே; அவர்களை யேன் வீணே கொல்லவேண்டும் என்று நினைத்து இம்மூவர்களும் தங்களுடைய சேனைகளைக் கூட அழைத்துப்போகவில்லை. சேனைகளையழைத்துப்போய்ச் சண்டை செய்வதில் நல்லோர்களுமிறப்பார்கள்; கெட்டவர்களும் சாவார்கள். ஜராஸந்தனின் சேனை பெரியது. மூவர்களுடைய சேனைகளும் ஒன்றுசேர்ந்தும் அதை யெதிர்க்க முடியாது. அக்காலத்தில் க்ஷத்திரியர்களுக்குள் ஒரு நியாயமிருந்தது. ஒரு க்ஷத்திரியனை வேறொருவன் தனிமையாகச் சண்டைக்கழைத்தால் (द्वंद्व युद्धं) அவன் மறுதளிக்கக்கூடாது. ஆகையால் பிரயோசனமின்றி ஜனங்களை நாசம் செய்யாமல், அம் மூவர்கள் மட்-

டும் ஜராஸந்தனிடம் சென்று, அவனைத் தனிமையாக யுத்தத்திற்கழைத்தார்கள். மூன்று பெயர்களுக்குள் ஒருவருடனாவது தனித்த யுத்தம் செய்ய அவன் அவசியம் இணங்குவான். எவனுக்குச் சரீர பலமும், ஸாஹஸமும், பயிற்சியும் மிகுதியாயிருக்கிறதோ அவனுக்கே வெற்றியேற்படும். இவ்விஷயத்தில் - நான்குபேர்களுமே சிறந்தவர்கள். ஸ்ரீ கிருஷ்ணன், பீமன் அர்ஜுனன் ஆகிய மூவர்களும் ஜராஸந்தனிடம் பிராமண வேஷத்துடன் சென்றார்கள். ஜராஸந்தனால் அவர்களை அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை. அவர்கள் அவனது அரண்மனை வாசலிலிருந்துகொண்டு பேரிகை முதலானதுகளை யுடைத்து, கோட்டைகளைத் தகர்த்து, ஜராஸந்தனது சபையிற் பிரவேசித்தார்கள். நீதிமான்களான அவர்கள் ஜராஸந்தனுடன் மறைவாயிருந்து சண்டைசெய்யவில்லை. பீமனும் பார்த்தனும் ஜராஸந்தனுடைய சமீபத்திற் சென்றும், நீதி தவறவில்லை. அவர்கள் நியமத்திலிருந்ததால் ஜராஸந்தனுடன் வார்த்தையொன்றும் சொல்லவில்லை. அவனுடன் சம்பாஷணை செய்கிற காரியம் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஏற்பட்டது. ஸ்ரீ கிருஷ்ணன் "இவர்கள் நியமத்துடனிருக்கிறார்கள். இப்பொழுது பேசமாட்டார்கள். ராத்திரியின் முன்பகுதி கழிந்தபின்னர் நம்முடன் வார்த்தையாடுவார்கள்' என்று ஜராஸந்தனிடம் சொன்னார். ஜராஸந்தன் கிருஷ்ணனுடைய வார்த்தையைக் கேட்டு அவர்களைத் தன்னுடைய யாகசாலையில் இருக்கச்செய்து தன்னுடைய வீடுசென்றான். இரவில் இருட்டானபிறகு மறுபடியுமவன் அவர்களிடம் வந்தான்.

இங்கே காணப்படுகிற சாதுர்யமும் தர்மாத்மாக்களுக்குத் தகாது. இதுவரை நாம் கிருஷ்ணனையும் அர்ஜுனனையும் தர்மத்துக்கு ஆதர்சபுருஷர்களென நினைத்திருந்தோம், அவர்கள் தங்களுடைய காரியம் நிறைவேறுவதற்காக வஞ்சனை செய்வது நியாயமா? ஆகையால் அவர்கள் தர்மாத்மாக்களல்ல; ஸ்ரீ கிருஷ்ணனது சரித்திரம் நாம் நினைத்தபடி தூய்மையுள்ளதல்ல; என்று ஜராஸந்தனின் விருத்தாந்தத்தை ஆரம்பமுதல் முடிவுவரை படியாதவர்களுக்குத் தோன்றலாம். அர்த்த ராத்திரியில் 'கன்னிருளில்' ஜராஸந்தன் தனிமையாயிருக்கும்போது அவனை வஞ்சகமாயழைத்துவந்து கொல்

வதற்காகவே இவ்வுபாயம் செய்யப்பட்டதுபோல் தோன்றுகிறது. ஆனாலவர்கள் அப்பொழுது ஜராஸந்தனைப் பிடிக்கவுமில்லை, இரவில் யுத்தம் நடத்தவுமில்லை, பகலிலேயே சண்டை நிகழ்ந்தது. இரகஸ்யத்தில் நடக்கவில்லை. மகததேசத்துஜனங்களின்முன் னிலையிலேயே நடந்தது. ஒரேநாளில் யுத்தம் முடியவில்லை. நான்குநாட்கள்வரை சண்டை நடந்தது. மூன்று மனிதர்கள் கூடி அவனுடன் சண்டைசெய்யவில்லை. ஒரேமனிதன்தான் போர்புரிந்தான். ஜராஸந்தனைப் பலாத்காரமாய் இழுத்துவரவில்லை. யுத்தத்துக்கு ஆயத்தமாயிருக்கும்படிக்குப் போதுமான அவகாசமவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஒருகால் யுத்தத்தில் அபஜயம் அடைந்து தனக்காபத்து வந்துவிடுமோவென்று நினைத்து, அவன் தன் குமாரனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்தான். அவ்வளவு காலம் வரையவனுக்குச் சாவகாசம் கொடுக்கப்பட்டது. அவர்கள் நிராயுதபாணிகளாய் அவனிடம் சென்றார்கள். வேறு சூழ்ச்சியொன்றும் செய்யவில்லை. அவன் விரும்பினவுடன் தாங்களின்னாரென்பதையவனுக்குத் தெரிவித்தார்கள். யுத்தத்தில் ஏற்படக்கூடிய காயங்களையாற்றக்கூடிய சகல ஒஷதிகளுடன் ஜராஸந்தனுடைய உபாத்தியாயர்கள் அவ்விடத்தில் சித்தமாயிருந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணனிடம் அவ்விதமான சகாயம் ஒன்றுமில்லை. அவர்கள் அநியாயமாக யுத்தம் நடத்தவில்லை. யுத்தத்தில் ஜராஸந்தனுக்கு ஹிம்சைசெய்த பீமசேனனையும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தயவின் மிகுதியால், அப்படிச் செய்யாதபடி தடுத்தார். எவருடைய உண்மையான சரித்திரம் இவ்விதமாயிருக்கிறதோ அவர் கெட்டகாரியம் ஏதாவது செய்வாரா? அவரைக்குறைகூறும் கதைப் பிரக்ஷிப்தமா இதைப்பற்றி நன்றாய் விசாரித்தல்வேண்டும். மகாபாரதத்தில் ஒரிடத்தில் சிலஅத்தியாயங்கள் பிரக்ஷிப்தங்கள் என்றும், பிரிதோரிடத்தில் வேறு அத்தியாயங்கள் பிரக்ஷிப்தங்களெனவும் நாம் காண்கிறோம். அதேவிதமாக ஒரே அத்தியாயத்தில் சில சுலோகங்களே பிரக்ஷிப்தங்களாக இருக்கவும் கூடும். இது ஆச்சரியகாமல்ல. அநேகப் பிராசீன கிரந்தங்களில் பிரக்ஷிப்தங்கள் நிரம்பவும் காணப்படுகின்றன. இது யாவருக்கும் தெரிந்தவிஷயம். ஆகையாலேயே வேதங்களுக்கு வெவ்வேறு சாகைகளும் ஸ்ரீ ராமாயணம் முதலிய பிராசீன கிரந்தங்களுக்குப்

பாட பேதங்களும் காணக்கிடக்கின்றன. ஒவ்வொரு கிரந்தங்களுக்கும் மூலபாடம் ஏற்பட்டபிறகு ஒரு சுலோகமோ இரண்டு நான்கு சுலோகங்களோ பிரக்ஷிப்தங்களாக நுழைக்கப்பட்டிருக்கின்றன. மகாபாரதத்தின் மூலக்கிரந்தம் இபற்றப்பட்டபிறகு, அதில் பிரக்ஷிப்தங்கள் ஏற்பட்டனவென்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

ஆனால் சில சுலோகங்கள் பிரக்ஷிப்தங்களெனவும், சில அவ்விதமில்லையென்றும் நாம் சொல்வதால், அவ்விஷயத்தில் நன்குகப் பரீக்ஷை செய்யவேண்டியது அவசியம். நாம் எந்தச்சுலோகங்களைப் பிரக்ஷிப்தங்கள் என்று சொல்லுகிறோமோ, அவைகளுக்குள்ளேயே கிராக்ஷேபணையானவடையாளங்கள் காணப்படுகின்றன. அவ்வடையாளங்களைப்பார்த்து நாம் அவைகளைப் பிரக்ஷிப்தங்களென நினைக்கிறோம். அவைகளைத் தவிர வேறு ஹேதுக்கள் அகப்படவில்லை. அவைகளில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிரமாணங்கள் சில. உபயோக மற்றவை யநேகம். ஒருபுஸ்தகத்தில் ஒருகதை காணப்பட்டு அக்கதையானது அக்கிரந்தத்தின் மற்ற அம்சங்களுக்கு முற்றிலும் விரோதமாயிருந்தால் கிரந்த கர்த்தாவோ, அதைப் பிரதி செய்த எழுத்தாளனோ அந்தக் கதையைக் கைப்பிசகினல் எழுதிவிட்டானென்று கொள்ளாமல், அதைப் பிரக்ஷிப்தங்களென்று நாம் ஸ்திரப்படுத்தலாகும். தவறுதலாக எழுதப்பட்ட பிரக்ஷிப்தங்கள் எவை, யென்பதை யிலகுவாகக் காணலாம். ஸ்ரீ ராமாயணக்கிரந்தத்தின் ஒரு பிரதியில் ராமர் ஊர்மிளையைக் கல்யாணம் செய்துகொண்டார் என்று கண்டிருக்குமேயானல் அது மறதியினல் எழுதப்பட்டதென்று நினைக்கலாம். ஆனல் ஸ்ரீராமர் ஊர்மிளையை விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்று லக்ஷ்மணருடன் விவாதம் செய்தார்; பின்னர் சகோதர வாஞ்சையால் அவருக்கு அவளைக் கொடுத்துவிட்டார் என்று ஒரு பிரதியில் இருக்குமானல், அதைப் பிரக்ஷிப்தம் என்றுகொள்ளவேண்டும். ஸ்ரீ ராமர் தனது பிராதாக்களிடம் மிகவும் பிரியமுள்ளவரென்ற உத்தமகுணத்தையெடுத்துக் காட்டுவதற்காகவே இரஸிகனெருவனல் அந்தக் கதை தொகுக்கப்பட்டது என்று கொள்ளுதல் நியாயமேயாகும்.

மகாபாரதத்திற்கு மூன்று தொகுதிகள் காணப்படுகின்றன வென்று நாம் அடிக்கடி சொல்லியிருக்கிறோம், முதலாவது தொகுதி ஒருவராலும் இரண்டாவது தொகுதி வேறொருவராலும் இயற்றப் பட்டிருக்கிறது. இருவர்களும் சிறந்த கவிகள். ஆனால் அவர்க ளுடைய வாக்கியநடை (ரவநாரீதி) வேறுவேறாயிருக்கிறது. இது ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

அதைத்தொகுத்தவர் ஸ்ரீகிருஷ்ணனை ராஜதந்திரத்தில் மகா சமர்த்தர் எனக்கருதியிருந்தார்போலும். இத்தகையவர்களுக்குப் புத்திசாதுர்யமே எல்லாக்குணங்களிலும் மேலானதென்று தோன்றி யிருக்கலாம். புத்திகௌசலமுள்ளவனையே உத்தமனெனக்கொள்ளு கிற படிப்பாளிகளின் நினைவில் அவனே ஆதர்சபுருஷன். ஐரோப்பிய ஜனங்கள் இம்மாதிரியான கௌசலத்தை (Diplomacy) என்று மிக வும் கொண்டாடுகிறார்கள். Diplomacy (ஏமாற்றுதல்) என்பது அதி கமாகப் படித்தவர்களுக்குத்தான் தெரியக்கூடும்.

---

7 வது அத்தியாயம்.

கிருஷ்ணனுக்கும் ஜராஸந்தனுக்கும் ஸம்வாதம்.

“நமோத்திரியில் யாகசாலையில் ஸ்நாதக வேஷம் தரித்தவர்களான அந்த மூன்று மனிதர்களையும் சந்தித்து ஜராஸந்தன் அவர்களைப் பூஜித்தான். அவனுடைய பூஜையை யவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஜராஸந்தன் வார்த்தையால் தெரிகிறது. ஒருவருக்கொருவர் க்ஷேமச் சமாச்சாரங்களை விசாரித்ததின் பிறகு, அவர்களிடம் ஜராஸந் தன் “ஹே பிராம்மணர்களே! ஸ்நாதகர்களான பிராம்மணர்கள்சபைக்கு வரும்போதல்லாமல் வேறு சமயத்திற் சந்தனத்தையாவது புஷ்பத் தையாவது அணிந்துகொள்வதில்லையே. நீங்கள் யாவர்? உங்களுடைய வஸ்திரங்கள் ரக்தவர்ணமுள்ளவையாயிருக்கின்றன. அங்கங்களில் சந்தனப்பூச்சும், புஷ்பமாலைகளும் அலங்காரங்களும் காணப்படு

கின்றன. உங்களுடைய புஜங்களில் 'ஜோதிஸ்' தெரிகிறது. உருவங்களைக் கவனிக்கும்போது அவைகளில் தேஜஸ் விளங்குகிறது. என்னிடம் தாங்கள் பிராம்மணர்கள் என்று தெரிவித்தீர்கள். உண்மையாகத் தாங்கள் யாவர்! அரசர்கள் முன்னிலையில் உண்மையே புகலத் தக்கது. மேலும் தாங்கள் வாசற் கதவைத்திறந்துகொண்டு வீட்டுக் குள்ளே வாராமல் அச்சமின்றி கோட்டையின் மேல்பாகத்தை யுடைத்து எதற்காக உள்ளே நுழைந்தீர்கள்? பிராம்மணர்கள் வார்த்தையால்மட்டுமே வீர்யத்தைக் காட்டுவார்கள். நீங்கள் செய்கையால் வலிமையைக்காட்டி, மிகவும் ஒவ்வாத காரியத்தைச் செய்திருக்கிறீர்கள். தாங்கள் என்னிடம் நேரில்வந்ததால், நான் உங்களுக்கு முறைப்படிப் பூஜைசெய்தேன். அதை நீங்கள் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை? என்ன காரியத்தை உத்தேசித்து நீங்கள் இங்கே வந்தீர்களென்று இந்தக்ஷணத்திற்சொல்லவேண்டும்" என்று ஜராஸந்த னுரைத்தான்.

அதற்குப்பதிலாக ஸ்ரீ கிருஷ்ணன், மதுரமானதும் கம்பீர மானதுமான குரலுடன் ஜராஸந்தனிடம் சொன்னதாவது; (மூலபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் சஞ்சலமடைந்தாவது கோபம்கொண்டாவது யாதொரு வார்த்தையும் எப்பொழுதாவது சொல்வதில்லையென்றும் அவருடைய விரோதிகளெல்லாம் அவர் வசமானார்கள் என்றும் சொல்லியிருக்கிறது.) "ஹே! அரசனே! நீ யெங்களை விரதத்துட னிருக்கிறவந்தணர்களென்று நினைத்தாய். ஆனால் பிராமண, க்ஷத்திரிய, வைசியர்களென்ற மூன்று ஜாதிகளும், ஸ்நாதகவிருதத்தை யனுஷ்டிக்கக்கூடும். இவர்களுக்குள் விசேஷ நியமும் சாமான்ய நியமும் இருக்கின்றன. க்ஷத்திரியர் விஷேச நியமத்தையனுஷ்டித்துச் சம்பத்தையடைகிறார்கள். புஷ்பத்தையணிந்தவன் ஸ்ரீமானாகிறு னென்று நாமெல்லோரும் புஷ்பத்தைத் தரித்துக்கொள்ளுகிறோம், க்ஷத்திரியன் கைவலிமையிற் சிறந்தவன்; வார்த்தையால் வீரியம்பேச மாட்டான். ஆகையால் க்ஷத்திரியனிடம் கடுமையான வார்த்தையை யுரைக்கக்கூடாதென்று சிரத்தங்களில் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது." என்று.

இக்கதையானது சாஸ்திரானுஸாரமாயும் சாதுர்யம் பொருந்தின தாயுமிருக்கிறது. ஆனாலிது தர்மப்பிரியராயும், தர்மாத்மாவுமான ஸ்ரீ கிருஷ்ணனின் விருத்தாந்தமாகுமா என்று ஆராயத்தக்கது.

தங்களைப் பிராமணர்களென்று சொல்லிக்கொள்வதில் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஒரு உத்தேசமும் இருந்திருக்கவில்லை. தாங்கள் க்ஷத்திரியர்கள் என்றே ஸ்பஷ்டமாய் ஸ்ரீ கிருஷ்ணன் ஒத்துக்கொண்டிருக்கிறார். ஜராஸந்தனிடமும் அவனுடன் வந்தவர்களிடமும் அவர் சொல்லியிருக்கிறார்.

"ஈசுவரன் க்ஷத்திரியர்களுக்குக் கைகளில் வலிமையைக்கொடுத்திருக்கிறார். எங்களுடைய கைத்திறத்தை யின்றே காண்பாய். சந்தேகமில்லை. ஹே! பிருஹத்ரதரின் புதல்வனே! வீரர்கள் தங்களது சத்துருக்களின் வீட்டில் மறைவாகவும், மித்திரர்களின் கிருகத்தில் வெளிப்படையாகவும், பிரவேசிப்பார்கள். நாங்கள் சொந்தக் காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்காகச் சத்துருவின் வீட்டிற்கு வந்திருக்கிறபடியால், அவனாலளிக்கப்பட்ட பூஜையை ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுக்கு இதுவே நித்திய விரதம்" என்று அந்த அத்தியாயத்தின் பின்பாகத்தில் மாறுவேஷ விருத்தாந்தம குறைந்துகொண்டே வருகிறது. மாறு வேஷம் தரித்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணமேயவர்களுக்குக் கிடையாது. அடுத்த வத்தியாயத்தில்சொல்லியிருக்கிறவிருத்தாந்தங்கள்முழுவதும் வேறுவிதமானவை.

நாமிதுவரை கண்டுவந்தவைகளான ஸ்ரீ கிருஷ்ணனது சிறந்த நடபடிக்கைகளையவருக்குத் தகுந்தவை. முந்தினவத்தியாயத்தில் எழுதப்பட்ட கிருஷ்ண சரித்திரத்திற்கும், பிந்தினவத்தியாயத்தில் காணப்படுகிற விருத்தாந்தத்திற்கும நிரம்ப வித்தியாசமிருக்கிறது. ஆகையால் அவைகளைப் பரிசீலனை செய்ய நமக்கு அதிகாரமுண்டு.

தன்னுடைய வீட்டைச் சத்துருவின் வீடென்று ஸ்ரீ கிருஷ்ணன் குறிப்பிட்டதால், ஜராஸந்தன் இவ்விதம் சொல்கிறான். "நான் எப்பொழுதாவது தங்களிடத்தில் விரோதத்தைக்காட்டியிருக்கிறேனா? தங்களுக்கு எப்பொழுதாவது அபகாரம் செய்திருக்கிறேனா? அப்

படிச் செய்ததாக எனக்கு ஞாபகமில்லை. தாங்கள் என்னைக் காரண மின்றிச் சத்துருவென்று எதற்காக நினைத்தீர்கள்? "என்று.

அதற்குப்பதிலாக ஸ்ரீ கிருஷ்ணன் வாஸ்தவத்தில் ஜராஸந்த னுடன் தங்களுக்கு என்னவிரோதமோ அதையே சொன்னார். தனக்கு நேரில் அவன் விரோதம செய்தானென்று சொல்லவில்லை. தனக்கு விரோதம் செய்தானென்று ஒருவனுடனும் அவர் விவாதம் செய்ததில்லை. எல்லோரிடமும் அவர் சமதிருஷ்டியுள்ளவர். சத்துரு மித்திரர்களைச் சமமாகப் பார்ப்பவர். ஆனால், சாமான்ய ஜனங்கள் அவரைப் பாண்டவர்களின் மித்திரன என்றும், கௌரவர்களின் சத்துருவென்றும் நினைத்தார்கள். நாம் மூலபாரதத்தைப் பரிசீ லனை செய்யச்செய்ய ஸ்ரீ கிருஷ்ணன் தர்மத்தைச் சார்ந்தவர், அதர்மத்துக்கு விரோதியென்றும், அதைத்தவிர அவருக்குச் சத்துருமித்திர பாவனையே கிடையாதென்பதையும் காண்போம். ஜராஸந்தனை, யாசிக்கும்பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணனவனை மித்திர னென்று அழைக்கவுமில்லை; அவனுடன் விவாதம் தொடுக்க வேண்டுமெனச் சத்துருவென்றழைக்கவுமில்லை. எவன் மனுஷ்ய ஜாதிக்கே சத்துருவோ, அவனே ஸ்ரீ கிருஷ்ணனுக்கும சத்துரு. ஏனென்றால் ஆதர்சபுருஷன் எல்லாப் பிராணிகளையும் தானாகவே கருதுவான். அதைத் தவிர அவனுக்கு வேறு ஆத்மஞானம் இல்லை. ஜராஸந்தன் விவரமாயவரைக்கேட்டபிறகு அவனால் தனக்குச்செய்யப் பட்ட கெடுதியைப்பற்றியொன்றும் சொல்லவில்லை. ஸாமான்ய ஜனங் களுக்கு அவன் என்ன அபகாரம் செய்தானோ அதைப்பற்றிமட் டிலும் அவனிடம் சொன்னார்:- "மகாதேவருக்குப பலியிடவேண்டு மென்று நீ அரசர்களைச்சிறைபிட்டு வைத்திருககிறாய். யுதிஷ்டிரரின் உத்திரவின் பிரகாரம் நாம் உன்னை யெதிர்த்தோம்" என்று. மேலும் அவர் அவனைநோக்கி "ஹே! ஜயத்ரதனின் புத்திரனே! உனது பாபத்தால் எங்களையும் நீபாபிகளாக ஆக்கிவிடலாம்; ஏனெனில் நாம் தர்மாசாரமுள்ளவர்கள். தர்மத்தைக் காப்பதில் பிரியமுள்ளவர்கள்" என்று உரைத்தார். இதைப் படிப்போர் இதைப்பற்றி மிகவும் யோசனை செய்வார்கள் என்று (Capital letters) எழுதக்கூடும். எவ னொருவன் சமர்த்தனுயிருந்தும் தர்மத்தைக் காத்தலிலும் பாபத்தை

யடக்குதலிலும் முயற்சிசெய்யவில்லையோ, பிறன் பாபத்தைச் செய்தால் நமக்கென்னவென்று கவலையில்லாமல் இருக்கிறானோ, அவனே பாபியாவான். ஒவ்வொருவனும் தன்னுடையன் நமட்டில் பிறன் பாபம் செய்தலைத் தடுக்கவேண்டும். ஜகத்தில் ஜன்மமெடுத்த உத்தம புருஷர்கள் இவ்விதமாகத் தர்மத்தைக் காத்தலையும், பாபத்தை விலக்குதலையும், விரதமாகக்கொள்வார்கள். சாக்யஸிம்ஹர் (புத்தர்) கிறிஸ்து முதலானவர்களுக்குத் "தர்மத்தைக் காக்கவேண்டும்" என்ற வாக்கியமே மூலஸூத்திரம். (ധര്മോ രക്ഷതി രക്ഷിതഃ) ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அதுவே விரதம். நாம் இந்த மகா வாக்கியத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளாவிடில், ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஜீவன சரிதத்தை அறிந்துகொள்ளமுடியாது. ஜராஸந்தன், கம்ஸன், சிசுபாலன், இவர்களின வதமும், மகாபாரத யுத்தத்தில் பாண்டவர்களுக்கு, ஸ்ரீ கிருஷ்ணன செய்த உதவியும், அவருடைய எல்லாக்காரியங்களும், இந்த மூலஸூத்ரதின் உதவியைக் கொண்டு நன்றுயறியத்தகுந்தவை. இதையே பூமியின் பாரத்தைக் குறைத்தல் என்று புராணக்காரர்கள் சொல்கிறார்கள். தர்மப்பிரசாரமென்பது பாபத்தை விலக்குதலேயாம். அது இரண்டுவிதமாயிருக்கும். ஒன்று வார்த்தையால்மட்டும், அதாவது தர்மசம்பந்தமான உபதேசத்தின் மூலமாய்; மற்றொன்று காரியத்தால்; அதாவது, தன்னுடைய காரியங்களையெல்லாம் தர்மம் தழைப்பதற்கு உதவியாயிருக்கும்படிசெய்து பிறகு அப்படியே நடத்திக்காட்டலால்; ஆக இரண்டு விதங்கள் உண்டு. புத்தர், ஸ்ரீ கிருஷ்ணன் இருவரும் இந்த இரண்டு விதமான காரியங்களையும அனுஷ்டித்து வந்தார்கள். ஆனால் புத்தரால் செய்யப்பட்ட தர்மப் பிரசாரம் உபதேசத்தையே முக்கியமாகக் கொண்டது. ஸ்ரீ கிருஷ்ணன் செய்த தர்மப்பிரசாரமே சிறந்தது. ஏனெனில் வார்த்தையால் உபதேசம் செய்வது சுலபம்; காரியத்தால் புத்திபுகட்டுவது கடினம். இவைகளில் பிந்தியது கிரம்பப் பயனைத் தரக்கூடியது. ஸ்ரீ கிருஷ்ணன் கேவலம் மனிதனுகமட்டுமிருந்து இந்தக்காரியங்களைச் சாதித்தல் இயலுமாவென்று விசாரணை செய்ய இப்போது நமக்கு உத்தேசமில்லை.

கம்சவதத்தைப் பற்றியும் சிசுபாலவதத்தைப்பற்றியும் நாம் சொல்லியிருக்கிறோம். ஜராஸந்தனைக்கொல்வதற்காகவே கிருஷ்ணன் புறப்பட்டுவந்தாரென்றும் சொன்னோம். ஆனால் பாபிகளை வதைத்தல் ஆதர்சபுருஷரின் காரியமா? எவர் எல்லாப் பிராணிகளிடமும் சமதிருஷ்டியை வைத்திருக்கிறாரோ, அவர் பாபிகளையும் தன்னைப் போலவே பாவித்து, அவர்களுக்கும் நன்மை செய்கிறவராக ஏன் இருக்கக்கூடாது?

அப்படியிருப்பது நலம்தான். ஆனால் பாபிகளை உயிருடன் விடுவதால் ஜகத்துக்கு நன்மையில்லை. அவர்களைக் கொல்லுவதிலே உலகத்தின் முன்னேற்றத்திற்கு உபாயம். பாபங்களைச்செய்யாதபடி பாபிகளை நிவர்ப்பித்தலும், தர்மப்பிரசாரம் செய்தலும் அந்தப்பாபிகளுடையவும் ஸர்வஜகத்தினுடையவும் மங்களத்தை ஒரே காலத்தில் சாதிக்கக்கூடும். அதைக்காட்டிலும் சிறந்த உபாயம் வேறொன்றுமில்லை. ஆதர்சபுருஷர் அதைச்செய்வது உசிதமல்லவா? புத்தரும் சைதன்யதேவரும் இவ்விதமாகவே பாபிகளை யுத்தாரணம் செய்வதில் பிரவர்த்தித்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரித்திரத்தில் இவ்விதமான தர்மங்கள் எவ்விடத்திலும் காணப்பெறுகின்றன. ஆனால் க்ஷேத்திரங்களின் பேதத்தால் பயனிலும் வேற்றுமை காணப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ணன் மானுஷ சக்தியின்மூலமாகவே எல்லாக்கார்யங்களையும் நிறைவேற்றி வந்தார். இயற்கையிலேயே முடியாத காரியம், எவ்வித முயற்சி செய்தும் சிற்சில இடங்களில் பயனைத்தருகிறதில்லை.

ஸ்ரீ கிருஷ்ணன் சிசுபாலனது நூறு குற்றங்களைப் பொறுத்தார். அந்த நிஜமான சிசுபால விருத்தாந்தம், அலௌகிகங்களான வேறு கதைகளால் மூடப்பட்டிருக்கிறது. கம்ஸனை நல்லவழியில் திருப்புவது கிருஷ்ணனுக்கு அஸாத்தியமாயிருந்தது, ஜராஸந்தன் விஷயத்திலுமவ்விதமே. அவன் விஷயத்தில், ஸ்ரீ கிருஷ்ணனுக்குக்கதைகளும் உபகதைகளும் ஏற்பட்டன. ஜராஸந்தன் கிருஷ்ணனுக்குத் தர்ம விஷயமாக ஒரு உபந்யாஸம் செய்தான் (Lecture) தர்மத்தை

யறிந்த ஒரு க்ஷத்திரியன் நிரபராதியான மனிதனுடைய தர்மம் அர்த்தம் இவைகளைக் கெடுத்துவிட்டால், அந்த க்ஷத்திரியனுக்கு இம்மையிலும் க்ஷேமக்குறைவு. பரலோகத்தில் நரகமுமே. இதிற் சந்தேகமொன்றுமில்லை. ஜராஸந்தனை நல்லவழியில் திருப்பவே முடியாது.

ஸ்ரீ கிருஷ்ணனின் சரித்திரம், அதிமானுஷமான காரியங் களுக்குப்புறம்பானது. ஜராஸந்தனைக் கொல்லவே வேண்டுமென்பது ஸ்ரீ கிருஷ்ணனுக்கு உத்தேசமில்லை. தர்மத்தைக் காத்தலும், அடை பட்டுக்கிடக்கிற நிரபராதிகளான அரசர்களை விடுவித்தலுமே அவ ருக்கு உத்தேசம். அவர் ஜராஸந்தனுக்கு அநேக புத்திமதிகளையுப தேசம செய்தபிறகு இவ்வாறு சொல்கிறார்.

"நாம் வஸுதேவனின் புதல்வனான கிருஷ்ணன். மற்ற இரு வீரர்களும் பாண்டு புத்திரர்கள். நாங்களுனனை யுத்தத்துக்கழைக்கி றோம். தக்ஷணமே யெல்லாவரசர்களையும் விட்டுவிடு. இல்லது சண்டைசெய்து யமனுலகுக்குச்செல்" என்று.

ஜராஸந்தன் அரசர்களை விட்டிருந்தால் ஸ்ரீ கிருஷ்ணன் அவனை மன்னித்திருப்பார். அவன் அவ்விதம் செய்ய உடன்படாமல் யுத்தத்தையே விரும்பினன். போர் நிகழ்ந்தது. ஜராஸந்தன் யுத்தத் தைத்தவிர வேறு வழியில் செல்லக்கூடிய நல்ல பாத்திரனல்லன்.

இரண்டாவது உத்தரம் இதுவே. புத்தரின் சரித்திரத்தில், தாழ்ந்தோரையுத்தாரணம் செய்யக்காண்கிறோம். ஸ்ரீ கிருஷ்ணனது சரித்திரத்தில் அவ்விதமான காரியத்தை நாம் காணவில்லை. புத்த ரின் விவகாரம், தர்மத்தைப் பிரசாரம் செய்வதிலிருந்தது. ஸ்ரீ கிருஷ் ணனும் தர்மப்பிரசாரம் செய்து வந்தார். ஆனல் அதுவே அவரு டைய முக்கியமான நோக்கமல்ல. ஆதர்சபுருஷரின் ஆதர்சகாரியங் களில், அது நடுவில் வந்தபயனகும்.

நாம் ஹிந்து ஜாதியிற்பிறந்தவர்களாகையால் ஹிந்து ஆதர்சம் எதுவென்று யோசித்தல்வேண்டும், சடை மரவுரிகளைத்தரித்துக்

கொண்டும், வெளுத்த விசை தாடிகளை வைத்துக்கொண்டுமிருக்கிற ரிஷிகளையே நாம் கொண்டாடுகிறோம். அவர்கள் ஆதர்சபுருஷர்களா? அவர்களையே ஆதர்சபுருஷர்களென்று நாம் கொண்டாடுவதற்குக்காரணமென்ன? என்றறியவேண்டும். பூலோகம் முழுமையிலும் ஹிந்து ஜாதியே சிறந்ததெனக்கொண்டாடின காலமும் இருந்தது. ஆதர்ச புருஷன் எவனென்பதைப்பற்றி முன்னமே விவரித்திருக்கிறோம். ஸ்ரீ ராமசந்திரர் முதலிய க்ஷத்திரியர்கள் ஆதர்சபுருஷருக்குச் சமானமானவர்களே. ஆனால் ஸ்ரீ கிருஷ்ணனே வாஸ்தவமான ஹிந்து ஆதர்சபுருஷர். அவரே மனிதத்தன்மைக்கு ஆதர்சம்.

ஏன் அப்படிச் சொல்கிறோம்? மனுஷத்தன்மையெது? அதைப்பற்றி விசாரித்தல் அவசியமானது. மனிதனுடைய இயற்கையறிவுகளெல்லாம் எவனிடம் பூர்ணமாக விகஸித்து நல்லவழிகளிற் செல்கின்றனவோ, அவற்றையுடைய அவனே ஆதர்சபுருஷன். ஸ்ரீ கிருஷ்ணன் அவ்விதமிருந்தார். வேறொருவனும் அவ்விதமிருந்திருக்கவில்லை.

ஸ்ரீ கிருஷ்ணன் ராஜ்யக்காரியங்களிலும் மற்ற விஷயங்களிலும் நிரம்பவுமறிவாளி. அவர் நீதிகள் முழுவதுமறிந்தவரென்பது பிரஸித்தம். மகா பாரதத்திலுமவரைடவ்விதமே வர்ணித்திருக்கிறது. யுதிஷ்டிரராவது உக்ரஸேநராவது அவருடைய உத்திரவுக்கு விரோதமாகப் பெரிய ராஜ்யகாரியமொன்றும் நடத்தினதில்லை, ஸ்ரீ கிருஷ்ணன் தனக்கென்று ராஜ்யத்தை விரும்பாமல், ஸர்வப்பிரஜைகளுக்கும் எல்லாவிதமான மங்களங்களையுஞ் சாதித்து வந்தார். ஜராஸந்தனால் அடைபட்டவரசர்களையவர் விடுவித்தது, ஓர் உதாஹரணம். ஸ்ரீ கிருஷ்ணன் தானாக யுத்தத்துக்கு முயற்சி செய்கிறவரில்லை. ஆனால் தர்மத்தை ஸ்தாபிப்பதற்காக யுத்தம் நிகழ்ந்தால் அதிலிருந்து அவர் பின்வாங்கினவருமில்லை. யுத்தங்களில் அவர் தோற்றவருமில்லை.

எல்லாக்குணங்களிலும் நிறைவு பெறாத மனிதன், ஒரு நல்ல காரியத்தில் தன்னுயிரைக் கொடுக்க முன்வரமாட்டான். ஒரு முக்கியமானகாரியம் ஏற்பட்டால் மற்றவர்கள் தங்களுடைய சொந்தக் காரியங்களுக்குப் பாதகமில்லாமல், அந்த முக்கியமான காரியத்தை

யும் கவனிப்பார்கள். சரித்திர பேதத்தாலும், நிலைமையின் மாறு பாட்டினாலும், பயிற்சியின் வித்தியாஸத்தாலும், வெவ்வேறு காரியங்களையும் மனிதன் செய்யத்தகுந்தவன் ஆவான். ஆதர்சபுருஷனோ வென்றால் எல்லாக்காரியங்களிலும் ஆதர்சமான அதிகாரி.

ஸ்ரீகிருஷ்ணன் குடும்ப வாழ்க்கையிலிருந்துகொண்டு கிருக கிருத்யங்களைக் கவனிப்பவராயும், ராஜநீதிகளைத் தெரிந்தவராயும், யுத்தத்தில் வல்லவராயும், குற்றவாளிகளைத் தண்டிக்கத்தகுந்தவ ராயும், தவம்புரிபவராயும், தர்மத்தைப் பிரசாரம் செய்பவராயும் இருந்தார். அவர் மனிதர்க்குரியகாரியங்கள் எல்லாவற்றிலும் நிறைவு பெற்ற ஆதர்சபுருஷர். ஆதர்சபுருஷனும் ஆதர்ச அரசனும் ஜாலந்தன் முதலான துஷ்டர்களைக் கொல்லுதலானது அவசியமாய் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

ஹிந்து தர்மத்தின் ஆதர்சபுருஷன் எல்லாக்காரியங்களையும் தடையின்றிச் சாதிக்கக்கூடியவன். ஆனால் தற்கால ஹிந்துக்கள் ஒரு காரியத்திற்கும் உதவாதவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய சித்தம் கெட்டுவிட்டதால், ப்ராசீன ஆதர்சம் இன்னதென்பது அவர்களுக்கு மறந்து போயிற்று. ப்ராசீன ஹிந்துவரசர்கள் எல்லாக் குணங்களிலும் நிறைவு பெற்றிருந்தார்களென்பதே அவ்விதமான ஆதர்சம் நமது தேசத்திலிருந்தது என்பதற்குப் பிரமாணம். தற்காலத்திய ஹிந்துக்களோ வென்றால், ஜயதேவரின் கீதகோவிந்தம் என்ற காவ்யத்தில் வர்ணிக்கப்பெற்ற கிருஷ்ணனையே போற்றுகிறார்கள். மகாபாரதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற கிருஷ்ணனைப் பற்றி நினைப்பதில்லை. அவ்விதமான ஆதர்சபுருஷனை நாம் எப்போதும் ஹிருதயத்தில் தியானித்துக்கொண்டிருக்கவேண்டும் என்ற விஷயத்தில் இந்தக் கிருஷ்ண சரித்திர விமர்சம் கொஞ்சம் அநுகூலம் செய்யுமென்று நாம் நம்புகிறோம்.

8-வது அதிகாரம்

பீமனுக்கும் ஜராஸந்தனுக்கும் யுத்தம்.

ஸ்ரீகிருஷ்ணனை மகாபாரதத்தில் ஓரிடத்திலும் விஷ்ணுவென்று குறிப்பிட்டதாக அவருடைய சரித்திரத்திற் காணவில்லை. யாருமவரை விஷ்ணுவென்றழைக்கவுமில்லை. விஷ்ணுவென்ற நினைப்புடன் அவருடன் ஒருவரும் சம்பாஷிக்கவுமில்லை. அவர் விஷ்ணுவின் அவதாரமாயிருந்தாலென்ன? இல்லாவிட்டாலென்ன? கிருஷ்ண சரித்திரத்தின மர்மம், மனுஷ்ய சக்தியைக்கொண்டே எல்லாக் காரியங்களையும் சாதித்தலென்று நாம் அடிக்கடி தெரிவித்திருக்கிறோம்.

ஆனால் இதற்குப் பிறகு மகாபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணனை விஷ்ணு வென்றழைத்தலையும், விஷ்ணு வென்ற பாவனையாற் பரிசயம் செய்தலையும், அநேக விடங்களில் நாம் காண்கிறோம்; அவரை விஷ்ணு வென்று பலர் பூசித்தலையும் பார்க்கிறோம்; சிற்சில சமயங்களில் வைஷ்ணவ சக்தியாலவர் அற்புதமான காரியங்களைச்செய்ததையும் நாம் காண்கிறோம். இவ்விடத்தில் மட்டும அவ்விதம் பார்க்கிறோம். இவையிரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமாகத் தோன்றும்லல்லவா?

எந்தச்சமயத்தில் தைவத்தன்மையைக்காட்ட வேண்டிய ஆவசியகம் அவருக்கிருந்ததோ, அக்காலத்தில் கிருஷ்ணன் தைவத்தன்மையை வெளிப்படுத்தினர்; ஆவசிகமில்லாதவிடங்களில் மனிதத்தன்மையாலேயே காரியங்களை நிறைவேற்றியிருக்கிறரென்று சொல்லுகிறர்கள். இதுவிஷயமும் ஆராயத்தக்கது.

பிறகு, ஸ்ரீ கிருஷ்ணனும் பீமார்ஜுனர்களும் ஜராஸந்தனைத் தேர்மீதேறச்செய்து வெளியிற்கொணர்ந்தார்கள். அவர்கள் தைவிக சக்தியைக்காட்டியிருந்தால் அவர்களிடம் தேவலோகத்துத் தேர்கள் குறைவில்லாமல் வந்து சேர்ந்திருக்கும். ஸ்ரீ கிருஷ்ணன் வைநதேயனை ஸ்மரித்தவுடன் கெருடன்வந்து தோன்றி ரதத்தைச் சுமந்திருப்பான் (தூக்கியிருப்பான்) ஆனல் கெருடன் ஒருகாரியத்தையும்

அங்கே செய்ததாகக் காணவில்லை. ஜராஸந்தனை வதம் செய்த பொழுது தைவிக சக்தியின் பிரயோசனமொன்றுமிருந்திருக்க வில்லையே. ஆனால் தேரைச்சுமக்கவேண்டியதுமட்டுமாவசியகமா யிருந்தது போலும்?.

இந்த யுத்தத்துக்குமுன் ஒரு விருத்தாந்தம் காணப்படுகிறது. ஜராஸந்தன் யுத்தம செய்வதாகத் தீர்மானம் செய்தபிறகு, ஸ்ரீ கிருஷ்ணன் ஜராஸந்தனிடம், "ஹே! அரசனே! எங்கள் மூவர்களில் எவருடன் உனக்குச் சண்டைசெய்ய இஷ்டம்" என்று கேட்டார். அவன் பீமசேனனுடன் யுத்தம் செய்ய இஷ்டம் என்றான். ஜராஸந் தனை யாதவர்களால் வதைக்கமுடியாதென்று கருதி ஸ்ரீ கிருஷ்ணன் பிர்மதேவரின் உத்தாவின் பிரகாரம் அவனைக் கொல்லப் புறப்பட்டார் என்று பாரதக் கிரந்தத்தின் பின் தொகுதியில், இந்த விருத்தாந் தத்தை யெழுதியிருக்கிற இதழ்களுக்கு இரண்டு இதழ்களுக்கு முன் எழுதியிருக்கிறது. மூலக்கிரந்தத்தில் பிரம்மாவினது ஆக்ஞை காணக்கிடைக்கவில்லை. பிறகேற்பட்ட கிரந்தங்களில்மட்டும் காணப் படுகிறது.

மூலபாரதத்திற்குப்பிறகு இயற்றப்பட்ட கிரந்தங்களிற் காணப் படுகின்ற கற்பனையே யிது எனறு இதை வாசிப்போர் அவசியம் நம்புவார்கள். பாரதத்தின் இரண்டாவது தொகுதிக்காரர் எப் பொழுது எழுதத் தொடங்கினரோ அப்பொழுது முதல்தான் சில கற்பனை யேற்பட்டிருக்கவேண்டும். இதிற் சந்தேகமில்லை. சிறையிலி ருந்து விடுபட்டவரசர்கள் உபகாரஸ்மரண பூர்வமாக ஸ்ரீ கிருஷ்ணனை ஸ்தோத்திரம் செய்யும்போது, அவர்கள் அவரை விஷ்ணுவின் வேறு பெயர்களைக்கொண்டாவது அழைக்கவில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் மனித னுற் செய்யமுடியாத ஒரு காரியத்தைச் செய்தால், அக்காரியத்தை தைவத்தாலன்றி மனிதனுற் செய்யவியலாதென்று நினைக்கிறார்கள். ஜராஸந்தனை யவர் வதைக்கவில்லை. ஜனங்களுக்கெதிரில் பீமசேனனே யவனைக் கொன்றான். அவனைக் கொல்லும்படி தூண்டினவர் ஸ்ரீ கிருஷ்ணனே. சிறையிலடைபட்டுக் கிடந்த வரசர்களுக்கு இது தெரி யாது. ஆகையால் அவ்வரசர்கள் கிருஷ்ணனை விஷ்ணுவென்று ஸ்தோத்திரம் செய்தார்களெனச் சொல்வது பொருந்தாது.